
www.tamilarangam.net


# எரிமலை

ஒக்ரோபர் 2001




'சுதந்திர வேட்கை'






இருபதாம் நூற்றாண்டின் இஸங்கள்

தமிழீழ பெண்கள் தினம்



ஒக்ரோபர் 10



## சந்திரிகா அம்மையாருக்கு தொல்லை ஏற்படுத்திய தொலைக்காட்சிப் பேட்டிகள்!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# அக்கறைப்பூக்கள்

எரிமலைக்கு வணக்கம்.

ஜூன் மாத எரிமலை கிடைக்கப்பெற்றேன். தமிழ் மக்களின் உள்ளக்குமுறல்களையும், வீரகாவியங்களையும் மற்றும் பல அம்சங்களையும் தாங்கி வரும் எரிமலை, புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்பதை இலட்சியக் கனவாகக் கொண்டு, இரவு பகல் பாராமல் சிங்களப் பேரினவாதத்தோடு போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வீரச்செயல்களை எடுத்துக்காட்டி, உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் தமிழ்த்தேசிய இனமக்களிடையே தேசிய இன எழுச்சியையும் விடுதலை வேட்கையையும் தூண்டும் பலம் பொருந்திய பேராயுதமாக எரிமலை விளங்கி வருகிறது.

நா. ஞானசேகரன்
திருத்துறைப்பூண்டி.
தமிழ்நாடு.

எரிமலைக்கு வணக்கம்.

புலிகளின் புகழை உலகமெங்கும் பரப்பும் உனது வெடிப்புகள் தொடரட்டும். பெருந்தகையீர், நான் இந்த எரிமலை புத்தகத்தை திராவிடர் கழகத்தின் நூலகத்தில் கண்டேன். ஒவ்வொரு வரியும் என் மனத்தினுள் எரிமலையை வெடிக்கச் செய்து விட்டது. உண்மையில் வீரம் மிக்க தமிழர்கள் ஈழத்தில்தான் உள்ளனர் என்பதை மிகத் தெளிவாகக் காட்டுகின்றது.

தீ செய வீரபாண்டியன்.
தமிழ்நாடு.

எரிமலைக்கு வணக்கம்.

"பிரபாகரனின் போர் வியூகத்தில் அக்கினிச் சுவாலையும் எரிந்து போனது" என்னும் கட்டுரையில் எதிரி புதைத்த மிதி வெடிகளில் அவனே செத்தது மிகவும் சிறப்பான போர்த்தந்திரம். ஜூலை மாத இதழை நண்பர்கள் அனைவரிடமும் காட்டினேன். மிக மிக ஆவலுடன் அதைப் படித்து அண்ணன் பிரபாகரனின் போர்த் தந்திரத்தை வியந்து மகிழ்ந்தார்கள்.

க. மணிவர்மன்.
நாமக்கல் மாவட்டம்
தமிழ்நாடு.

வணக்கம்.

நான் கடந்த 92-வது வருடத்தில் இருந்து தங்களின் எரிமலை இதழை படித்து வருகின்றேன். தமிழனுக்கு தனி நாடு சொந்த வீடு அதை தமிழனுக்கு சீக்கிரமாய் அமைத்துக் கொடு என்ற பாவேந்தனின் வீர முழக்கத்திற்கிணங்க, தமிழுக்கும் தமிழின விடுதலைக்கும் பாடுபடும் நம் தமிழீழ விடுதலைப் புலிகளைக் கண்டு மகிழ்ச்சி கொள்கின்றேன். தமிழன் சுதந்திரத்திற்காக பாடுபடுவதில் யாருக்கும் சளைத்தவனில்லை எனக் காட்டும் தமிழ் வேங்கை திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் நானும் ஒருவனாய் இல்லாமல் இருக்கின்றேனே என மனவருத்தம் அடைகிறேன்.

ஆ. தர்மராஜன்,
தஞ்சாவூர்,
தமிழ்நாடு.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உள்ளே...

## கட்டுரைகள்

சந்திரிகா அம்மையாருக்கு தொல்லை ஏற்படுத்திய... பக்கம் - 08

தமிழீழ மண்ணில் இருந்து.... பக்கம் - 12

மேற்குலகப் பெண்ணியம்..... பக்கம் - 16

நீதி நிர்வாகத் துறையின் எட்டாண்டுகால செயற்பாடுகள்... பக்கம் - 30

தமிழீழத்தின் அரங்கு நெகிழ்ச்சி.... பக்கம் - 34

தாயகம் காப்போம் பக்கம் - 36

## அணையாத தீபம்

கரும்புலி. லெப். கேணல் போர்க் பக்கம் - 48

## கவிதை

வேட்டைக்காரர் வந்த போதும்..... -புதுவை இரத்தினதுரை பக்கம் - 07

அறியப் படாதவர் மீது ஒரு அஞ்சலிப் பாடல் -வியாசன்.... பக்கம் - 10

தரணி போற்றும் -நுணாவிலூரான்..... பக்கம் - 28

பலஸ்தீனக் கவிதைகள்.... பக்கம் - 38

## சிறுகதை

வெறுப்புக் கோலங்கள் பக்கம் - 20

மீட்பர்களின் வருகைக்காய் -முல்லைக்கோணேஸ் பக்கம் - 28

சிறைக் காலம் -சத்துருக்கன் பக்கம் - 38

## தொகுப்பு


கண்கள் கூறும் வார்த்தைகள் பக்கம் - 41

பதிவுகள்...... பக்கம் - 42

நினைவுக்குறிப்பு.... பக்கம் - 46


மீள்பார்வை பக்கம் - 47

04 25 வருட ஆயுதப்போர்....



26 'சுதந்திர வேட்கை'






18 இருபதாம் நூற்றாண்டின் இஸங்கள்...





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பெண்ணினம் புரட்சி சக்தியாக எழுச்சிகொண்டு நிற்கிறது

"நாம் ஒடுக்கப்பட்டுவரும் ஒரு மக்கள் இனம். அந்நியனின் அடக்குமுறையால் நாம் அழிக்கப்பட்டு வந்தபோதும் எமக்குள்ளே, எமது வாழ்வில் நாம் எம்மவர்களை மோசமான முறையில் அடக்கியொடுக்கி வருகிறோம். இப்படியாக எம்மத்தியில் நிலவிவரும் ஒரு ஒடுக்குமுறை வடிவம்தான் பெண் ஒடுக்குமுறை. பழைமைவாதத்திலும் மூடநம்பிக்கைகளிலும் ஊறிப்போன எமது சமூக அமைப்பில் நீண்ட நெடுங்காலமாக பெண்ணினம் ஒடுக்கப்பட்டு வருகிறது. எமது வேதாந்தங்களும். மதச் சித்தாந்தங்களும், மனுநீதி சாஸ்திரங்களும் அந்தக் காலம் தொட்டே பெண் அடிமைத்துவத்தை நியாயப்படுத்தி வந்திருக்கின்றன. ஆணாதிக்கம், சாதியம், சீதனம் என்ற பல்வேறு பரிமாணங்களில் இந்த ஒடுக்குமுறையானது பெண்களின் வாழ்க்கையை ஊடுருவி நிற்கிறது; அவர்களது வாழ்க்கையைச் சிதைத்து வருகிறது.

எமது சமூகத்தின் சனத்தொகையின் பெரும்பான்மை இடத்தை வகிக்கும் பெண்கள், தொடர்ந்தும் அடிமைத்தனத்தில் வாழ்ந்து வந்தால் எமது விடுதலைப் போராட்டத்தை ஒரு தேசியப் போராட்டமாக முன்னெடுப்பது கடினம். இதனை உணர்ந்துதான் எமது இயக்கம் பெண் விடுதலையை முதன்மைப்படுத்தியது. பெண்களை அரசியல்மயப்படுத்தி போராட்டத்திற்கு அவர்களை அணிதிரட்டியது. இவ்வகையில் நாம் தமிழீழ பெண் சமூகம் மத்தியில் ஒரு பெரிய புரட்சியை நிகழ்த்தியிருக்கின்றோம். தமிழர் வரலாற்றிலேயே நடைபெறாத புரட்சி ஒன்று தமிழீழத்தில் நடைபெற்றிருக்கிறது"

தமிழீழத் தேசியத் தலைவர்:


**மேதகு.வே.பிரபாகரன்** அவர்கள்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தலைவாசல்





கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

★

இருபதாம் ஆண்டு

ஒக்ரோபர்

2001

திருவள்ளுவர் ஆண்டு 2032

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★

எரிமலை

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு



C/O T.C.C-France,

341, Rue des Pyrenees,

75020 Paris.

Tel: 01 - 43 58 11 42

Fax: 01 - 43 58 11 91

e.mail:editor@erimalai.com


## நாங்கள் சனநாயகத்தின் பக்கத்தில் நிற்கின்றோம்!

பயங்கரவாதம் பற்றிய சர்வதேச விவாதம் மேலும் குறுகலான பின் நோக்கிச் செல்லும் பாதையில் உலக சமூகத்தை இட்டுச்செல்ல விழைகின்றது. சனநாயகம் காட்டுகின்ற செழுமையான பாதையில் நவீன நாகரீக சமூகத்தைத் தாம் உருவாக்குவதாக பெருமை பேசிவந்த மேற் குலக நாடுகள் அதிர்ச்சியூட்டும் வகையில் ஒடுக்குமுறைக்கு எதிரான மக்கள் இனங்களின் விருப்புக்களை (சனநாயகம் என வாசிக்க) நிரா கரிக்கும் பாதையை தூக்கிப்பிடிக்கின்றன. அமெரிக்காவின் பிரதான நகர் மீது நடாத்தப்பட்ட பயங்கரவாதத்திற்கு எதிரான பதிலடி நடவடிக்கைகள் மனிதகுல மேம்பாட்டிற்கு எதிரான திசையை தனது பாதையாக தேர்ந்தெடுத்திருப்பது தமிழீழ மக்களினை அதிர்ச்சிக்குட்படுத்துவது இயல்பானது. ஏனெனில், இந்த புதிய பாதையின் நெருக்கடிகளும், தடைகளும் தமிழீழ மக்களின் அரசியல் தேர்வினை அச்சுறுத்துகின்றது. அவர்களின் மீதான இன அழிப்புப் போரிற்கு வலுக் கொடுக்கின்றது.

சிங்களஅரசு இந்த சூழலினை அறுவடை செய்யும் ஆவலை தனது ஒவ்வொரு செயற்பாடுகளிலும் வெளிக்காட்டுகின்றது. உலகின் முன்னணி செய்தி ஏடுகளுக்கு வாசகர் கடிதங்களை சந்திரிகா அனுப்பி வருவதும், கதிர்காமர் தலைமையில் சிங்கள அரசகுழு ஐரோப்பிய சமூக நாடுகளில் பரப்புரையில் ஈடுபடுவதும் சிங்களத்தின் அவசரத்தை வெளிக்காட்டு கின்றது.

ஆயினும், அடிப்படையில் மேற்குலகின் மறுப்பு நிலைப்பாடும், புதிய சூச்சலகளும் அரசியல்- இராஜதந்திர பொருளாதார மற்றும் இராணுவ கோணத்தில் இடம்பெறும் உலகளாவிய யதார்த்தங்களுக்கும், நலன்சார் முரண்பாடுகளுக்கும் இடையே நின்று பிடிக்குமா? உலக வல்லரசுகள், பிராந்திய வல்லரசுகள் மற்றும் எல்லைகடந்த பொருளாதார சக்திகள் என்பன போன்ற பல்வேறு சக்திகள் பல்வேறு தளங்களில் இந்தச் சிக்கலை கையாள்வதால் இதன் எதிர்காலம் பலத்த கேள்விக்குரியது.

மேலும், தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தும் புதிய வரைவிலக்கணங்கள் வரலாற்று இயக்கப் போக்கிற்கு எதிரானது. விஞ்ஞான பூர்வமற்றது. ஒடுக்கப்பட்ட மக்கள் ஆயுதம் தரித்துப் போராடி தமது விடுதலையை பெறும் நியாயப்பாடுகளே மாற்றங்களைப் உலகிற்கு ஏற்படுத்தித் தந்தது. பாசிசத்தை வென்ற நவீன பிரான்சின் தந்தை சார்ள் டீ கோள் முதல் நெல்சன் மண்டேலா வரை மாற்றங்களை பூமிக்குக் கொண்டுவந்த தலைவர்களாகப் பார்க்கப்பட்டவர்கள். அனை வரையுமே பயங்கரவாதிகள் என இன்றைய தடைச்சட்டங்களால் வரை விலக்கணப்படுத்தப்படும் தன்மை நிலவுகின்றது. இதனை தமிழீழ மக்கள் நுணுக்கமாக ஆராய்ந்திடல் வேண்டும். மேற்குலகின் உள்நாட்டுப் பீதியுணர்வு மற்றும் கரிசனைகளை மதிக்கும் அதேவேளையில், தமிழீழ மக்களின் தேசிய விடுதலைக்கான முடிவில் உறுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மேற்குலகின் குறுகிய வரைவிலக்கணங்களில் சிக்குண்டு, முரண்பட்டு தமிழீழ மக்களின் வாழ்வுக்கான போரை சிதையவிடாது பாதுகாத்திடும் கடமைப்பாடுகூட இன்று பெரிதாய் எழுந்துள்ளது.

தமிழீழ மக்களின் சனநாயக விருப்புக்கு மதிப்புக் கொடுக்குமாறு மேற்குலகை கேட்பதும், இனப்படுகொலைக்கு எதிராக ஆயுதம் தரித்துப் போராடும் உரிமையை தமிழீழ மக்கள் கொண்டுள்ளார்கள் என்பதை வலியுறுத்துவதும் இன்றைய உலகளாவிய தமிழ் மக்களின் கடமையா கின்றது. மறுபுறம், விடுதலைப் போராட்டத்தை துரிதப்படுத்தி தமிழீழ தேசத்திற்குரிய இராஜரீக அந்தஸ்த்தை உருவாக்குவது தமிழர்களின் நிகழ்ச்சித்திட்டத்தில் முக்கிய இடத்தைப் பெறல் வேண்டும். நாங்கள் சனநாயகத்தின் பக்கத்திலும், வரலாற்றின் பக்கத்திலும் நிற்கின்றோம்!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 25 வருட ஆயுதப்போர் தடங்க

புதிதாகப்பிறந்த இந்த நூற்றாண்டில் உலகின் தலைசிறந்த கெரில்லாப் போரியல்வாதியாக தலைவர் பிரபாகரன் கணிக்கப்படுன்கிறார். விடுதலைக்கு எதிராக எழுந்த பெருமலைகளைக் கரைத்து போராட்ட வெள்ளத்தை இலக்கு நோக்கி பிர வகிக்கச் செய்யும் விடுதலைப் புலிகளின் ஆதார விசையாக இவரே இயங்குகின்றார். அதிசயிக்கத்தக்க தனது ஆற்றலால் விடுதலைப் போராட்டத்தின் தலைமைத்துவமாக, விடுதலைப் புலிகள் அமைப்பை 25 வருடம் வழிநடத்தி உலகின் முதன்மையான கெரில்லாப் போரமைப்பாக விடுதலைப் புலிகளை உருவாக்கியதன் மூலம் இன்று உலகின் கவனம் தமிழீழத்தை நோக்கி திரும்பியுள்ளது. அடையப்பெற்ற இந்த உயர் நிலையால் இன்று தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் சர்வதேச அரசியலில் அலட்சியம் செய்யவியலாத பிரச்சினையாக பிரசன்னமாகியுள்ளது. வெல்லப்பட முடியாத ஒரு சக்தியாக தமிழரின் போராட்ட அமைப்பு விளங்கப்பட்டிருக்கின்றது. இத்தகையதொரு பரிமாணத்தில் நின்றுகொண்டு தமிழரின் உரிமைப்போராட்டத்தின் தொடக்கம் பற்றி, ஆயுதப் போராட்டத்திற்கு வரலாறு எழுப்பிய தேவைபற்றி, ஆயுதப்போராட்டத்தை எதிர்கொண்டு நின்ற சவால்களை எவ்வாறு எமது தலைமைத் துவம் சந்தித்தது என்பது பற்றி, மீண்டெழுந்த இப்போராட்டம் அடைந்த போரியல் ரீதியான வளர்ச்சி பற்றி, அரசியல் இராணுவக் கண்ணோட்டத்துடன் மீள சிந்த னைக்குட்படுத்துவது, போராட்டம் கடக்கவேண்டியுள்ள காலத்திற்கு ஒரு வீச்சை யும், உத்வேகத்தையும், புரிதலையும் தருமென்ற வகையில் அதை நோக்காகக் கொண்டு இக்கட்டுரை அமைவது பொருத்தமுடையதாக இருக்குமென நம்பலாம்.

1796இல் பிரித்தானியரால் வன்னி அரசு வெற்றிகொள்ளப்பட்டதோடு இத்தீவில் தமிழரின் ஆதிபத்தியம் அடியோடு அற்றுப்போனது. பின் இத்தீவு ஒரே நாடாக்கப்பட்டதும், அப்போதைய பிரித்தானிய சாம்ராஜ்ஜியத்தின் அரசியல் நலன்களுக்கான தந்திரோபாயத் திற்கமைய இலங்கையின் அரசியல் அதிகார மிக்கவர்களாக பெரும்பான்மையினரை உரு வாக்கியதும் தமிழரின் அரசியல் உரிமை ஈவிரக்கமற்று நசுக்கப்பட்டது. இந்நிலை 1931 டொனமூர் அரசியல் திட்டத்திலிருந்து உரு வானது. அன்றிலிருந்து தமிழர்கள் தமது அரசியல் உரிமைகோரி எழுச்சியுறத் தொடங் கினர்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் முடிவு புதிய சர்வதேச அரசியல் ஒழுங்கை நிர்ண யித்ததுடன், 1948இல் மேற்கத்தைய பூகோள அரசியல் நலன்களுக்கேற்ப இலங்கைத்தீவு இரு தேசிய இனம், ஒரு நாடாகவே சுதந்திரம் அடைந்தது. அத்துடன், அதன் ஆட்சியதி காரம் சிங்களப் பெரும்பான்மை இனத்தவரி டம் ஒப்படைக்கப்படுவதற்கான ஒரு அரசியல் அமைப்பையும் பிரித்தானியா உருவாக்கி யிருந்தது. அன்றிலிருந்து சிங்களதேசத்தின் தமிழின ஒடுக்குமுறை கட்டற்றவாறு வலுப் பெறத் தொடங்கியது. இந்த வன்மம் தமிழரின் உரிமைப்போராட்டத்தைத் தொடக்கவும், தொடரவும் செய்தது.

தமிழரின் அரசியல் உரிமையைப் பெற் றுக்கொள்ளும் தமிழ் அரசியல் தலைமைத்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துவங்களின் முயற்சியென்பது ஆரம்பத்தில் அரசியல் கோரிக்கைகளாகவே எழுந்தன. முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் கேள்விக் கிடமின்றி தட்டிக்கழிக்கப்பட்டபோது, கோரிக் கைகள் விண்ணப்பங்களாயின. விண்ணப் பங்களோ வெற்றுக் கடதாசிகளாக சிங்களத் தலைமைத்துவங்களால் வீசியெறியப்பட்ட தலைகுனிவோடு அவை நீதிமன்ற முறை யீடுகளாக முன்னேற்றம் கண்டன. அதிகாரம் சிங்களப் பெரும்பான்மை இனத்திடம் இருக் கும்போது அதற்கெதிரான முறையீடுகள் தள்ளுபடியாவதைத் தவிர வேறு எந்த நீதி யைத் தந்துவிடப்போகிறது. முறையீடுகள் பயனற்றுப்போனது. பாராளுமன்ற விவாதத் திற் குறித்த தமிழ்த் தலைமைகள், பிரச்சி னையைப் பிரபல்யப்படுத்தவும், பகிரங்கப் படுத்தவும்அதன்மூலம் அரசுக்கு ஓர் அமுத் தத்தைப் பிரயோகிக்கவும் முயன்றபோது அவை ஒரு பொருட்டின்றி அலட்சியப்படுத் தப்பட்டன.

சிங்களத்தின் ஒவ்வொரு புறக்கணிப்பும் தோற்கடிப்பும் தொடரத்தொடர தமிழர்களின் குரல்வளை மேலும் நசுக்கப்படலாயிற்று எனவே உரிமைபெறும் அவர்களின் முயற்சி யும் மேலும் மேலும் வன்மையடந்து வந்தது. 1956 வரை நீட்சிகண்ட இப்போக்கு ஈற்றில் தமிழர்களை அரசுக்கெதிரான சாத்வீகப் போராட்டத்திற்குத் தள்ளியது. மக்கள் வீதி யில் இறங்கினர். 1956இல் காலிமுகத்திடல் போராட்டத்திலிருந்து, 1961இல் வடகிழக்குத் தழுவி பெருந்திரளாய் திரண்டெழுந்து சத்தி யாக்கிரகமிருந்தது வரை சாத்வீகப் போராட் டம் வளர்ச்சியுற்றது. ஆனால், ஆத்ம நேய மற்ற அராஜகவாதிகளால் சாத்வீகம் புரிந்து கொள்ளப்படுவது சாத்தியமற்றுப்போனது. சாத்வீகப்போராட்டவாதிகளை, சிங்களக் காடையர்களிலிருந்து இராணுவம்வரை ஏவி விட்டு, மலசல பைகள் எறிவதிலிருந்து துப் பாக்கிச்சூடு வரையிலான தாக்குதல் நடத்த அரசு பணிப்பு வழங்கிப் பார்த்திருந்தது.

போராட்டம் முனைப்புற்றபோதெல்லாம் நாடு தழுவிய ரீதியில் கலவரம் என்ற பெயரில் தமிழின அழிப்பை சிங்கள அரசு கட்ட விழ்த்துவிட்டது. தமிழ் மக்கள் ஈவிரக்கமற்ற வாறு கொன்றொழிக்கப்பட்டனர். தமிழர்களி டம் எதிர்க்கும் உணர்வு மேலும் வலுப் பெற்றது. இத்தகைய சூழல் சமரச முயற்சி களைத் தோற்றுவித்தது. ஆனால், அந்த சமரச முயற்சிகள் முரண் நிலையைத் தணிவித்து, சமாதானத்தை நோக்கி நகர வில்லை. சிங்கள இனவாத அரசுகள் அதை நோக்கமாகக்கொண்டு அதில் இறங்க வில்லை. மாறாக, தமிழரின் உணர்ச்சிக் கொந்தளிப்பை தணிவித்து, திசை திருப்பி போராட்ட கொதிநிலையை அடக்குவதற் காகவே அவற்றைப் பயன்படுத்திக்கொண் டன. 1961இல் சத்தியாக்கிரகப் போராட்டம் இராணுவத்தினரைக்கொண்டு வன்மமாக அடக்கப்பட்டதோடு உரிமைப் போராட்டத்தில் சாத்வீக வழிமுறை நெருக்கடிக்குள்ளாக்கப் பட்டது. அவ்வாறே 1965 டட்லி செல்வா உடன்படிக்கையும், வெள்ளை அறிக்கையான துடன், சமரசமுயற்சி நெருக்கடிக்குள்ளாக் கப்பட்டுவிட்டது.

1970ஆம் ஆண்டு கல்வி தரப்படுத்தலும், 72இல் முதலாம் குடியரசு அரசியல் யாப்பும் கொண்டு வரப்பட்டதுடன் சிங்களப் பேரின வாதம் அரசியலமைப்பு ரீதியாக சட்ட அங் கீகாரத்தையும், பாதுகாப்பையும் பெற்றது. பேரினவாதம் ஸ்தாபனமயப்படுத்தப்பட்டது, தமிழர்கள் இரண்டாந்தர பிரஜைகளாக்கப் பட்டனர். தமிழர்கள் அரசியல் நீரோட்டத்தில் தமது உரிமைகளைப் பெறுவதற்காக முன் னேறும் அனைத்துக் கதவுகளும் அடைக்கப் பட்டுவிட்டன. இழப்பதற்கு ஏதுமற்றவாறு தமது அனைத்து அரசியல் உரிமைகளையும் ஏறத்தாழ இழந்தனர். அவர்களது தனிநபர் உயிர்வாழ் உரிமையுங்கூட இனவன்முறை யாலும், சிங்களக்குடியேற்றங்களாலும் பறி க்கப்பட்டது. சிங்களப்பேரினவாதத்தின் இத் தகைய இயக்கத்திற்கும், தொடர்ச்சிக்கும் ஒரு காத்திரமான பின்புலமுண்டு. அதுவே தமிழர் களின் கவனத்திற்கும், விழிப்பிற்குமுரியது.

# ...லும் தடையுடைப்பும்



**கு.கவியழகன்**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net








## பேரினவாத முன்னெடுப்பின் பகைப்புலம்

இலங்கைத்தீவில் தமிழ் சிங்களமென்ற இரு இனங்கள் தனித்துவமான தோற்றத் திலிருந்து சிங்கள தேசத்தில் தமிழர் பற்றிய அச்சமும் பகைமையும் இருந்தே வந்துள்ளது. சிங்கள மக்கள் மத்தியில் மனப்படிமமாக இருந்த இந்த உணர்வை நன்கறிந்த சிங்கள அரசியல்வாதிகள் இதைத் தூண்டுவதன் மூலமும், வளர்ப்பதன் மூலமும் தலைமைத் துவ அந்தஸ்தைப் பெறமுடியுமென்ற யதார்த் தத்தை உணர்ந்தனர்.

எனவே இனத்துவேச அரசியலைக் கையி லெடுப்பதன் மூலம் அரசியல் செல்வாக்கைப் பெறவும், தலைமைத்துவத்தை வகிக்கவும் முடியுமென்ற அசையாத நம்பிக்கையுடன் அதில் தீவிரமாகக் குதித்தனர். இதனை முதலில் சரியாக இனங்கண்டு பின்பற்றியது. ஐ.தே.க.தான் ஆரம்பத்தில் முற்போக்கு கதைத்தபோதும் சி.சு.க ஓரிரு ஆண்டுகால யதார்த்த நிலைமையைப் புரிந்துகொண்டு இனத்துவேச அரசியலைக் கையிலெடுத் துக்கொண்டது. 1965இல் இருந்து சிங்கள இடதுசாரிக் கட்சிகளும் இதிலிருந்து விலகி யிருக்க விரும்பவில்லை. அரசியல் செல் வாக்கைப் பெறும் சூத்திரம் அவர்களை விலகியிருக்க விடவில்லை.

எனவே சிங்கள தேசத்தின் கட்சி அரசியல் என்பது தமிழ் இனத்துவேச அரசியலாக மாறி யது. அதன் போட்டியிலும், தீவிரத்திலும், வெற்றியிலுமே அரசியல் செல்வாக்கு தீர்மா னிக்கப்பட்டது. ஆட்சிப்பீடமும் தீர்மானிக் கப்பட்டது. இதுவே தமிழர் ஈவிரக்கமற்று மேலும் மேலும் நசுக்கப்பட்டதற்கும், பௌத்த சிங்கள எதேச்சதிகாரம் நிறுவப்பட்டதற்கு மான புறநிலையாகும். இலங்கையின் இந்த அரசியல் போக்கில் தமிழர் தமது உரிமையை அரசியல் நீரோட்டத்தில் வென்றெடுப்பதற் கான சாத்தியம் அற்றுப்போனது. இந்நி லையே தமிழர்களிடமிருந்து தனிநாட்டுக் கோரிக்கையும், வன்முறைப் போராட்டமும் முகிழ்ப்பதற்கான வரலாற்று நிர்ப்பந்தத்தைக் கொடுத்தது.

# வரலாறு பெற்றெடுத்த பிரபாகரனும் பிரபாகரன் பெற்றெடுத்த விடுதலைப் புலிகளும்



எண்பதுகளின் முற்பகுதியில் தேசியத் தலைவர்

வரலாற்றின் வளர்ச்சியாக, எழுபதின் ஆரம்பத்தில் வெடித்த வன்முறை எதிர்ப்பியக்கம் தமி ழரின் மனக்கொந்தளிப்பையும், எதிர்ப்புணர்வையும் வெளிப்படு த்துவதாகவே அமைந்தது. அது ஒரு விடுதலைப் போராட் டத்தை முன்னெடுக்கக்கூடிய வாறு, அமைப்புவடிவத்தையோ, செயற்திட்டத்தையோ கொண்டி ருக்கவில்லை. ஆயினும் வன் முறையின்றி வேறெந்த மார்க் கமும் விடுதலையை வென் றெடுக்கச் சாத்தியமற்றதாகவும், பொருத்தமற்றதுமாகவே தமிழ் மக்களால் உணரப்பட்டது.

தொடரும்..

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதுவை இரத்தினதுரை.

# வேட்டைக்காரர் வந்தபோதும்... வந்த பின்பும்... இனிப் போகும் வரையும்...



பூ சிலிர்த்த வனத்தில்
பனி தடவிய காலையிருந்தது.
இருள் புணர்ந்த காடெங்கும்
சௌந்தர்யத்தின் ஜொலிப்பு.
நாசி துளைத்தேகியது வாசம் சுமந்த காற்று.
வனப் பறவைகளின் வாயிலிருந்து
பாடலாய் வழிந்தது அமிர்ததாரை.
சலசலத்து நடந்து போயிற்று
நிறைமாதத் தாயாய் ஒரு குளவாய்க்கால்.

நாணற்புல், சடைத்த கரைமருங்கெங்கும்
மோனத் தவமிருந்தன
அடிமண்ணை நீரரித்துப் போக
தாடி முளைத்த மரவேர்கள்.
இராமுழுவதும் இன்பம் துய்த்தோய்ந்த மான்கள்
கரையிறங்கி மறுகரையேறிப் புழுதி கிளப்பிப் போயின.
பகலுக்கான பாதுகாப்பைப் பலப்படுத்தி
நதிக்கரையில் சுவடுவிட்டு
நகர்ந்திருந்தன யானைகள்.
வேட்டைக்காரர் வராத காலை
இப்படிக் காடுறைந்து கிடந்தது
அந்த நொடிவரை.
அவரவர் அவரவர் கூட்டிலும் வீட்டிலுமாக
தத்தம் சுயத்தையும் இருப்பையும் எழுதியபடி
இருந்தது அவரவருக்கான வாழ்வு.

1505இல் முதல் வேட்டைக்காரன்
படகேறி வந்திறங்கினான் பீரங்கிகளோடு
கரையெங்கும் சாதாளை நெடி...
மணலெங்கும் பிணமெரிக்கும் வாடை
காடு கலங்கி முதன்முதல் கண்ணீர் விட்டது.
பிறகு இன்னொருவன்
அதன் பிறகு வேறொருவன்
வேட்டைக்காரரின் வருகை தொடர்ந்த போது
காடு கன்னிமைகிழிந்து கதறியது.
வேட்டைக்காரரின் நிறங்கள் மாறின
மொழிகள் மாறின
ஆயினும் காடு அழிவுறலானது இன்றுவரை.

ஒரு நாள் தென்திசைக் காட்டுக்கு தீமூட்டி விட்டனர்
அகதியாயின மான்களும் மயில்களும்
இன்னும் பேசாதிருந்தால் காடே எரிந்துபோம்
போராடப் போயின புலிகள்
புள்ளி மான்களும் புலியாகிப் போயின
இப்போ வனமெங்கும்
வேட்டைக்காரர்களுக்கும் மூத்த குடிமக்களுக்குமான
போர்.
இந்த முதிர்காடு பறவைகளுக்கான தொட்டில்;
மிருகங்களுக்கான மரபுவழி முற்றம்;
யாருக்கும் குத்தகைக்கு கொடுக்காத கொடிக்கால்;
விட்டுக்கொடுப்புகளுக்கு இடமற்ற உரிமம்
காடு புகுந்த வேட்டைக்காரர்கள்
ஆதிக்குடிகளை பேச்சுக்கு அழைக்கும் அவலம்
காடு மீளும் வரை
வேட்டைக்காரருடன் போர் தொடரும்
புலிகள் உறுதியுரைத்துள்ளன
புள்ளிமான்களும் வரித்தோல் போர்த்துள்ளன.

மான்களின் கண்களில் இப்போ மையில்லை
கால்கள் வலுக் கொண்டுள்ளன
பூச்சிகளின் வாயிற் கூடப் போர்ப்பாட்டு
காடு கிளர்ந்தெழுந்து விட்டது
வேட்டைக் காரரெல்லாம் காடுவிட்டேகும் வரை
பாட்டின் சுருதி பிசகாது.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# சந்திரிகா அம்மையாருக்கு தொல்லை ஏற்படுத்திய தொலைக்காட்சிப் பேட்டிகள்!

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பிரித்தானியாவுக்கான தனது அண்மைக்கால விஜயத்தின்போது மூன்று சந்தர்ப்பங்களில் தொலைக்காட்சிச் செவ்விகளுக்கு முகங்கொடுத்தார். ஒக்டோபர் மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பி.பி.சியின் 'Forst உடனான காலையுண்டி' என்ற நிகழ்ச்சியில் முதலாவது செவ்வி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை David Forst நடாத்தினார்.

இந்நிகழ்ச்சியில் நிகழ்காலத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சம்பவங்கள் விவகாரங்கள் கலந்துரையாடப்படும். அந்த நாள் கலந்துரையாடலுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட பொருள் 'சர்வதேசப் பயங்கரவாதம்' என்பதாகும். அன்றைய தினம் செவ்வி காணப்பட்ட பலருள் சிறீலங்காவின் ஜனாதிபதி திருமதி. குமாரதுங்கவும் ஒருவர். 'தமிழ்ப்புலிகள்' என்ற அவரது வழமையான விருப்பத்திற்குரிய விடயத்துக்கு வருவதற்கு திருமதி குமாரதுங்கவுக்கு சுமார் நான்கு நிமிடங்கள் எடுத்தன. எதிர்பார்த்தபடி அவர்களை குமாரதுங்க பயங்கரவாதக்கும்பல் எனவும் உலகில் நடைபெறும் தற்கொலைத் தாக்குதல்களுள் மூன்றில் ஒரு பகுதித் தாக்குதல்களுக்கு அவர்களே பொறுப்பானவர்களென்றும் கூறினார். முழுமையான மனித தற்கொலைக் குண்டுத்தொழில் நுட்பத்தில் முதன்மையான பயங்கரவாத தாபனம் அவர்களுடையதே. தானே பெண்புலி தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலுக்கு இலக்காகி, அதன் விளைவாக தனது ஒரு கண்ணையும் இழந்துவிட்டதாகக் கூறினார். இப்படிக் கூறி கேட்போரின் அனுதாபத்தையும் பெற்று புலிகளை நசுக்கி அழிக்க முழு உலகத்தின் உதவியையும் அவர் வேண்டி நின்றாரென்று கூறலாம். (இதன் மூலம் தனது அரசாங்கம் அதனைத் தாமாகவே செய்யும் வல்லமையைக் கொண்டிருக்கவில்லை என்பதை உண்மையாகவே ஒத்துக்கொள்கின்றார்).



தனது தந்தையாரும், தனது கணவரும் பயங்கரவாதத்திற்குப் பலியானார்கள் என்றும், அதேபோல் தானும் பயங்கரவாதத்தின் இலக்குக்கு உட்பட்டுப் பாதிக்கப்பட்டாரென்றும், அவர் லண்டனிலிருந்து வெளிவரும் The Time, அமெரிக்காவிலிருந்து வெளிவரும் நியூ



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யோர்க் டைம்ஸ் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு முன்னர் கடிதங்கள் எழுதியிருந்தார். தனது தந்தையார் பௌத்த துறவி ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்ற உண்மையையும் தனது கணவர் தனது முன்னிலையில் J.V.P என்றழைக்கப்படும் இராணுவ கீர்த்தி பெறுவதில் மூட ஆர்வமுடைய சிங்கள வெறியர்களால் கொல்லப்பட்டார் என்ற உண்மையையும் மிகவும் சாதுரியமாகக் குறிப்பிடாமல் மறைத்து விட்டார். இப்படிக் கூறுவதன் மூலம் இம்மூன்று நிகழ்வுகள் பற்றி அறிந்திராத வாசகர்கள் இவற்றிற்கும் புலிகள்தான் பொறுப்பு என நினைக்கட்டும் என்பதே அவரது உள்நோக்கமாகும். இது அவரது ஏமாற்றும் தந்திரமாகும். இந்த தந்திரத்தால் ஒவ்வொரு சிங்களவனும் தமிழனும் ஏமாறவில்லை என்ற உண்மையை யாராவது ஒருவர் அவருக்கு சுட்டியிருக்கவேண்டும். அதனால் தான் பின்னர் நடைபெற்ற டேவிட் Forst உடனான நிகழ்ச்சியில் தனது கணவர் இராணுவ கீர்த்தி பெறுவதில் மூட ஆர்வமுடைய சிங்கள வெறியர்களால் கொல்லப்பட்டார் என்றும் அவர் கொல்லப்பட்டது பயங்கரவாதிகளால் அல்ல என்றும் ஒத்துக்கொண்டார். தனது தந்தையார் எப்படிக் கொல்லப்பட்டார் என ஒரு வார்த்தைதானும் அவர் கூறவில்லை. அவர் தனது கருத்தை வெளியிடட்டுமென David Forst பெருந்தன்மையோடு விட்டுவிட்டார். என்ன இருந்தாலும் அவர் நாட்டின் ஜனாதிபதி இல்லையா?

அவர் எதிர்கொண்ட அடுத்த இரண்டு தொலைக்காட்சி செவ்விகளிலும் சந்திரிகா அம்மையாருக்கு அதிஷ்டம் இல்லாமற் போயிற்று. Hard Talk நிகழ்ச்சி ரிம் செபஸ்ரியனால் நடாத்தப்பட்டது. CNN நிகழ்ச்சியில் அவர்களது லண்டன் ஒளிபரப்பு அறையில் Zain Vergee என்ற இளம் பெண்ணே குமாரதுங்கவைச் செவ்வி கண்டார். கேட்கப்பட்ட வினாக்களுக்கு நேரிடையாகப் பதில்கள் கூறாது வெளிப்படையாகவே பொய்களைக் கூறி, தொடர்பில்லாமல் பேசி, எப்படி ஒரு நாட்டின் ஜனாதிபதி தன் மீது அவமானத்தை ஏற்படுத்த முடியுமென உலகெங்கிருந்தும் அந்நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்த அனைவரும் அவதானித்திருப்பார்கள். அவரை தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்த சிங்கள மக்களும் கொழும்புப் பத்திரிகையாளர்களும் தாம் எவ்வளவு வெட்கமடைந்தார்கள் எனக்கூறித் தங்கள் ஏமாற்றத்தை வெளியிட்டார்கள்.

Tim Sebastianனால் நாட்டின் மனித உரிமைகள் நிலைமை பற்றிக் கேட்கப்பட்ட சில சங்கடமான வினாக்களுக்கு விடையளிக்க முடியாமல் திணறிய ஜனாதிபதி சந்திரிகா, அதிகமாகத் தனது தவறுகளை மறைப்பதிலும் விமர்சனத்தைத் தவிர்ப்பதிலும் எரிச்சல் படுவதிலுமே ஈடுபடக்காணப்பட்டார். அரை மணித்தியால செவ்விகளின் போது மனித உரிமைகளைப் பற்றிய அமெரிக்க அரச திணைக்களத்தின் 2001 அறிக்கை பொய்களைக் கொண்டதென்றும், யாழ்ப்பாணத்தில் ஒரேயொரு பாலியல் வல்லுறவுச் சம்பவமே நடைபெற்றதெனவும், தமிழ்ப் பிரதேசங்களில் பொருளாதாரத் தடையில்லை எனவும், மனித உரிமைகள் மீறல்களைச் செய்வதற்கு 'பைத்தியக்கார பொலிசார்' சிலர் இருப்பதாகவும் குறை கூறினார். அவரைத் தொலைக்காட்சியில் பார்த்தவர்கள், பரிதாபமான முறையில் தனது பங்கை ஆற்றி ஜனாதிபதி சந்திரிகா தனக்கும் தனது நாட்டிற்கும் அபகீர்த்தி ஏற்படுத்தி விட்டார் என்பதை உணர்வார்கள்.

இந்த இரண்டு தொலைக்காட்சி செவ்விகளின்போது என்ன நடந்தது என்பது பற்றி வாசகர்கள் ஒரு கருத்தைப் பெறும்பொருட்டு கொஞ்சம் வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்காகச் சில மேற்கோள்கள் தமிழில் தரப்படுகின்றன.

சட்டவிரோத குற்றவாளிக்கும்பலை உருவாக்கி அப்பாவித் தமிழ் குடிமக்களைத் தாக்கியதோடு 1983ல் தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட படுகொலைகளை மேற்கொண்டது என அவர் யூ.என்.பி. அரசாங்கத்தைக் குறைகூறிக் கொண்டிருந்தபோது அவரைக் குறுக்கிட்ட Tim Sebastian 'ஆனால் உங்களது ஆட்சியின்போதும் தமிழ் குடிமக்கள் தாக்கப்பட்டுள்ளனர்'

சந்திரிகா: 'இல்லை! என்றுமில்லை!'

செபஸ்ரியன்: 'என்றுமில்லை'

சந்திரிகா: (தனது தலையைக் கடுமையாக ஆட்டியபடி) 'என்றுமில்லை!'

செபஸ்ரியன்: (சட்டத்திற்கு அப்பால் புரியப்படும் கொலைகள் பற்றியும் தமிழ் மக்கள் காணாமற்போவது பற்றியும் அமெரிக்க அரச திணைக்கள அறிக்கையிலிருந்து மேற்கோள் காட்டுகிறார்)

சந்திரிகா: (தனது கைகளை மடக்கியபடி) 'இல்லை! நான் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை!'

செபஸ்ரியன்: ஏன் இல்லை? எதற்காக அமெரிக்க அரச திணைக்களம் பொய் சொல்ல வேண்டும்?'

சந்திரிகா: 'நல்லது பொய்சொல்ல விரும்புகிற எல்லா வகை மக்களும் இருக்கிறார்கள்'

செபஸ்ரியன்: ' ஆனால் இது அமெரிக்க அரச திணைக்களத்தின் உத்தியோகபூர்வமான அறிக்கை'

சந்திரிகா: 'அதன் திகதி என்ன?'

செபஸ்ரியன்: 'இது 2001 ஆண்டு அறிக்கை'

சந்திரிகா: 'நீங்கள் குறிப்பிடும் அறிக்கையை நான் பார்த்ததில்லை'

செபஸ்ரியன்: 'நீங்கள் பார்த்ததில்லையா? உங்களுக்கு ஒரு பிரதியை நாங்கள் தரலாம்'

சரியான கேள்விகளைக் கேட்பதே நல்ல செவ்விகளுக்கு மெருகும் வலுவும் கூட்டும். அதனையே Tim Sebastian, Zain Verjee யும் நிறைவுடன் செய்து முடித்தனர்.

**சு.சிவநாயகம்**




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறியப்படாதவர் மீது ஒரு அஞ்சலிப் பாடல்

என்றும் போலத்தான் அன்றும் விடிந்தது
எந்த மாற்றமுமில்லாது
வழியில் அகப்பட்டதனைத்தையும் தழுவியபடி
நேற்றைய இரவைக்கீறி காற்று
உயிர்ப்புற்றுலவியது.
நம்பிக்கையே நாளாந்தமாகிய வாசல்களில்
மெல்ல மெல்ல வெய்யில் பரவியது.
அவிச்சலில்லாத அந்த ஆனந்தப்பொழுதில்
வன்னியின் துயரத்துள்ளும் ஒரு சுகம்தெரிந்தது.
பாதங்களில் வேகம்பூட்டாத பரவசத்துடன்
விடுதலை மனிதர்கள் வெளியே வந்தனர்.
எந்தவானொலி என்ன சொல்லிற்றோ தெரியாது.
முகிலுரசிய தலைகளில் முகங்கள் பூவனமாயின.
மகிழ்ச்சியில் மாரடைப்பே வந்துவிடும் போல
ஆனந்தத்தவிப்பில் பலர் அழுதேவிட்டனர்.
வாய்வந்த வார்த்தைகளும் கூட
தொண்டையில் சிக்குண்டு திணறின
எடுத்தது எடுத்தபடியும் போட்டது போட்டபடியும்
புழுகமேறிய தமிழர் சைக்கிளேறி
உலாப்போயினர்.
நெஞ்சுக்குள் சந்தோசம் நிறையும்போது
பூரிப்பின் வேர்களில் யாருக்கும் பூப்பூக்கும்.
பூத்துச் சிலிர்த்துப்போனது எம்பூமி.
காற்றின் திசைகளெல்லாம் கட்டுநாயக்காவே
விரிந்தது.
பன்னிரண்டு குண்டுக்குருவிகளின்
குடலுருவிப்போனதாம்.
எவரோ எய்த அம்பு
வீணான பொல்லாப்பேதும் வியாசனுக்கு
வேண்டாமே
எய்தவரை X எனக்கொள்வோம்
அது யாராகவும் இருந்துவிட்டுப்போகட்டும்,
அம்பெய்த அபிமன்யூக்களைப் பற்றியே
எல்லாவாய்களும் பேசின.
அருச்சுனனின் புதல்வர்களே!
உங்களுக்கெம் நன்றியென உரைத்தது காற்று.
தன் சாபக் கவிதைகள் பலித்ததெனச்
சந்தோஷித்தான் வியாசன்.
வானத்தாயும் வஞ்சிக்கவில்லை
அன்று பாளம்பிளந்த எம்மண்மீது
சில தூறல்கள் விழுந்தன.
ஓம்: ஓமெனத் தேவருரைத்த வாழ்த்தொலி
எல்லாச் செவிகளிலும் கேட்டது.
வெற்றிப்பெருமிதத்தின் வீறாய்ப்பிலிருந்தாள்
கொற்றப்பெருமாட்டி,
உயிரற்ற யந்திரங்கள் மீது இத்தனை கோபமா?
என்று
'அரசியற் சாதுரியர்' யாரும் ஆச்சரியப்படலாம்,
எள்ளி நகையாடியும் சிலர் எழுதலாம்.
கட்டுநாயக்காவில் கருகிப்போனவை
வெட்டுக்கத்தியும் சின்னப் புட்டுப்பானையுமல்ல,

வியாசன்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எரிந்தது பகைவரின் பலம்,
அழிந்தது அவர்களின் ஆணவம்,
எங்கள் உயிருறிஞ்சிக் குடித்தவை
இந்த ஊத்தைப் பேய்கள் தான்.
நவாலியிலும்; நாகர்கோவிலிலும்
நரபலியெடுத்த ரத்தப்பிசாசுகளிவை.
கிளாலியிலும்; சுதந்திரபுரத்திலும்
எம் உறவுகளைத் தீயிட்ட எரிமாடன்கள்
இவைதான்,
மந்துவிலிலும், மாத்தளனிலும்
சின்னப்பிஞ்சுகளின் உயிர்தின்ற
வன்மவல்லூறுகளிவை.
இந்த மகிழ்ச்சி இருக்காதா எங்களுக்கு?
குண்டுகொட்டிய போது கீழே நின்றவருக்கு
கொடுத்த தண்டனையறிந்து கொள்ளை
மகிழ்ச்சி
குருதியும் சதையுமாகக்
கூட்டியள்ளியவருக்குத்தான்
இந்த அழிப்பின் பெறுமதி புரியும்,
பிஞ்சைப் பறிகொடுத்த பெருதுயரில்
நெஞ்சிலும் தலையிலுமடித்து ஓலமிட்டாளே
ஒருதாய்
அவளைக்கேளுங்கள்
கட்டுநாயக்காவுக்கு அவளின் கருவறை
பதில்சொல்லும்.
குண்டுபிளந்த தாயின் மார்பருகே கிடந்து
பச்சைப்புல்லொன்று பாலுக்கழுததே
அந்தச் சந்திரவதனத்துத் தளிரைக் கேளுங்கள்
முற்றாக எரியவில்லையா கட்டுநாயக்கா?
என்று மூச்செரியும்.
ஊரிழந்த துயரில் உருகியபடி
கிளாலிக்கரையில் வந்து கிடந்தோமே.
விட்டானா பாவி
விரட்டி விரட்டி உயிர்ப்பூக்களைக்
கிள்ளியெறிந்துவிட்டு
கட்டுநாயக்காவிற்தானே களைப்பாறினான்
நெருப்பிட்டது யாரெனத் தெரியாதெனினும்
தகும் செயலாற்றியவர்களுக்கு எம்
தலைசாய்த்தோம்.
'செட்டிக்குத்தானே தெரியும் வட்டியும் முதலும்'
இந்திரபுரியை விற்றுத்தான் இவை
இறக்குமதியாயின.
இந்த வல்லூறுகள் வெறும் யந்திரங்களல்ல.
எதிரி தவம்செய்து பெற்ற வரங்களிவை.
எங்களைக் கொல்லவென வாங்கிய
நாகாஸ்த்திரங்கள்.
உட்புக முடியாதெனும் நம்பிக்கையில்
வித்தகர் வகுத்த பத்மவியூகம் பிளந்து
உள்ளே புகுந்தவர் யாரெனத் தெரியாதெனினும்
அவர்கள் சென்ற திசைநோக்கிச் சிரம்
சாய்த்தோம்.
…னத்தளத்தின் அருகுள்ள
…ட்டுத்திடலில்

பழிதீர்க்கப் போனவரின் பாதணிகள்
கிடந்தனவாம்
செருப்புகளை எடுத்துவாருங்கள்
சிம்மானசனத்தில் வைப்போம்.
சென்றவர்கள் உண்டெறிந்த
மீதவுணவிருந்ததாம்
எடுத்து வாருங்கள் ஒரு பருக்கையுண்டாலே
போதும்
எமக்கும் பலம் பெருகும்.
வண்டிலில் வந்தார்கள், வாய்க்காலால்
வந்தார்கள்
கடலால் வந்தார்கள்
காற்றாகிக் குதித்தார்களென்று
கூறுகின்றீர்களே
வெற்றுப்பீரங்கிகளே உங்களுக்கு வெட்கமே
கிடையாதா?
கண்ணி வயல் கடந்து
காவல் அரண் கடந்து, மின்சாரவேலி மீதேறி
வந்தவர்களென்று கூறும்போதில்
பெருமையில் நாங்கள் புல்லரித்துப்
போகிறோம்.
சிரசேறும் செருக்கில் திணறுகிறோம்.
புத்தபெருமானே!
சத்தியமாய் எங்களுக்குத் தெரியாது.
வந்தவர்கள் தமிழரென்பதால் வாழ்த்துகிறோம்.
அவர்கள் கொன்றவையெல்லாம்
முன்னரெம்மைக் கொன்றவையென்பதால்
நாலுவரியெழுதி அவர்களுக்கு நன்றி
சொல்கிறோம்.
கழிவு நீர் வாய்க்காலுக்குள்ளாலே
நடந்தார்களாம்
வாய்க்காலே! உமக்கெமது நன்றி!
தென்னை மரத் தோப்புக்குள்ளே
திரிந்தார்களாம்
தென்னை மரங்களே! உங்களுக்கெம் நன்றி
மின்சாரவெட்டுக்கு உத்தரவிட்ட
ரத்வத்தையாரே!
நன்றிக்குரியவர் நீருமானீர்.
கட்டுநாயக்காவின் தலையில் குட்டியவரே
நீங்கள் யார்பெற்ற பிள்ளைகளோ
நாமறியோம்.
உங்கள் பெயரும் அறியோம்
உங்கள் ஊரும் தெரியோம்
ஆயினுமுமக்கு ஆயிரம் தீபங்களேற்றினோம்.
நாயினும் கீழாய் நலிவுற்ற தமிழினத்தை
உலகத்தின் உதடுகளால் உச்சரிக்க
வைத்தவரே!
எழுதும் எந்தவரியும் உங்களிடம் தோற்கும்,
நீங்ளெழுதிய வரிகள் மட்டுமே நிலைக்கும்.
பிரிந்தோம்
மீண்டும் சந்திப்போம்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தமிழீழ மண்ணில் இருந்து தரணிக்கோர் செய்தி



"தன்னைச்சுற்றி மிகமிக இறுக்கமான வேலிகளைப் போட்டிருந்தவளை சீருடை தரிக்க வைத்து, ஆயுதம் ஏந்தி களத்தில் எதிரியைச் சந்திக்க வைத்து,வீரத்திலும் தியாகத்திலும், விடுதலை உணர்விலும் ஆணுக்கு பெண் சளைத்தவள் இல்லை என்பதை செயலுருப்படுத்திய தேச விடுதலைப் போராட்டம், பெண்கள் விடுதலையை நோக்கிய தனித்துவமான பாதையைத் திறந்து விட்டிருக்கின்றது. இத்தனித்துவப் போக்கை உலகிற்கு உணர்த்தவென இந்த மண்ணில் கொண்டாடும் மாலதி தினம், தன்னம்பிக்கை மிக்க, தனித்து தீர்மானம் எடுக்கும் ஆற்றல் உள்ள, குடும்பச் சுமையைப் பகிர்ந்து கொள்ளும் தற்துணிவுள்ள பெண்ணை உருவாக்கிய தேசவிடுதலைப் போரின் ஒரு குறியீடேயென்றால், இக்குறியீடு இவ்வுலகிற்குச் சொல்லுகின்ற, இனிச் சொல்லப்போகின்ற செய்திகள், அனைத்துலகப் பெண்கள் தினம் இவ்வுலகிற்கு உணர்த்தும் செய்திகளைவிடக் காத்திரம் மிக்கதாக முன்னுதாரணமிக்கதாக இருக்கும் என்பதில் வியப்பேதும் இல்லை."



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மானுட நெஞ்சங்களே! மார்ச் 8, இனம், மதம், நிறம், மொழி, கலாச்சாரம், சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் போன்றவற்றால் பலதரப்பட்ட போதிலும், பெண் என்ற அடையாளத்தால் ஒன்று பட்டுநிற்கும் பெண்ணினம் ஒடுக்குமுறை களுக்கெதிராகவும் சமூகநீதி, சம உரிமை, சமத்துவம் போன்றவற்றிற்காகவும் ஒன்று திரண்டு, அகிலம் எங்கனும் குரல்கொடுக் கும் ஒருநாள் இது. உலகின் சரிபாதிக்கு மேற்பட்ட மக்கள் தொகையைப் பிரதி நிதித்துவப் படுத்துபவர்களும் உலக உழைப்புச் சக்தியில் மூன்றில் இரண்டு பங்கை தமதாகக் கொண்டிருந்தபோதும் உலக வருமானத்தில் பத்தில் ஒரு பங் கினை மட்டுமே பெறுபவர்களுமான பெண் கள் தமது உரிமைகளுக்காகக் கிளர்ந் தெழுந்து போராடவெனத் தீர்மானிக்கப் பட்ட ஒரு நாள். குறைந்த கூலியில் கொள்ளைலாபம் அடிக்கும் நோக்குடன் பெண்களின் உழைப்பைச் சுரண்டிய முத லாளித்துவத்திற்கு எதிராக முதன் முதலில் அணிதிரண்டு பெண்கள் போர்க்கொடி தூக்கிய ஒரு நாள்.

## இத்தனை சிறப்பு ஏன்?

பெண்களின் அரசியல் பொருளாதார சமூக சமத்துவத்திற்காகப் போராடுவதை இலக்காகக் கொண்டு 18ம் நூற்றாண்டி லேயே பல பெண்ணுரிமை இயக்கங்கள் தோன்றி, பெண்ணொடுக்கு முறைக் கெதிராக போராட்டங்கள் நடத்தியமையை வரலாறு தெளிவாக எடுத்தியம்பும்போது மார்ச் 8 மட்டும் இத்தனை சிறப்புடையதாக மாறியதேன் என்ற சந்தேகம் பலருக்கு எழுவது இயல்பு.

ஆணுக்கு ஈடாகப் பெண் உழைத்து, உழைப்பின் பலனைச் சமமாகப் பங்கிட்டு, தமது தலைவனைக் கூட்டாகத் தேர்ந் தெடுத்து வாழ்க்கை நடத்திய சுய ஆளுமை நிலையில் இருந்து ஆடு, மாடு, கோழி போல் சொத்து என்ற நிலைக்குக் கீழிறக் கியது நில பிரபுத்துவ சமூகம். ஆற்றல் வாயில்கள் அனைத்தும் செத்தைக்குள் முடங்கிவிட 'செத்தை மறைவே சொர்க் கம்' எனப் பயிற்றுவிக்கப்பட்டவர்களின் உழைப்பில் கொள்ளை இலாபம் அடிக்கும் நோக்குடன் அவளுக்கு விடுதலை பெற்றுத் தருவதாகக் கூறிக்கொண்டு பெண் அடி மைத்தனத்திற்கு பெண்விடுதலை என் னும் மூலாம் பூசி அவளை வெளியே வரத் தூண்டியது முதலாளித்துவ சமூகம். நாக ரீக உடையும் கேளிக்கை விருந்துகளுமே பெண்விடுதலை என உயர்மட்ட சீமான் களின் சீமாட்டியர் பயிற்றுவிக்கப்பட, சீழு ழைப்பும் போட்டியும் நிறைந்த உலகில் வயிற்றுப் பசியைப் போக்க போட்டி போட்டு வேலை தேடுவது எவ்வாறு என பெரும் பான்மைப் பெண் சமூகம் பயின்றது.



2ஆம்.லெப்.மாலதி

நூற்றாண்டு நூற்றாண்டுகளாக சுயசிந்த னைக்கும் கருத்துத் தெளிவுக்கும் வாய்ப் பின்றி இருந்தவர்கள் விடுதலை என்ற பெயரில் அந்தச் சமயத்தில் தம்முள் கருக் கொண்ட சிந்தனைகளுக்கும் தமக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பு வசதிகளுக்கும் மைய பெண்விடுதலையை முன்னெடுத் துச் செல்லும் போக்கு உருவாகத் தொடங் கியது. முதலாளித்துவ சமூகம் ஒன்றில் தனது கணவர் அல்லது தகப்பன் அல்லது சகோதரன் அனுபவித்த அதே நன்மைக ளை, அதிகாரத்தை, உரிமைகளைப் பெறு வதையே நோக்காகக் கொண்ட முதலா ளித்துவ பெண்ணியவாதிகளினால் வழி நடத்தப்பட்ட பல பெண்விடுதலை அமைப் புக்கள் வெற்றுக் கோசங்களிலும் வேடிக் கைப் பேச்சுக்களிலும் காலத்தைக் கழித் துக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் முதலாளித்துவத்தின் கொடுமைகளுக் கெதிராகப் போர்க்கொடி தூக்கி நாளொன் றிற்கு 10 மணிநேர வேலையும் ஆண் களுக்கு இணையான ஊதியமும் கோரி பெண் நெசவுத் தொழிலாளர் 1857ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ம் திகதி தொழிற் சங்க ரீதியாக ஒன்றுதிரண்டு உரிமைப் போராட்டத்தில் குதித்த அதிசயம் முதலா ளித்துவத்தின் ஆணிவேரான அமெரிக்க மண்ணில் நிகழ்ந்தபோது அது மற்றெல்லா உரிமைப் போராட்டங்களையும்விட முக்கி யத்துவம் பெற்றதில் வியப்பேதும் இல்லை.

## சன்னமாய்த் தெரிந்த ஒளிக்கீற்று

கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலம் கழித்து 1910ம் ஆண்டு டென்மார்க் தலைநகர் கொப்பன்நேகனில் நடைபெற்ற இரண்டாவது அனைத்துலக சோசலிச பெண்கள் மாநாட்டில்தான் மார்ச் 8ஐ அனைத்துலக பெண்கள் தினமாகப் பிர கடனப்படுத்தவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதை முன்வைத் தவர்களில் இரு பெண்கள் முக்கிய மானவர்கள். ஒருவர் ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரும் பெண் களுக்கு வாக்குரிமை பெற்றுத்தருவதில் முன்னின்று பாடுபட்டவருமான கிளாரா செட்கின் அம்மையார். இன்னொருவர் ஏகாதிபத்தியத்தின் பிடியில் இருந்த ரஷ் யாவை கம்யூனிசப் பாதைக்கு இட்டுச் செல்லும் கடினபணியில், மாவீரன் லெனி னுக்கு தோள் கொடுத்தவர்களில் முதன் மையானவரும், பெண்விடுதலை என்ற பெரும் பணிக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்தவருமான ரஷ்யப் பெண் இராஜதந்திரி அலெக்சாண்டிரா கொலன் ராமி என்பவர்.

பெண் தொழிலாளரைச் சுரண்டுவதன் மூலம் உருவாக்கப்பட்ட உலகில், வசதி யாகவும், பாதுகாப்பாகவும் தமது வழியில் முன்னேற உதவும் வழிமுறைகளை நாடும் பெண்ணியவாதிகளின் பாதை வேறு. பிறப் பால் அல்லது செல்வநிலையால் பெறப் படும் சலுகைகளை இல்லாதொழிப்பதை இலக்காகக் கொண்ட பெண் தொழிலாளர் களின் பாதை வேறு என்று இற்றைக்கு 90 ஆண்டுகளுக்கு முன்னரே குரல்கொடுத்து, ரஷ்யப் பெண் தொழிலாளருக்கு உரிமை கள் பெற்றுக்கொடுப்பதில் வெற்றிகண்டவர் கொலன்ரோய். கருத்துத் தெளிவு, அதி காரம், தீர்மானம் எடுக்கும் ஆற்றல் அத் தனையும் வாய்ந்த இத்தகைய பெண் களின் ஆதரவில் மார்ச் 8 அனைத்துலகப் பெண்கள் தினமாகப் பிரகடனப்படுத்தப் பட்டபோது ஒடுக்குமுறைகளுக்குட்பட்ட பெண்ணியத்தின் விடிவு கண்ணுக்கெட் டிய தூரமாகத் தோன்றியதில் வியப்பே தும் இல்லை.

சூட்டோடு, சூடாக 1918ஆம் ஆண்டு ஜப்பான் துறைமுகப் பெண் தொழிலா ளர்கள் கப்பலில் இருந்து அரிசியை இறக்க மறுத்து, செய்த வேலைநிறுத்தம் 'அரிசிக் கலகம்' எனப் புகழ்பெற்றதுடன் நீண்ட போராட்டமாகி ஜப்பானில் அரசியல் நெருக் கடியையே தோற்றுவித்ததாகும். அதைத் தொடர்ந்து 1922இல் சீனாவில் 70 பட்டுத் தொழிற்சாலைகளில் வேலைபார்த்த ஆயி ரக்கணக்கான பெண்கள் முதன்முதலாக ஊதிய உயர்வு கேட்டு மேற்கொண்ட வேலைநிறுத்தம் சீன சமூகத்தையே உலுக் கியதாகும். பெண் ஒடுக்குமுறை அதிகம் மிக்க இத்தகைய நாடுகளில் ஏற்பட்ட போராட்டங்கள் பெண்விடுதலை நோக்கிய பாதையை சீரியதொன்றாகத் தோன்றச் செய்தன.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஆட்டம் கண்ட அடித்தளம்

முதலாளித்துவம் போட்ட அடிக்கட்டுமானம் அவ்வளவு லேசாக அசைக்கப்படக் கூடியதல்ல என்பது சொற்ப காலத்துள்ளேயே தெளிவாகியது. அரிசிக்கலகம் உலுப்பிய இரு தசாப்தங்களுக்குள்ளேயே தனது பலத்தையும் பலாத்காரத்தையும் பிரயோகித்து ஒரு லட்சம் சீன-கொரியப் பெண்களை தனது இராணுவத்தின் பாலியல் வேட்கைகளைத் தீர்க்கவென ஜப்பான் 'உல்லாசப் பெண்டிர்' ஆக்கியபோது உலகம் வாய்மூடி மௌனம் காத்தது. பெண்ணொடுக்குமுறைகளைக் களைந்தெறிய கூடுதலானவரை பாடுபட்டு வெற்றியும் கண்ட கம்யூனிச சீனா இப்போது அமெரிக்க மயமாக்கத்தின் கீழ் தன்வயமிழந்துகொண்டு போவதையும், இலைமறைகாயாக இருந்த மனைவியரைத் தாக்குதல், மணமகள் விற்பனை, பாதங்கட்டுதல் போன்றன அதிகளவில் தலையெடுப்பதனையும் பார்க்கும்போது அநீதிக்கெதிராகக் குரல் கொடுக்கும் மனோபாவம்கூட 'மழைக்கு முளைக்கும் காளான்' போல குறுகிய ஆயுட்காலம் கொண்டதோ என்னும் எண்ணப்பாட்டையே உருவாக்கியுள்ளது.

பெண்களின் உரிமையைப் பேசவென்று எத்தனை மாநாடுகள், ஊர்வலங்கள், விவாதங்கள், ஆய்வுப்பட்டறைகள், எழுச்சி தினங்களை இவ்வுலகம் சந்தித்திருக்கின்றது. தனிப்பட்ட ரீதியிலும் நிறுவன மயப்பட்டும் எத்தனை உரிமைப் போராட்டங்களை நடத்தியபோதும் பெண் விடுதலை பற்றிய தெளிவான கருதுகோள் இன்மை, பெண்ணிடமிருந்து கருக்கொள்ளும் பெண்ணிய சிந்தனைகள்கூட அவள் வாழும் சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார சூழலின் தாக்கத்திற்குட்பட்டு நிற்றல் போன்றவற்றின் காரணமாக பெண்ணுரிமைப் போராட்டங்கள் ஒருபுறம், உள்ளாடை எரிப்பு, கட்டற்ற பாலுறவு, தன்னினச்சேர்க்கை என்று புதுப்புது வடிவங்களை எடுத்துக் கொண்டிருப்பதையும் மறுபுறம் போராடும் அறிவோ வலுவோ இன்றி பட்டினி, அறியாமைகளை பிரதான பண்பாகக் கொண்ட கூலித்தொழிலாளர் கீழுழைப்பு, கூடிய வேலை நேரம், பாலியல் தொல்லைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருப்பதையுமே காணக்கூடியதாக இருக்கின்றது. பெண்ணுரிமைகள் பற்றிக் குரல் எழும்ப எழும்ப பெண்ணுக்கு எதிரான வன்முறை வடிவங்களும் உச்சநிலையடைகின்றன.

அனைத்துலகப் பெண்கள் தினம் வெறும் அடையாளமாகிப்போய் தசாப்தங்கள் கடந்துவிட்ட ஒருநிலையில் தமிழீழப் பெண்கள் தொடர்பாக ஏற்பட்டுவரும் புதியதோர் மாற்றத்தை உலக சமூகத்திற்கு அறியத்தரவேண்டும் என்ற ஒரு உந்துணர்வு தோன்றுவது தவிர்க்கமுடியாதது.

## வேரும் வேரடி மண்ணும்

இந்த மண்ணில் பெண்விடுதலை நோக்கிய பாதையொன்று திட்டமிட்ட தொன்றாகச் சீரியதாகத் தெரிகின்றது. 'பொருளுலகத்தை எந்தெந்த வடிவில் சீரமைத்தாலும் ஆண்களின் மனவுலகில் பெண்மை பற்றிய அவர்களின் கருத்துலகில் ஆழமான மாற்றங்கள் நிகழாமல் பெண் சமத்துவம் சாத்தியமில்லை' என்று கூறும் ஒரு தலைமைத்துவத்தின் கீழ் அணிதிரண்டு நிற்கும் ஒரு பெண்கள் சமூகத்தின் மத்தியில்தான் இந்த மாற்றம் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது.

அடக்குமுறையின் உச்சக்கட்டத்தில் அணிதிரண்டு உரிமைப்போராட்டம் நடத்தும் தொழிலாளி வர்க்கப் பெண்ணோ அல்லது முதலாளித்துவ வர்க்கத்தின் அதிகூடிய சலுகைகளுக்காக கொடியுயர்த்தும் மேல்த்தட்டு வர்க்கப்பெண்ணோ அல்ல தமிழீழப் பெண், 'எத்தனைதான் எண்ணுக்கணக்கற்ற தகுதிகளைப் பெற்றிருக்கும் பெண்ணும் திருமணத்தின் மூலம் ஆணுடன் இணைக்கப்படும்போது அது சமுத்திரத்தில் கலந்த ஆறு போன்றது' எனக் கூறும் மனுநீதி சாத்திரம் இன்றும் ஆழமாய் வேரோடி இருக்கும் சமூகத்தின் வார்ப்பு இவள். கல்விச் சுதந்திரமோ, திறமையின் அடிப்படையில் தொழில் பார்க்கும் சுதந்திரமோ மறுக்கப்படாதபோதும் தகப்பன், சகோதரன், கணவன், பிள்ளை என்று படிநிலையில் தங்கிவாழப் பயிற்றுவிக்கப்பட்டவள். பட்டினி கிடந்தாலும் நல்ல நாள் பெருநாளில் நாலுபேர் 'நாக்கு வளைக்காம' நல்லதாய் உடுத்துக் கொண்டு நிற்க வேண்டும். வாயைக் கட்டி வயிற்றைக் கட்டியாவது நகைநட்டுச் சேர்க்க வேண்டும். குடிகாரனோ கூத்தியார் வீட்டுக்குப் போறவனோ, இருப்பதை வித்துச் சுட்டாவது பிள்ளையைக் கரைசேர்க்க வேண்டும். ஆழமாய்ப் படித்து அதிகமாய் உழைத்தாலும் அடியுதை வாங்கிக் கொண்டு கணவனுடனேயே இருக்க வேண்டும் என்ற சிந்தனைகள் ஆழமாய்ப்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புரையோடிப் போயிருக்கும் தமிழீழப் பெண்களில் ஏற்படும் மாற்றம் சாதாரணமாக நோக்கப்படக்கூடியதல்ல. அறியாமையில் உழல்பவளை அறிவுசார் நடவடிக்கையில் மாற்ற முனையலாம். அதிகம் படித்துவிட்டும் தன்னைச்சுற்றி தானே விலங்குகளைப் போட்டுக் கொள்பவளை கருத்தரங்குகளோ கண்டனப் பேரணிகளோ மாற்றுவதென்பது இலேசான தொன்றல்ல, போதனைகள் தமிழீழப் பெண்களிடம் எடுபடுவது குறைவு.

## பாதை புதியது

தமிழீழ மண்ணில் மாநாடுகள் கூட்டப்படாமலேயே தமிழீழப் பெண்ணுக்கான விடுதலைப் பாதையை காலத்தின் கட்டாயம் திறந்து வைத்திருக்கின்றது. சொந்த மண்ணில் இருப்பை நிச்சயப்படுத்திக் கொள்ளும் போராட்டத்தில் ஆண் பெண் வேறுபாடின்றி அனைவரும் உள்வாங்கப்பட வேண்டிய தேவையொன்றினூடாகவே பெண்ணைச் சுற்றியுள்ள தளைகள் மெல்ல மெல்ல விடுவிக்கப்பட்டுக் கொண்டிருப்பது தெரிகின்றது. கண்ணுக்குத் தெரியும் மாற்றங்கள் ஆக்கபூர்வமானதாக, நம்பிக்கையூட்டுவனவாக தோற்றமளிக்கின்றன.

அதிகரித்து வரும் பெண்களின் கல்வி நிலை, அழகான படித்த வேலைபார்க்கும் ஆண்களின் பற்றாக்குறையை மேலும் அதிகரிப்பதனால் அத்தகைய ஆண்களுக்கான தேடல் தன்னிச்சையாகவே விடுபட்டுக் கொண்டு போவது கண்கூடாகத் தெரிகின்றது. காதலித்தலோ, காதலித்து கைவிடப்படுதலோ தனித்து பெண்ணின் குற்றமல்ல என்ற மனோபாவம் ஆண்களிடம் உருவாவதன் காரணமாக திருமணத்திற்கு முந்திய காதல் உறவுகள் பரஸ்பரம் தெளிவு படுத்தப்பட்டு திருமண பந்தத்தில் இணையும் போக்கு மேலோங்கி வருகின்றது. காதலித்து உறவாடிவிட்டு கை கழுவ முனையும் ஆணுக்கு தனது எதிர்கால வாழ்வையும் துச்சமாக மதித்து தண்டனை பெற்றுக்கொடுக்க விளையும் மனப்போக்கும், தனக்கு இழைக்கப்பட்ட பால்சார் கொடுமைகளை சமூக மானத்திற்குப் பயந்து மறைத்து வைக்கும் நிலையில் இருந்து மாறி அதைப் பகிரங்கமாக வெளிப்படுத்தி குற்றவாளியை நீதியின் முன் நிறுத்தும் தன்மையும் போராடும் சமூகத்தின் புதியதோர் மாற்றமாகவே தெரிகின்றது. பெண்மையின் இலக்கணங்களான இரக்கசுபாவம், சகிப்புத் தன்மை, சமூக உறவு பேணல் என்பன பெண்கள் ஆயுதம் ஏந்துவதால் மாற்றமடைகின்றது என பதறித்துடிக்கும் கொழும்பு வாழ் பெண்ணியவாதிகளுக்கு சாட்டையடி கொடுக்கும் வகையில் மிகவும் சிறப்புற இயங்குகின்றன. ஆதரவற்ற பெண்களுக்கென பெண்களே முன்னின்று நடத்தும் பெண்கள் நலன் பேணும் அமைப்புக்கள், 'இருப்புக் கொள்ளாமல் வெளிக்கிட்டதுகள்' என்று சமூகத்தால் சாடப்பட்டவர்களே அச்சமூகத்தின் முன் மதிப்புமிக்க போராளிகளாக, போராளி மனைவியராக, போராளித் தாயாராக உலாவரும் போக்கும் இன்று கண்ணுக்குத் தெரியும் மாற்றங்கள். அனைத்துலகுக்கும் மேலாக உடலுறுப்புக்களின் பெரும்பகுதி இயங்காத நிலையிலும்கூட தான் விரும்பியவனை அல்லது விரும்பியவளை மணம் செய்து அவனுக்கு அல்லது அவளுக்கு தானே எல்லாமுமாகி தோள்கொடுக்கும்



மாற்றம் என்பது இம்மண்ணுக்கே உரித்தான மானுடத்தின் போராட்ட வழிவந்த புதிய பிரசவங்கள் என்றுதான் கூறவேண்டும்.

தன்னைச்சுற்றி மிகமிக இறுக்கமான வேலிகளைப் போட்டிருந்தவளை சீருடை தரிக்க வைத்து, ஆயுதம் ஏந்தி களத்தில் எதிரியைச் சந்திக்க வைத்து, வீரத்திலும் தியாகத்திலும், விடுதலை உணர்விலும் ஆணுக்குப்பெண் சளைத்தவள் இல்லை என்பதை செயலுருப்படுத்திய தேச விடுதலைப் போராட்டம், பெண்கள் விடுதலையை நோக்கிய தனித்துவமான பாதையைத் திறந்து விட்டிருக்கின்றது. இத்தனித்துவப் போக்கை உலகிற்கு உணர்த்தவென இந்த மண்ணில் கொண்டாடும் மாலதி தினம் தன்னம்பிக்கை மிக்க, தனித்து தீர்மானம் எடுக்கும் ஆற்றல் உள்ள, குடும்பச் சுமையைப் பகிர்ந்து கொள்ளும் தற்துணிவுள்ள பெண்ணை உருவாக்கிய தேசவிடுதலைப் போரின் ஒரு குறியீடேயென்றால், இக்குறியீடு இவ்வுலகிற்குச் சொல்லுகின்ற, இனிச் சொல்லப்போகின்ற செய்திகள், அனைத்துலகப் பெண்கள் தினம் இவ்வுலகிற்கு உணர்த்தும் செய்திகளைவிடக் காத்திரம் மிக்கதாக முன்னுதாரணம் மிக்கதாக இருக்கும் என்பதில் வியப்பேதும் இல்லை.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'மேற்குலகப் பெண்ணியம்' தோல்வி கண்டுள்ளதா?

## 'மேற்குலகப் பெண்ணியம்' தோல்வி கண்டுள்ளதா?

பல ஆயிரம் வருடங்களாக, பெண்கள் பலவீனம் உடையவர்கள் என்ற ஐதீகம் எங்கும் பரப்பப்பட்டு அந்தத் தன்மையிலேயே அதனை பெண்கள்கூட நம்பிவந்தனர். இந்த ஐதீகமே ஆணாதிக்க சமுதாயத்தின் எழுச்சிக்கு அடிப்படை, பெண்களின் அடிமைத் தனத்திற்கு அடிப்படை. 'ஆண்களின் பாலியல் இச்சையைத் தீர்க்க மட்டுமே பெண்கள் பிறந்தவர்கள்' என்று, அவர்களை பகிரங்கமாக காமப் பொருட்களாக மாற்றும் காட்டுமிராண்டித் தனத்திற்கு அடிப்படை.

இந்த ஆண் ஆதிக்கத்தின் அத்திவாரத்தையே நிலைகுலையச் செய்யும் பலத்த அடியைக் கொடுக்க தமிழீழப் பெண்கள் முன்வந்துள்ளார்கள். இந்த அடி, உலகின் அடக்குமுறைச் சக்திகளுக்கூடாக தனது அதிர்வலைகளைச் செலுத்தி உள்ள அதேநேரம், பெண்கள் இயல்பிலேயே பலவீனமானவர்கள் என்ற ஐதீகத்தில் இருந்து அவர்களது அடக்குமுறையாளர்களை விடுவித்துள்ளது.

## விடுதலைப் போராட்டத்தில் தமிழீழப் பெண்கள்.

தமிழீழப் பெண்கள் எட்டியுள்ள சாதனையானது மனித வரலாற்றிலேயே அடையப்பட்டுள்ள மிக முக்கிய சாதனையாகும். தமிழீழப் பெண்கள் போர்க்களத்தில் சிங்கள ஆண்களுக்கு முகம்கொடுத்து அவர்களைக் கொன்றுகுவிப்பதோடு அல்லாமல் (சிங்கள) ஆண்களைக் கொண்ட ஒரு இராணுவத்தை, தனித்து நின்று எதிர்கொள்கின்றார்கள். தங்களது சொந்த யுத்த தந்திரோபாயங்களைப் பிரயோகிக்கின்றார்கள். தங்களது சுயபலத்தைக் கொண்டு எதிர்த்து நிற்கின்றார்கள். வல்லரசுப் படைகளினால் பயிற்சி அளிக்கப்பெற்ற பலமான ஒரு ஆண் இராணுவத்தை எதிர்த்தவர்கள் இவர்கள். அதிகளவு சுடுதிறன் வழங்கும் ஆயுதங்கள் மற்றும் பீரங்கிப்படகுகள் போன்ற பெரும்படைப்பலங்களை தமது எதிரி கொண்டுள்ளபோதும் வெறும் இலகு இயந்திரத் துப்பாக்கிகளையும் மோட்டார் எறிகணைகளையும் குறுந்தூர டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளையும் கொண்டே இப் பெண் போராளிகள் எதிரியுடன் களமாடுகின்றனர். அதிலும் முக்கியமானது அவர்கள் தற்போது 'பெண்கள் படையணியாக' தனித்து நின்று வெற்றிகளைப் பெற்றுச் சாதனை படைக்கின்றமையாகும்.

இது ஏன் முக்கியமானது? ஆண்களோடு யுத்தம் புரிந்து பெண்களால் வெல்லமுடியும் என்பதை சமூகம் அறிந்தால், பெண்கள் இனி வரும் காலங்களில் ஆணுக்கு அடிமையாகவோ, அவனுக்கு அஞ்சியோ வாழ வேண்டிய தேவையேற்படாது. பெண்கள் தாங்கள் பலவீனமானவர்கள் என்ற உணர்வுடன் நடந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. தாங்கள் இயலாமையுடையவர்கள் என்றோ, புத்தி சாதுரியம் அற்றவர்கள் என்றோ எண்ணிக் கொள்ளத் தேவையில்லை. உடல் ரீதியாக தம்மை ஆட்கொள்வதற்கு ஆண்களை அனுமதிக்க வேண்டிய அவசியமில்லை. போர்க்களத்தில் தமிழீழப் பெண்கள் அடைந்துள்ள வெற்றிகளின் முழுமையான விளைவுகளினால் தமிழ்ச் சமுகத்திற்குக் கிடைத்துள்ள நன்மைகள் பெருமளவிலானவை. மேற்குலகம் கேள்விப்படாத அனுகூலங்களை இது கொடுத்துள்ளது. முதலாவதாக பெண்களின் அடக்குமுறையின் வேரிற்கே சவால் விடுக்கும் முகமாக, சமூகத்தில் உள்ள பெண்களின் பாதுகாப்பிற்கு இந்த தமிழீழ அமைப்பு முன்னுரிமை அளித்துவருகின்றது. பெண்களின் உடல் ரீதியான பலத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டு இளந்தலைமுறைப் பெண்களுக்கு கராத்தே போன்ற தற்காப்புப் பயிற்சிகளைக் கற்றுக் கொடுப்பதன் மூலம், ஆண்களுடனான சம அந்தஸ்த்தைப் பெண்கள் வகிப்பதற்கு தேவையான கட்டுமானத்தை உறுதிசெய்கின்றது. இந்த உடற்பலம் பற்றிய குறைந்தளவு அறிவுகூட ஆண்களினதும், பெண்களினதும் உளவியலில் பெரும் தாக்கத்தை ஏற்கனவே ஏற்படுத்தியுள்ளது. கராத்தேயில் தேர்ச்சியுள்ள பெண்களை பாலியல் பலாத்காரம் செய்யவோ அடிக்கவோ ஆண்கள் தயங்குவார்கள். தங்களைத் தாங்களே உடல் ரீதியாகப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய பெருமளவிலான பெண்கள் சமூகத்தில் உருவாகும்போது, பெண்களுக்கு எதிரான வன்முறை அளவுகளில் சடுதியான வீழ்ச்சியை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

விடுதலை நோக்கிய தமிழீழப் பெண்களின் இந்தக் குறிப்பிடத்தக்க முன்னேற்றப் பாய்ச்சலுக்கு வேறு சில விசேட காரணங்களும் உண்டு. பெண்களுக்கான பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கும் முகமாக, விபச்சாரமும் ஆபாச இலக்கியங்களும் தமிழீழ விடுதலை இயக்கத்தினால் முற்றாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளன. ஆபாச இலக்கியங்கள் எனப்படுபவை வெறும் வியாபாரமே அன்றி வேறில்லை. இங்கு பெண்களின் கவர்ச்சியான மேனிகளும் அவர்களின் ஆபாசமான தோற்றங்களும் பாலியல் பொருட்கள் என்ற பாவனையில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு விற்பனை ஆகின்றன. இவற்றுக்கு உதாரணமாக நீலப்படங்கள் மற்றும் ஆபாசக் கேளிக்கைக் கூடங்கள் போன்றவற்றைக் கூறலாம்.

இந்த ஆபாச இலங்கியங்களே பாலியல் வன்முறைகளுக்குக் காரணம் என்று மேற்குலகப் பெண்ணியவாதிகளால் அடையாளம் காணப்பட்டபோதும் இந்த ஆபாச இலக்கியங்களின் பெருக்கத்தின் தீவிரத்தை தடுத்து நிறுத்தமுடியவில்லை. இந்த ஆபாச இலக்கியங்களை சட்டவிரோதமாக்குவதற்கு ஆணாதிக்க மற்றும் முதலாளித்துவ நிறுவனங்கள் கடும் எதிர்ப்புடன் சவால் விட்டுள்ளன. அது மட்டுமல்லாமல் இதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யும் பெண்களை கேலிக்குரியவர்களாக்கி பொதுப்படையாக மானபங்கப் படுத்துகின்றனர். இன்றைய மேற்குலகப் பெண்ணியவாதிகளின் நிலைமை ஒன்றில் அடக்குமுறைக்குள்ளாக்கப் பட்டிருக்கின்றது. அல்லது வலிமையற்றதாக்கப் பட்டிருக்கின்றது. தமிழீழத்தில் இவற்றின்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீது விதிக்கப்பட்ட தடையானது மனித ஜீவன்கள் என்ற ரீதியில் பெண்களுக்கான இயல்பான மரியாதையை வழங்குவதற்கான ஆரம்பத்திற்கு உதவியுள்ளது. தமிழீழத்தில் இல்லாதொழிக்கப்பட்டுள்ள 'விபச்சாரம்' அதாவது பாலியல் நோக்கத்திற்காக உடலை விற்கின்ற செயலானது, மேற்கு நாடுகளில் தாராளமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. பெண்களின் பாலியல் அடிமைத்தனத்தின் நேரடி விளைவு இதுவாகும். வெறும் நுகர்வுப் பொருள் என்ற வகையில் பெண்களின் உடல்கள் வாங்குவதும் விற்பதும் போன்ற இழிவுச் செயற்பாடுகளுக்கு உள்ளாகின்றன.

## மேற்குலகப் பெண்களின் 'பெண் விடுதலை'

மேலைத்தேய சமூகங்களில் பெண்ணிய அமைப்புக்களினதும் பெண் ஆய்வாளர்களினதும் பெண் அரசியல் வாதிகளினதும் பெருக்கம் அதிகமாகியிருக்கின்ற போதிலும், பெண்விடுதலை என்பது இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்னிருந்த நிலையைவிட பின்நோக்கியே சென்றுள்ளது. இங்கு பெண்ணியம் என்பது சுயம் சார்ந்த பாதைவழியே சென்றுள்ளதுடன், தனிப்பட்ட தன்மையை உடையதாகவே விளங்குகின்றது. அதாவது, இங்கு பெண்விடுதலை என்பது பெண்கள் தாங்கள் விரும்பும் எந்தப் பொருளையும் அவை உடனடிச் சந்தோசம் தரும் பட்சத்தில், அவை எவ்வளவு பிரயோசனம் அற்றவை என்றாலும் அவற்றை கொள்வனவு செய்வதற்கான சுதந்திரம் என்றும், தங்கள் உடல்களைப் போதைப்பொருள் பாவனைக்கும், புகையிலை மற்றும் மதுபானபாவனைக்கும் உள்ளாக்கி வருத்திக் கொள்வதற்குமான சுதந்திரம் என்றும், தாங்கள் விரும்பும் அளவிற்கு தங்கள் இஷ்டத்திற்கு பாலியல் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் சுதந்திரம் என்றும் பிரபலப்படுத்திக் கொள்கின்றனர். இந்த 'சுதந்திரங்கள்' மிகவும் தனித்து விடப்பட்டதும், அன்னியதுமான வாழ்க்கையை பெருமளவிலான பெண்கள் வாழ்வதற்கு வழிகோலும் பாதைக்கு இட்டுச் செல்கின்றன. அங்கு வாழும் பெண்களில் காணப்படும் இம்மாற்றமானது மிகவும் ஆழமான அறிவு கொண்டதாயிருக்கின்றது. ஆனால், விடுதலை பெற்றுத்தரக்கூடியதொன்றாகக் காணப்படவில்லை. ஏனெனில் ஒரு காலத்தில் தந்தையர்களாலோ, சகோதரன்களாலோ அடிமையாகக் கொள்ளப்பட்டவர்கள் தற்போது தொழில் நிறுவனங்களில் இலாபத்தைப் பெற்றுத்தரும் வியாபாரப் பொருட்களாக இருக்கின்றனர். பெண்களுக்கெதிரான வன்முறைக்குற்றங்கள் அதிகரிக்கின்றனவேயொழிய குறையவில்லை. அது மட்டுமல்லாமல் ஒரு பெண் நன்னடத்தை கொண்டவள் என்றாலும் அதற்கான மதிப்பை தன் சொந்த சகோதரர்களிடமிருந்துகூடப் பெற்றுக் கொள்ள முடிவதில்லை. இதற்குச் சான்றாக குடும்பத்தில் நடைபெறும் சாதாரண சச்சரவுகளின்போது பெண்ணை பாலியல் ரீதியாக இழிவுபடுத்தி அவளைப் பொதுவில் அவமானப்படுத்தும் வார்த்தைப் பிரயோகங்களைக் கூறலாம்.



## மேலைத்தேய பெண்ணியத்திற்கு தோல்வியே!

பெண்ணியம் அல்லது பெண்விடுதலை என்ற சொற்களின் நிறைவான கருத்தை மேற்குலகப் பெண்ணியம் கொண்டிருக்கவில்லை என்பதே நாம் எடுத்துள்ள முடிவு. அதாவது, பெண்களின் விடுதலைக்கு ஒரு பலமான அத்திவாரத்தைக் கட்டியெழுப்புவதில் மேற்குலகப் பெண்ணியவாதிகள் தோற்றமைக்கான காரணம் இங்கு ஆயுதம் தாங்கிப் போராடும் ஒரு பெண்விடுதலை அமைப்பு காணப்படாமையே என்று வெளிப்படையாகக் கூறலாம்.

இருந்தபோதும், இந்த ஆணாதிக்க முறைமையினுள் உள்வாங்கப்படுவதற்கு நாம் பலவந்தப் படுத்தப்படுகின்றோம் என்ற ஐதீகத்தை பரப்பும், குடியேற்றநாட்டவர் என்ற போக்கைக் கொண்ட இவர்களை இது தடுக்கவில்லை. இங்குள்ள இவர்களுடைய சகாக்கள் 'கொழும்புப் பெண்ணியவாதிகள்' என்று அழைக்கப்படுகின்றனர். பெண்ணியவாதிகள் என்று அழைக்கப்படும் இவர்கள் ஆணாதிக்கம் நிறைந்த குடியேற்றவாதக் கல்வியையே பெற்றுக் கொண்டுள்ளார்கள். (அதிகாரத்தின் மூலமும் விளம்பரப்படுத்தல் மூலமும்) அதேநேரம் இங்குள்ள பெண்களின் நிலை பற்றி பொருத்தப்பாடான தகுந்த சிந்தனைகள் எதனையும் கொண்டவர்களாக இல்லாமல் தோல்விகாணும் மேலைத்தேய பெண்ணியத்தின் போக்கை பிரதிபண்ணுபவர்களாகவே உள்ளனர்.

சேர்ந்தியங்கும் தத்துவத்தின் ஒரு பகுதியாக, வல்லாதிக்கத்தின் ஒரு பகுதியாக தங்களைத் தாங்களே இவர்கள் மாற்றிக் கொண்டுள்ளார்கள். அத்துடன், தமிழீழப் பெண்போராளிகளைச் சிறுமையாக்கி அவர்களைத் திசைதிருப்பும் முயற்சிகளை செய்யத் தலைப்படுகின்றார்கள் இந்தக் கொழும்புப் பெண்ணியவாதிகள். இவர்களுக்கு சரியான உதாரணம் ராதிகா குமாரசுவாமி, தமிழீழப் பெண்களுக்கு எதிராக சிறீலங்கா இராணுவம் இழைக்கும் கொடுமைகளைப் பற்றியும் அநீதிகளைப் பற்றியும் இவர்கள் பாராமுகமாகவே உள்ளனர். அதே நேரம் அப்படியான இராணுவத்தை எதிர்த்துநின்று துணிவுடன் போர்புரியும் பெண்களைப் பற்றி விமர்சனம் செய்கின்றனர். ஆணாதிக்கத்தின் கூட்டாளி என்பதற்கு ராதிகா குமாரசுவாமி ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. ஏனெனில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றி அறிக்கை சமர்ப்பிப்பதற்காக வேண்டி ஐக்கிய நாடுகள் சபையினால் நியமிக்கப்பட்ட விசேட நிருபர் இவர். ஆனால், உண்மை இதுதான். உலகின் மிகவும் கொடுமையான வன்முறைகள் மேற்கொள்ளப்படும் நாடுகளில் இருந்து வந்த இவர், பெண்களுக்கு எதிராக மோசமான வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடும் அதே அரசின் ஆதரவைப் பெறுகின்றார். வெற்றிகரமான விதத்தில் உண்மைகளை மூடிமறைத்து தன்னைத் தக்கவைத்துக் கொள்ள முயற்சி செய்யும் இவர் இவ்விடயம் தொடர்பாக உலகின் கவனத்தை ஈர்க்கச் செய்வதில் தொலைவில் இருக்கின்றமை ஆச்சரியப்படுவதற்கில்லை.

## முடிவு.

தமிழீழப் பெண்களாகிய நாம் அடிமைத் தளையிலிருந்து மீண்டுகொள்ள ஆயுதப் போராட்டத்தில் இறங்கியுள்ளோம். எமது இந்த முயற்சிகள் பலவகையிலும், கொழும்பு பெண்ணியவாதிகளால் தடுக்கப்பட்டபோதும், விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டபோதும் வேறுபல நாடுகள் தோல்விகண்ட இப்பாதையில் வெற்றிநடை போடுகின்றோம். நமது அமைப்பில் உள்ள பெண்கள் மத்தியில் காணப்படும் ஒற்றுமையும், அமைப்பிற்குள்ளேயும் வெளியேயும் உள்ள ஆண்களின் ஒத்துழைப்பும் நாம் வெற்றியடைகின்றோம் என்பதற்கு சான்றுகளாகும். அத்துடன் தமிழீழத்தின் ஆண்கள் தமது சகோதரிகள் போன்றே அன்புடனும் மரியாதையுடனும் பெண்களை நோக்குகின்றனர். இது ஆணாதிக்க சமுதாயத்தை குறிப்பிட்டளவு மாற்றியமைத்துள்ளமைக்கு அத்தாட்சியாகும்.

ஆங்கில மூலம் 'கொற்றவை' (லண்டன்)

தமிழில் தீப்பொறி.

**மேற்குலகப் பிரஜையாக ஒரு பெண் பத்திரிகையாளர் சிலகாலம் தமிழீழத்தில் வாழ்ந்து திரும்பியபோது தமிழீழ விடுதலைப் போராட்டமானது பெண் ஒடுக்குமுறையை எப்படித் தகர்த்துள்ளது என்பதை நேரில் உணர்ந்து தமிழீழப் பெண்ணியத்தையும் மேற்குலகப் பெண்ணியத்தையும் ஒப்புநோக்கி எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்...**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





வான்கோ

வான்கோதான் நிறங்களை மெய்யான அர்த்தத்தில் விடுதலை செய்தவர். நிறங்களை விடுதலை செய்யத் தேவையான துணிச்சலும் தீர்க்கதரிசனமும் அவரிடமிருந்தன. 20ஆம் நூற்றாண்டை மிகக் கூர்மையாகவும், தீர்க்கதரிசனமாகவும் முன்னுணர்ந்தவர் அவர்தான். இத்தகைய அர்த்தத்தில் கூறுமிடத்து வான்கோதான் நவீன ஓவியத்தின் தந்தை. ஆனால், பொதுவாக விமர்சகர்கள் அவ்விதம் கூறுவதில்லை. பதிலாக போல் செசானைத்தான் அவ்வாறு அழைக்கிறார்கள். இது எல்லா தீர்க்கதரிசிகளுக்கும் வழமையாக நடப்பதுதான்.

செசான், வான்கோ இருவரும் சற்றேறக்குறைய சம காலத்தவர்கள். 19ஆம் நூற்றாண்டின் இம் பிரசனிசத்தை 20ஆம் நூற்றாண்டை நோக்கிப் புதுப்பித்தவர்கள். குறிப்பாக செசான் வடிவங்களின் மீது அதிகம் பரிசோதனை செய்தவர். இப்பரிசோதனைகளின் பேறாய் எல்லா வடிவங்களுக்கும் ஏதோ ஒரு கேந்திர கணித மூலவடிவம் உண்டு என்று கண்டுபிடித்தார். இவரது இந்தக் கண்டுபிடிப்பு பின்நாளில் கியூபிஸ்ருக்களை அதிகம் அருட்டிவிட்டது. இது காரணமாகவே செசான் நவீன ஓவியத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.

ஆனால், வான்கோவுடன் ஒப்பிடுகையில் செசான் அதிகம் புத்திபூர்வமானவராகத் தோன்றுகிறார். வான்கோவோ புத்தியின் தலையீடு எதுவுமின்றி முழுக்க முழுக்க உணர்ச்சிகளின் வசப்பட்டு வரைந்தவர். அவரது காலத்தில் யாராலும் அவரைப் புரிந்துகொள்ள முடியவில்லை. யாருமே அவரை அங்கீகரிக்கவில்லை. எல்லோருக்கும் அவர் ஒரு புறம்போக்காகத் தோன்றினார். மேதைத்தனமும் கிறுக்குக்குணமும் கலந்த ஒரு புதிரான கலவையாக வான்கோ வந்தபோது எல்லாருமே அவரைப் பைத்தியம் என்றார்கள். செசான் ஒருமுறை வான்கோவைப் பார்த்து 'ஏன் பைத்தியக்காரனைப் போல் வரைகிறாய்' என்று கேட்டார். நவீன ஓவியத்தின் தந்தை என்று அழைக்கப்பட்டவராலேயே புரிந்து கொள்ளப்படமுடியாத அளவிற்கு வான்கோ அதிநவீனமானவராயிருந்தார். வான்கோ 37 ஆண்டுகள்தான் வாழ்ந்தார். அதிலும் குறிப்பாகக் கடைசி 9 ஆண்டுகள்தான் வரைந்தார். ஒரு தொழிலும் ஒத்துவரவில்லை. வறுமையும் பிணியும் அவரைத் துன்புறுத்தின. இடையில் ஏற்பட்ட காதல் தோல்விகள் அவரை ஆறுதலடைய விடவில்லை. ஒருமுறை தன்னை மதியாத ஒரு விலைமாதுவுக்குப் பரிசாக தனது காதொன்றை அறுத்து அனுப்பினார் வான்கோ. அவரது காலத்தில் அவரது ஒரு ஓவியம்கூட விற்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. அவர் உயிரோடு இருந்தவரை அவரைப்பற்றி ஒரேயொரு கட்டுரைதான் வெளிவந்திருந்தது. அந்தக் கட்டுரையை வான்கோ அழுதழுது வாசித்தார். கடுங்குளிரில் போர்த்திக்கொள்ள போர்வையிருக்கவில்லை. தனது கன்வஸ்களையே வான்கோ போர்த்திக்கொண்டார்.

யாராலும் அவரைப்







தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இருபதாம் நூற்றாண்டின் இஸங்கள்


வான்கோவின் ஓவியம்


வான்கோவின் ஓவியம்

புரிந்துகொள்ளமுடியவில்லை. யாரோடும் அவராலும் ஒத்துப்போக முடியவில்லை. கடைசிவரை அவருக்கு ஆறுதலாயிருந்தது டொக்ரராயிருந்த அவரது தம்பி தியோதான். ஆனால், தியோவுக்கும்கூடத் தெரியாது தனது அண்ணன் ஒரு நாள் தன்னைத் தானே சுட்டுக்கொண்டு இறந்துபோய்விடுவான் என்று. வான்கோ வழமைக்கு மாறாகவே வாழ்ந்தார். வழமைக்கு மாறாகவே இறந்தார் என்பதால் வழமைகளை மீறும் வீரியமும் தீர்க்கதரிசனமும் அவரிடமிருந்தன.

நிறங்கள் அவரது வருகைக்காகவே காத்திருந்தனபோல வேக வேகமாக விடுதலை பெறத் தொடங்கின.

ஒரு பொருள் என்னவாயிருக்கிறது என்பது வான்கோவிற்கு முக்கியமாயிருக்கவில்லை. அது அவரிடத்தில் எத்தகைய உணர் நிலைகளைக் கிளறிவிட்டது என்பதே அவருக்குப் பிரதானமாயிருந்தது. அப்படிக் கிளறப்பட்ட உணர் நிலைக்குரிய நிறங்களையே அவர் தீட்டினார். அநேகமாக தேய்ந்து மொட்டையானது போலத் தோன்றிய அவரது மந்திரத் தூரிகையின் ஸ்பரிசத்தால் நிறங்கள் முன்னெப்பொழுதையும்விட வேகமாக விடுதலை பெறத்தொடங்கின.

வான்கோவின் மொட்டைத் தூரிகை வானத்தை மஞ்சளாக்கியது. வயலை நீலமாக்கியது. மனிதர்களை வயலில் பாதி, வானத்தில் பாதியாகக் கரைத்துவிட்டது. ஆனால், வான்கோவை அவரது விமர்சகர்கள் கூறியதுபோல, 'பைத்தியக்காரனாக்கியது' உண்மையில் வான்கோதான் நவீன ஓவியத்தின் தந்தை. ஏனென்றால், அவர்தான் நிறங்களை மெய்யாக விடுதலை செய்தவர். ஆனால் வடிவங்களில் அவர் அதிகம் சோதனை செய்யவில்லை. இது பின்னாளில் செசானில் தொடங்கி கியூபிஸ்ருக்களால் முழுவிசையோடு மேற்கொள்ளப்பட்டது.

(தொடரும்)

நிலாந்தன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெரியவன் அந்த உயர்ந்த பனையின் அரைவாசிக்கு ஏறிவிட்டான். முன்னால் தெரிந்த காட்டுப் பிரதேசம், காலை நேரத்தில் மிக அழகாகவே இருந்தது. ஆனால், அழகை ரசித்துக்கொண்டிருக்க அவனால் முடியாது. தொடர்ந்து ஏறினான். அப்பனையின் முக்கால் பங்கைத் தாண்டிய பின், ஒருமுறை திரும்பிப் பார்த்தான். தூரத்தில் அந்த வயல்வெளிகளைத் தாண்டி பெரிய வெளியில், பிரசித்திபெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் தெரிந்தது. அதற்குப் பின் இருந்த நந்திக் கடலும் நன்றாகவே தெரிந்தது. எப்பொழுதுமே உயரத்தில் இருந்து பார்க்கையில் உண்மையையும் முழுமையையும் காணலாம் என எண்ணிக்கொண்டு, தொடர்ந்து ஏறினான்.

பெரியவனுக்கு இப்பொழுதுதான் பதினைந்து வயதாகிறது. ஆனால், அதற்கிடையில் அவனை நம்பி நாலு தம்பி, தங்கைகள் வீட்டில் காத்திருக்கிறார்கள். அவன் இன்று கள்ளு இறக்காவிடின் அனைவரும் பட்டினிதான். அப்பொழுதுதான் நாலு ஐந்து வெடிச் சத்தங்கள் கேட்டன. 'வந்திட்டாங்கள், துலைஞ்சுது! இண்டைக்கு ஆர் ஆரோ தெரியேலை' என நினைத்தபடியே, திரும்பிப்பார்த்தான். பாடசாலைக்குள் அந்தப் பச்சைப்பேய்கள் தெரிந்தன. சீக்கியர்கள்தான் வந்திருக்கிறார்கள். தலைப்பாகைகள் தெரிகின்றன. 'இப்ப இறங்கிப்போனால் இவங்களிட்ட அடிவாங்க வேண்டும், பத்து நாளைக்கு சீவ ஏலாது. வீட்டிலயும் பட்டினிதான் கிடக்கவேணும்' என எண்ணியபடியே, மரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தான். அவனது சிந்தனைகள் கடந்த காலத்தில் இருந்தன.

அப்பாவையும், அம்மாவையும் இவங்கள்தான் பிடித்தாங்கள். ஒரு வருசமாகப் போகுது. எங்கேயோ தெரியவில்லை. இந்தியப் படையின்ர எல்லா முகாமிலயும் போய்க் கேட்டாச்சு. முல்லைத்தீவில, வவுனியாவில, திருகோணமலையில, பலாலியில.... ஒரு இடமும் இல்லையாம் தாங்கள் பிடிக்கேலயாம். சீ இவங்கட நாற்றம் பிடிச்ச படைமுகாமுக்கை கைகளும் கால்களும் கட்டுப்பட்டு அதுகள் பாவம் என்ன சித்திரவதை அனுபவிக்குதுகளோ! யாருக்குத் தெரியும்? பெண்கள் என்றாலே நாயாக அலையும் இந்த நாய்கள் என்னபாடு படுத்துதுகளோ, அவையோட போன என்ரை கடைசித் தம்பியையும் தங்கச்சியையும், அம்மாவோடதான் விட்டாங்களோ தெரியாது. அதுகள் கைக்குழந்தைகள். அன்றுகூட குழந்தையளுக்கு கடுமையான சுகமில்லையெண்டுதான் மருந்தெடுக்கப் போனதுகள். வற்றாப்பளை அம்மன்கோயில் கோபுரத்தைப் பார்த்தபடியே, 'அம்மாளாச்சி நீதான் அதுகளைக் காப்பாற்றவேண்டும்' என



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெறுப்புக் கோலங்கள்



வில்லுக்குளத்துப் பறவைகள்-9

சற்று வாய்விட்டே உரத்துக் கூறினான். அடுத்த கணம் தவறுவிட்டவன்போல சலித்தபடியே 'அம்மாளாச்சி! உன்னால உன்ரை கோயிலுக்குள்ள அகதிகளாக தஞ்சமடைந்தவர்களையே காப்பாற்றமுடியேல. நீ எப்படி என்ரை அப்பாவையும் அம்மாவையும் காப்பாற்றப் போகிறாய்? உன்ரை கோயிலுக்கு உள்ளதானே ஆறுமுகம் வாத்தியாரும் இன்னும் ஆறு அப்பாவிகளும் ஷெல் விழுந்து செத்தவர்கள்!' என எண்ணியபடியே இறங்கிக் கொண்டிருந்தான். தூரத்தில் இந்தியப்படையினர் சென்றுகொண்டிருந்தனர். அவர்களை நன்றாகப் பார்த்தான். 'அட நடுவில செம்மறி முத்தனும், ராசனும் போய்க்கொண்டிருக்கினம். ஊருக்கு உதவாத வேலையளைச் செய்திட்டு, ஈப்பிக்கு ஓடினவங்கள். இப்பவந்து தங்களுக்கு பிடிக்காதவங்களை எல்லாம், புலிகள் என இந்தியருக்குக் காட்டிக்கொடுக்கிறாங்கள். இந்தியப் படை போனபிறகு இவங்கள் என்ன செய்யப் போறாங்கள் பார்ப்பம். நானே அடிச்சுக் கொல்லுறனோ இல்லையோ பாரன்' என எண்ணியபடியே நடந்தான்.

1987 மார்கழி, முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்தியப் படையினர் தங்களின் காட்டுமிராண்டித் தனத்தைக் கட்டவிழ்த்து விட்டிருந்தனர். இடைவிடாத ஷெல் தாக்குதல்கள், கொடூரக்கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள் தொடர்ந்துகொண்டிருந்தன. அமைதிகாக்கும் படை ஊரை அழித்துக்கொண்டிருந்தது. கொடுமையாக, மிகக் கொடுமையாக அழித்துக்கொண்டிருந்தனர். அப்பொழுதுதான் ஒருநாள்.......

இரத்தினத்தின்ர கடைசிப் பிள்ளைகள் இரண்டும் நோய்ப்படுக்கையில் கிடந்தனர். தேவராசா வைத்தியரும் கைவிரிச்சுப்போட்டார். 'ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக வேண்டும்' அந்த ஓலைக் குடிசையின் திண்ணையிலிருந்து இரத்தினம் சிந்தித்துக் கொண்டிருந்தான். முப்பத்தியேழு வயதிலும் அவனது இரும்புத்தேகம் நடுங்கிக்கொண்டிருந்தது. அவனது மனைவி, தனது பிள்ளைகளின் தலைமாட்டிலிருந்து அழுதுகொண்டிருந்தாள். முப்பத்திநான்கு, வயதிற்குள் எட்டுப் பிள்ளைகளைப் பெற்றுப் போட்ட அவளால், அந்த நிலைமையைத் தாங்கமுடியவில்லை. அவள் தனது கணவனிடம் கூறினாள்.

'வாப்பா! போவம், அவங்கள் சுட்டாப் பரவாயில்லை, என்ர கண்ணுக்கு முன்னால என்ர பிள்ளைகள் சாவதைப் பார்த்துக்கொண்டிருக்க என்னால ஏலாது' இரத்தினம் நிமிர்ந்தபடியே கூறினான். 'நான் கொண்டு போய்ட்டு வாறன்'

'ஓ, நீ செத்த பிறகு நான் உயிரோட இருப்பன் என்று நினைக்கிறாயா! நானும்வாறன்' என்றபடியே வெளிக்கிட்டாள் அவள்.

பெரியவன் சமையற்கட்டின் திண்ணையில் அமர்ந்திருந்தான். அவனைச் சுற்ற அந்தச் சின்னஞ் சிறுசுகள் ஐந்தும் ஒட்டியிருந்தன. தலைக்கு மேலாகச் செல்லும் ஒவ்வொரு ஷெல்லும் சற்றுத் தள்ளிவிழுந்து அதிரும்பொழுது, அதுகள் அலறியபடியே அவனைக்கட்டிப் பிடித்தன. பெரியவன் தூரத்தில் தெரியும் காட்டை வெறித்துப் பார்த்தபடியே இருந்தான். அவனது தாயார் கூறினாள், 'தம்பி பெரியவன், அந்த சிவப்புச் சேலையையும், சட்டையையும் எடடா, ஆஸ்பத்திரியில நிக்கவேண்டி வந்தாலும் வரும்'

அவர்கள் புறப்பட்டனர். இரத்தினம் தனது மகன் பெரியவனை அழைத்தான்.

'தம்பி பெரியவன், தம்பி தங்கச்சிகளை நல்லா பார்த்துக்கொள் ராசா, நாங்கள் வந்திடுவம், ஏதும் பிரச்சினை எண்டால் அம்மம்மா வீட்ட போங்கோ'

இரத்தினம், ஒரு கணம் பிள்ளைகளை ஏக்கத்துடன் பார்த்தான்.

அவர்கள் வற்றாப்பளைச் சந்திக்கு வந்தனர். ஊர் அடங்கி இருந்தது. விடிந்து பத்து மணிகூட ஆகவில்லை. மூன்றாம் கட்டையை நோக்கி நடந்தனர். பெரும் வீதியைத்தாண்டி வயல்வெளியில் வந்துகொண்டிருந்தனர். தூரத்தில் முல்லைத்தீவு பிரதான வீதியில் மஞ்சள் பாலம் தெரிந்தது. இருவரும் திரும்பிப்பார்த்தனர். வற்றாப்பளை அம்மன் கோயில் நன்றாய்த் தெரிந்தது. 'அம்மாளாச்சி, நீதான் காப்பாற்றவேண்டும்' அவர்களது தலைக்கு மேலாக ஷெல்கள் சென்றன. தூரத்தில் துப்பாக்கி வெடிகளும் கேட்டன.


'இவங்கள் ஏன் நிழலைக்கண்டெல்லாம் பயப்படுறாங்கள் 'புல் பூண்டெல்லாம் புலிகளோ இவங்களுக்கு! உலகத்தில் புலிகளைத் தவிர வேற உயிர்களே இல்லையோ? ஏன் இப்பிடிச் செய்கிறாங்கள்' என்றாள் இரத்தினத்தின் மனைவி.

'இவையள் புலிகளையும் பிடிக்கப் போறதில்லை, எலிகளையும் பிடிக்கப் போறதில்லை. எங்களைப் போன்ற அப்பாவிகளைத்தான் பிடிப்பாங்கள். நீ



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேகமா நட' என்றான் இரத்தினம்.

இரத்தினம், எப்பொழுதுமே, எவருக்குமே பயந்து நடப்பவனில்லை. சிறுவயது முதலே பனையேறி உரத்த உடம்பு. எந்நேரமும் பாளைக் கத்தியுடன் திரிவதால் அவனை எவருமே நெருங்குவதில்லை. ஆனால், இன்று இந்த அரக்கர்களின் துப்பாக்கிகளின் முன்... மூன்றாம் கட்டைச் சந்தி தெரிந்தது. திடீரென அவர்களை நோக்கி சில வெடிச்சத்தங்கள், 'கான்ட்ஸ் அப்' எனக் கத்திக்கொண்டே பற்றைகளுக்குள்ளிருந்து ஓடிவந்த இந்தியப் படையினர், அவர்களைச் சுற்றிநின்றனர்.

'ஐயா! ஆஸ்பத்திரிக்கு...' அவனது வயிற்றில் ஒரு உதை விழுந்தது. தொடர்ந்து பல உதைகள் அடிகள், அவனது தோளிலிருந்த குழந்தையை ஒருவன் பறித்தான். மேலும்பல உதைகள் அவனுக்குப் புரியாத மொழியில் ஏசியபடியே விழுந்தன. நிமிர்ந்து பார்த்தான். ஒரு சீக்கிய சிப்பாய், அவனது குழந்தையின் கழுத்தை முறித்துவிட்டுக் கீழே எறிந்தான். வீரிட்டுக்கொண்டிருந்த குழந்தை அடங்கியது.

'ஐயா! என்ர குழந்தை'

மேலும்பல அடிகள், துப்பாக்கிகளின் அடிப்பாகங்கள் அவனது தலையில், முகத்தில்... தள்ளாடியபடியே விழுந்தவன் மீண்டும் நிமிர்ந்து பார்த்தான். அவனது மனைவி சேலை அகற்றப்பட்டு, சட்டை கிழிக்கப்பட்டு, பத்து பதினைந்து இராணுவத்தினர் அவளைச் சுற்றி, ஒரு சிப்பாயின் முரட்டுக் கரங்கள் அவளது பாவாடையை...

இரத்தினம் கிளர்ந்தெழுந்தான். முன்னால் நின்ற இரு சிப்பாய்களும் சற்றுத் தள்ளி விழுந்தனர். பின்னால் வந்தவனுக்கு ஒரு உதை. தனது மனைவியை நோக்கி நான்கு அடிகள்... ஒரு சிப்பாயின் எஸ்.எம்.ஜி. துப்பாக்கி ரவை முடியும்வரை இயங்கியது. இரத்த வெள்ளத்தில் அவன் தலை நிமிர்ந்தான். அவனது மனைவி சாறு பிழியப்பட்டு வெறும் சக்கையாகிக்கொண்டிருந்தாள். அவள் கையிலிருந்த கைக்குழந்தை சற்றுத் தள்ளிக்கிடந்தது. அதன் கழுத்தில் ஒரு சிப்பாய் தனது 'பூட்ஸ்' கால்களால் மிதித்து, அது இறந்த பின்பும் நசித்துக்கொண்டிருந்தான். 'இவர்கள் இதற்குப்பதில் சொல்ல வேண்டும். எத்தனை காலஞ் சென்றாலும் எனது பிள்ளைகள் இவர்களைப் பழிவாங்குவார்கள்'

மேலும் இரண்டு ரவைகள் அவன் தலையில், இந்த மனிதர்களின் குரல்கள் அந்த மிருகங்களுக்கு விளங்கவில்லை.

ஒரு வருடத்தின் பின்பு...

மூன்றாம் கட்டை இந்தியப்படை முகாமிற்கு அருகில் இருந்த அந்த பற்றைக் காட்டுக்குள் எவருமே போவதில்லை. அப்படிச் சென்றால் அவர்கள் சுட்டுக்கொல்லப் படுவார்கள். ஆனால், அன்று மாலை சில மாடுகள் அதற்குள் சென்றுவிட்டன. மாடு மேய்க்கும் சிறுவன் மாடுகளை நோக்கி ஓடினான். மாடுகளை துரத்தியபடியே கீழே பார்த்தான். ஒரு மண்டையோடு, நிமிர்ந்தான், மரத்தில் முள்ளுக் கம்பிகளால் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது ஒரு மனித எலும்புக்கூடு. பயத்தில் திரும்ப ஓடினான். வழியில் ஒரு சிறிய மண்டையோடு. அதனைத் தாண்டி ஓடிக்கொண்டிருந்தான் ஊரை நோக்கி, கிராமம் முழுவதும் கதை பரவியது.

பெரியவன் சிந்தித்துக்கொண்டிருந்தான். ஒருவேளை எனது தாய் தந்தையருடையதோ?' மனம் இருப்புக்கொள்ளவில்லை. தனது சித்தப்பா, மாமாவினருடன் பேசினான். அவர்கள் நால்வரும் அவ்விடத்தை நோக்கிப் புறப்பட்டனர். இந்தியப் படையினர் எவ்வளவு பேரைக் கொன்றுவிட்டார்கள்! இது ஆற்றை எலும்புக்கூடோ ஆருக்குத்தெரியும். கிராமத்தவரின் வழமைபோலவே அவர்களின் மனமும் வற்றாப்பளை அம்மனை நினைத்துக் கொண்டது.

'இவர்களாக இருக்கக்கூடாது' மாமா கூறினார்.

'அவங்கள் கண்டால் பிரச்சினை. சட்டைகளைக் கழட்டுங்கோ மாடு மேய்க்கிறவை மாதிரி நாலு பேரும் வெவ்வேறு திசையாலபோவம்'

அவர்கள் அவ்விடத்தை அடைந்தனர். முதலில் அந்தச் சிறியதலையோடு, பின்பு மரத்தில் கட்டப்பட்டிருந்த மனித எலும்புக்கூடு ஆகியவை தெரிந்தன. மனித நேயத்தை மறந்த அந்த மிருகங்களின் கொடூரச் செயல், அவர்களின் மனங்களில் கொதிப்பை உண்டாக்கிக் கொண்டிருந்தது.

பெரியவன் சிறிது தள்ளி இருந்த பற்றைக்குள் குனிந்து பார்த்தான். மீண்டும் ஒரு மனித எலும்புக்கூடு, மனித உடல் உக்கிய பின்பும், நிலத்தில் புதைத்தும் புதையாமல் கிடக்கும் அந்த நீண்ட தலைமயிர்கள். அது ஒரு பெண் என்பதைக் காட்டியது. பெரியவன் அருகில் இருந்த சிறிய மரத்தில் சாய்ந்தான். அவனது கண்களில் ஒரு பொலீத்தின் பை தெரிந்தது. மரத்தின் கிளைகளுக்கிடையில் செருகப்பட்டிருந்த அதை எடுத்துப் பிரித்தான். அந்தச் சிவப்புச் சேலையும், சட்டையும்! அது அவனுக்கு தெரிந்த சேலையும் சட்டையும். அவனது அம்மா புறப்படுகையில் அவன் கொடுத்துவிட்டது, கத்துவதற்கோ, அழுவதற்கோ தெரியாது அவன் வாயினைத் திறந்தான்.

அவனது வாயை மூடியபடியே மாமா கூறினார்.

'அது அம்மாதான், தம்பி தங்கச்சியின்ர எலும்புக்கூடுகளும் இருக்கு. அழுவதால் பிரயோசனம் இல்லை. பின்பு நீ ஏதாவது செய்துகொள்! இவங்கட அநியாயத்தை நான் மறக்கமாட்டேன் நீயும் ஒருபோதும் மறந்திடாதை'

அவர்கள் அப்பகுதி விறகுகளையும், கட்டைகளையும் குவித்தனர். நான்கு எலும்புக்கூடுகளையும் ஒன்றாகவே வைத்து, பெரியவனே தீயிட்டான். புகை வானத்திற்கு எழுந்தது. நான்கு தலையோடுகளுடனும் அவர்கள் நால்வரும் இப்பொழுது, துணிந்து நிமிர்ந்து நடந்தனர். அவர்களது மனங்களில், வெறுப்பு மண்டிக்கிடந்தது. வேதனை நிறைந்திருந்தது. இராணுவத்தினரால் என்ன செய்யமுடியும்? சுடமுடியும், அதைத் தவிர அவர்களால் என்னதான் செய்யமுடியும்? எழுந்த புகையை நோக்கி இந்தியப்படையினரின் ஷெல்கள் வந்துவிழுந்தன. இந்த அடக்குமுறை இயந்திரங்கள் துப்பாக்கிகளை இயக்கியபடியே அவ்விடத்தை நோக்கி முன்னேறின.

பெரியவனது குடிசையில் அந்தக் கிராமமே கூடி இருந்தது. நான்கு தலையோடுகளும் அந்த மக்களுக்கு வேடிக்கையாகத் தெரியவில்லை. வேதனையை விதைத்துக் கொண்டிருந்தன. இதற்குக் காரணமானவர்கள் மீது வெறுப்பை ஏற்படுத்திக்கொண்டிருந்தன. அவர்களது கேவலமான அடிமை நிலையை உணர்த்திக் கொண்டிருந்தன. ஓரமாக நின்ற பெரியவனைச் சுற்றி அவனது தம்பி தங்கைகள் நின்றனர். சின்னத்தங்கச்சி கேட்டாள், 'அப்பா, அம்மாவை ஆமிக்காரங்கள் சுட்டுப்போட்டாங் களோ?' என்று,

பெரியவன், 'ஆமாம்' என்று தலையை ஆட்டினான். அவர்கள் ஆறுபேரும் அமைதியாக அழுதுகொண்டு இருந்தார்கள். ஆனால், அவர்களின் மனங்கள் எரிமலையாகக் குமுறிக்கொண்டிருந்தன.

அந்த இளமனங்களில் தோன்றிய வெறுப்புக் கோலங்கள்... இந்த ஜென்மத்தில் மாறப் போவதில்லை.

அவர்களின் பகைவர்களை அவர்கள் மறக்கப்போவதும் இல்லை!





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தரணி போற்றும்

விண்பொய்க்கா வளமெறிந்து, விரிசுடர் எழில்வீசும்
பொன்னான பூமியிலே
மண்வாசத்துடனேயே மலர்வாசம் கமழ்ந்து நிற்க
மாடிணைத்து ஏரோடி மணிமணியாய்
நெல்விதைத்து நெற்றியுடன் நிலமகளும்
வியர்வையாலே உறவாடி
பல்வளமும் பொலிந்தொளிர்ந்த பொன்நாடு - எம்நாடு
பஞ்சத்தெரிகுடிலாய் பாழ்பட்டுப் போனதென்னே!!

தென்றல் தவழ்ந்து வர தெம்மாங்குப் பாட்டிசைத்து
தேரோடித் திழைத்திருந்த தேன்தமிழ் ஈழமிது
கன்றல்க் காடாகி கயல்பாய்ந்த அருவிகளும் - கானகத்துச்
சுடுகாடாய் கருகிப் போனதென்னே!
புழுதி புரட்டியிங்கு பொன்னெடுத்த பார்விட்டு
பூச்சிகளாய் கலைந்தோடி
அழுதிங்கு அலைகின்றோம் - ஆதரிப்பார் யாருமின்றி
அயலவனின் வாசலிலே.

**நுணாவிலூரான்**

அன்னமிட்டு ஆதரித்து அன்புடனே அரவணைத்து
அணைவோரை அணைப்போமே - இன்று
சின்னதுகள் வாய்வயிறு ஒட்டியிங்கு அலறுதய்யா - எம்
சீர்பாய்ந்த பாரதுவும் செங்குருதிச் சிவப்பாச்சு!
ஆராரோ ஆரிவரோ அழகாக ஒலித்த மண்ணில் இன்று
ஆவென்று வாய்பிளந்து ஓலமிடும் சாவோசை!
ஆராரோ அடிமிதித்து அழகுநகர் பாழாச்சு!!
ஆவியுடன் பேயலையும் ஆளில்லா வீடாச்சு!!!


கோலாடிக் கும்மியெடுத்து கோயிலில் விளக்கேற்றி
காலெடுத்துப் பரதமாடிக் கனிவூறக் கவியிசைத்து
மேலாக நிமிர்ந்ததெம் மேனிநிலம் போனதய்யா!! - எம்
மாதாவும் எங்கே? மால்மருகன் கோயிலெங்கே?
யாதெவையும் விட்டோடி யாசகராய் ஆனமிங்கே?
யாழெடுத்த நிலந்தன்னின் யெளவனம் தானெங்கே?
ஏதெவையும் போனாலும் ஏற்றமுறு வீரமது
எங்கேயும் போகவில்லை! எழுந்துவிட்டால் ஏதுஇல்லை?

போர்மேகம் ஓடிப் புதுப் பொலிவு புலர்ந்திடும்
பைந்தமிழ் நிலமெல்லாம் பசுமை புத்தொளிரும்
வேரோடு சாய்ந்துவிடும்...
வெறிகொண்ட வேற்றரசு!
தாரோடு நாமாண்ட தாயகம் மீண்டிடும்,
தண்தமிழும் இசைபாடும் - தீந்தென்றல் விளையாடும்
ஏரோடு மீண்டுமங்கு ஏற்றமும் எழுந்துவிடும்! - இனியென்றும்
எம்மினம் தலைநிமிரும்!! - இதைத் தரணி போற்றும்!!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net




# 'சுதந்திர

**'சுதந்திர வேட்கை'** என்ற தலைப்பில், தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றி திருமதி. அடேல் பாலசிங்கம் ஆங்கிலத்தில் ஒரு நூலை வெளியிட்டிருக்கிறார். கடந்த இருபது ஆண்டுகாலத்திற்கு மேலாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து தான் பெற்ற அனுபவங்களை சுயசரித வடிவில், வரலாற்று அசைவாக சுவைபடச் சித்தரிக்கிறார். விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் நிகழ்ந்த பல்லேறு சம்பவங்கள், திருப்பங்கள், முக்கிய நிகழ்வுகளை சுய அனுபவக் கண்ணோட்டமாக விபரித்துச் சொல்கிறார். அவர் விபரிக்கும் சில நிகழ்வுகள் உள்ளத்தைத் தொடுபவை உணர்ச்சிபூர்வமானவை; உண்மையானவை. நீண்ட, வரலாற்று நாவல்போன்று, 400 பக்கங்கள்வரை தொடர்ந்துசெல்லும் இந்தப் புதுமையான நூலில், சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த சம்பவங்கள் மட்டுமன்றி, சரித்திரத்தைப் படைத்துவரும் புலிகளின் தலைவரும், தளபதிகளும் போராளிகளும் ஆங்காங்கே அறிமுகமாகின்றனர். தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளோடு வாழ்ந்த காலத்தில் தொடங்கி, வன்னியிலிருந்து வெளியேறி லண்டன் வந்துசேர்ந்த கால விசாலத்தில் நிகழ்ந்த முக்கியமான நிகழ்வுகளை ஒரு உள்ளார்ந்த பார்வையாக, உள்நோக்கிய அனுபவ விபரணமாக, திருமதி. பாலசிங்கம் விபரித்துச் சொல்வது ரசனையாக இருக்கிறது. புலிகளோடு வாழ்ந்து தமிழ்நாட்டில் பெற்ற அனுபவங்கள், திம்பு பேச்சுக்கள், இந்திய அரசுடன் எழுந்த முரண்பாடுகள், இந்திய-இலங்கை ஒப்பந்தம், திலீபனின் சாகும்வரை உண்ணாவிரதம், இந்திய அமைதிப்படையின் அட்டூழியங்கள், பிரேமதாசா அரசுடன் நிகழ்த்திய பேச்சுக்கள், யாழ். குடாவில் புலிகளின் நிர்வாகம், சந்திரிகாவின் படையெடுப்புகள், மாபெரும் மனித இடம்பெயர்வுகள், வன்னிச் சூழலின் வாழ்க்கை அனுபவங்கள் இப்படியாக பல்வேறு நிகழ்வுகள் இந்நூலில் விபரமாகப் பதியப்பட்டுள்ளன.

இந்நூலில், பல்வேறு வரலாற்றுக்கட்டங்களில் தலைவர் பிரபாகரன் பற்றி திருமதி. பாலசிங்கம் குறிப்பிடுகிறார். கடைசி அத்தியாயத்திலும் "எனது பார்வையில் திரு. பிரபாகரன்" என்ற தலைப்பில், தமிழீழத் தேசியத் தலைவரின் ஆளுமை பற்றி அவர் விபரித்து எழுதுகிறார். அதனை இங்கு சுருக்கமாக மொழிபெயர்த்துத் தருகிறோம்.



"எமது வீட்டிற்கு திரு. பிரபாகரன் அடிக்கடி வந்துசெல்வார். உத்தியோக ரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் அவரது விஜயம் அமையும். அவர் தனியே தனது மெய்ப்பாதுகாவலர்களுடன் வருவார். மற்றும் சமயங்களில், தனது குடும்பத்தினருடன் வருவார். அப்பொழுது 1998ம் ஆண்டின் மத்திய காலம், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று நாயகனான திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனை அறிந்து பழகி, சேர்ந்து வாழ்ந்து, இருபது ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. இந்த நீண்ட காலகட்டத்தில், தனிப்பட்ட முறையிலும் அரசியல் ரீதியாகவும் கொண்டிருந்த உறவும், அதனால் அவருடன் சேர்ந்து பகிர்ந்த ஆழமான அனுபவங்களும் அவரைப் புரிந்துகொள்ள ஏதுவாக அமைந்தன. அதாவது, இலங்கைத்தீவின் அரசியற் தலைவிதியை நிர்ணயிக்கும் வல்லாற்றலுடைய ஒரு மாமனிதனின் மிகவும் சிக்க


தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லான ஆளுமையைப் புரியக்கூடியதாக இருந்தது. இந்த இருபது ஆண்டு கால உறவு, தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் ஒரு சகாப்தம் எனச் சொல்லலாம். இந்த சகாப்தத்தில், அவரது அரசியல் வாழ்விலும், தனிப்பட்ட வாழ்விலும் ஏற்பட்ட இன்ப துன்பங்களிலும், சரிவு நிமிர்வுகளிலும், இடர்களை மீண்ட வெற்றிகளிலும் நாம் ஒன்றாகவே பயணித்தோம். இந்த நீண்ட பயணத்தின்போது, ஒரு இளம் தீவிரவாதியின் விடுதலை இலட்சியங்கள், முன்னேற்றப்பாதையில் படிப்படியாக மெய்வடிவம் பெற்றுவந்துள்ளதை நாம் காணக்கூடியதாக இருந்தது. தனது மக்களின் விடுதலைப் பாதையில் வெற்றிநடை போட்டுச் செல்லும் அதேவேளை, தேசிய சுதந்திரத்தின் உயிர்ச் சின்னமாகவும் திரு. பிரபாகரன் உருவகம்பெற்றார். அத்தோடு, ஒடுக்கப்படும் அவரது மக்கள் மத்தியில் போற்றிப் பூசிக்கப்படும் புனிதராகவும் அவர் வளர்ச்சி பெற்றார்.



# வேட்கை'



தனது சொந்தப் பாதுகாப்புக் காரணத்திற்காக திரு. பிரபாகரன் ஒதுங்கி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டார். இதனைச் சிலர் தப்பாகக் கருதி அவரை தனித்து வாழும் துறவியாக சித்தரிக்க முயன்றனர். தொடரும் போர்ச் சூழல் புறநிலையால் ஒதுங்கி வாழ நேர்ந்தாலும், ஊடகவியலாளர்களைத் தவிர்த்து வந்ததாலும் அவரை உலகம் புரிந்துகொள்ள வில்லை. அதனால் இன்றைய நவயுகத்தில் அவர் மிகவும் புரியப்படாத மனிதராக, அச்சத்திற்குரிய கெரில்லாத் தலைவராகவும் கருதப்பட்டுவருகிறார். ஆயினும் அவரது அலாதியான இராணுவ வெற்றிகள் அவருக்குப் பெயரையும் புகழையும் பெற்றுக்கொடுத்தன. போர்க்கலையில் பிரபாகரன் காட்டிவரும் திறனாற்றல் உலக இராணுவ நிபுணர்களையே திகைப்பூட்டிவருகிறது. ஒருபுறம் தனது மக்களின் ஆழமான அன்பையும், மறுபுறம் உலகத்தாரின் வசைப் பெயரையும் பெற்றுள்ள இந்த உயரம் குறைந்த, கட்டமைப்பான, தூய்மையான இந்த மனிதனுக்கு இவற்றைத் தேடிக்கொடுத்தது என்ன? சொந்த மக்கள் மத்தியில் ஒரு பார்வையும், உலகத்தார் மத்தியில் இன்னொரு பார்வையுமாக இரு முரண்பட்ட கண்ணோட்டங்கள் ஏற்பட்டதன் காரணம் என்ன?

1954ம் ஆண்டு நவம்பர் மாதம் 26ந் திகதி யாழ். குடாநாட்டின் கரையோரக் கிராமமாகிய வல்வெட்டித்துறையில் பிறந்த திரு. பிரபாகரன் தனது 16 வயதுப் பிராயத்தில் ஆயுதம் ஏந்தி, அரசியற் போராட்டத்தில் குதித்தார். இன்றைய மொழியில் சொல்வதாக இருந்தால், அவர் ஒரு 'குழந்தைப்' போர்வீரனாகவே களத்தில் இறங்கினார். சிறுபராயத்திலிருந்தே அவர் சாதாரண வாழ்க்கையை வாழவில்லை. அவரது இலட்சியப்பற்று தீவிரமாகியதை அடுத்து, தம்மோடு ஒத்தகருத்துள்ள தீவிரவாத இளைஞர்களை அணிதிரட்டி ஒரு புரட்சிகர அமைப்பை உருவாக்கினார். இது ஒரு தலைமறைவு கெரில்லா இயக்கமாக உருவகம் பெற்று ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தது. பிரபாகரனது துணிச்சலான ஆயுதப் போராட்ட நடவடிக்கைகள் அரச அதிகாரிகளின் கவனத்தை ஈர்த்தது. இதன் விளைவாக இவர் ஒரு 'தேடப்படும் நபராக' மாற்றப்பட்டு யாழ்ப்பாணத்தில் தலைமறைவு வாழ்க்கையைத் தழுவவேண்டி நேர்ந்தது. பலம்மிக்க சிங்கள அரசுக்கு, பிரபாகரன் விடுத்த துணிகரமான சவால் அவரைத் தமிழ் மக்கள் மத்தியில் மரியாதைக்கு உரியவராகப் பிரபல்யப்படுத்தியது. காலப்போக்கில், மக்களிடையே ஒரு மாவீரனாக, சரித்திர நாயகனாக அவர் போற்றப்பட்டார். மிகவும் நுட்பமாக, புத்திக்கூர்மையுடன் அரசுக்கு சவால் விடுத்து அவர் ஈட்டிய சாதனைகளை தமது வெற்றிகளாகவே கருதி தமிழ் மக்கள் பெருமைகொண்டனர். தமது இன அடையாளத்தையும் தேசிய கௌரவத்தையும் மேம்பாடுசெய்யும் சாதனைகளாகவும் இதனை மக்கள் கருதினர். அரச அடக்குமுறை அதிகரித்துச் சென்றபோதும் பிரபாகரனின் ஆயுதப் போராட்டமும் தொடர்ச்சியான வெற்றிகளை ஈட்டி முன்னேறியது. இந்த வெற்றிகரமான விடுதலைப் போரின் விளைவாக திரு. பிரபாகரன் தமிழீழ மக்களின் தேசியத் தலைவன் என்ற உன்னத இடத்தை தனதாக்கிக்கொண்டார். தமிழீழ மக்களின் தேசிய சுதந்திரம் அவரது இலட்சிய வேட்கையாக, தணியாத ஆன்மீக தாகமாக உருப்பெற்றது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைப் போராட்டமே அவரது வாழ்க்கையாகவும், அவரது வாழ்க்கையே விடுதலைப் போராட்டமாகவும் மாறியது.

ஒரு தத்துவ ஆசிரியராகவோ அல்லது சித்தாந்தவாதியாகவோ திரு. பிரபாகரன் என்றுமே பாசாங்கு செய்யவில்லை. அவரது அரசியல் இலட்சியத்தினை ஆழமாகப் பார்த்தால் அவரை ஒரு நாட்டுப்பற்றுடைய தேசியவாதியாகவே கருதமுடியும். சில சிங்கள அரசியல் விமர்சகர்கள் வாதிடுவதுபோல பிரபாகரனின் தேசியவாதம் தமிழ் இன வெறியை பிரதிபலிக்கவில்லை. தமிழ் மக்களை இனரீதியாக அழித்தொழிக்வேண்டுமென்ற சிங்கள இனவாத ஒடுக்குமுறையை முறியடிக்க வேண்டுமென்பதில் திரு. பிரபாகரன் திடசங்கற்பம் பூண்டு நிற்கிறார். இந்த திடசங்கற்பத்திலிருந்து பிறந்தது தான் பிரபாகரனின் தமிழ்த்தேசியப்பற்று. வேறுவார்த்தைகளில் சொல்வதானால், சிங்கள அரசின் இனவெறிக் கொள்கைதான் பிரபாகரனை ஒரு தீவிர நாட்டுப்பற்றாளனாக மாற்றியது எனலாம். தமிழ் மக்கள்மீது கொண்டுள்ள ஆழமான பாசமும், அவர்களது பண்பாடுமீதும், குறிப்பாக தமிழ் மொழிமீது கொண்டுள்ள தீராத காதலும் பிரபாகரனின் விடுதலை வேட்கைக்கு ஆதாரமாக அமைகின்றன.



அரசியற் சித்தாந்தங்கள், கோட்பாடுகள் பற்றி பிரபாகரன் பெரிதும் அலட்டிக்கொள்வதில்லை. அவரைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை சிக்கல்கள் நிறைந்த பூடகமான விடயம் அல்லது. தமிழரின் பிரச்சினையை அவர் மிகவும் தெளிவானதாகவே நோக்குகிறார். அத்துடன் தமிழரின் போராட்டத்தையும் நியாயமானதாகவே அவர் கருதுகிறார். தமிழீழம் என்கின்ற தாயக மண்ணில்தான் பிரபாகரனின் ஆழ்மனம் ஆழவேரோடி நிற்கிறது. தமிழ் மக்கள் தமது வரலாற்று ரீதியான தாயக மண்ணில் சமாதானமாக, கௌரவமாக, ஒத்திசைவாக வாழ்வதற்கு உரித்தானவர்கள் என்பதில் பிரபாகரனுக்கு அசைக்கமுடியாத நம்பிக்கையுண்டு. பிரபாகரனின் தமிழீழக் கொள்கையில் பிரிவினைவாதமோ விரிவாக்க நோக்கமோ இருக்கவில்லை. தமிழீழம் தமிழீழ மக்களுக்கே சொந்தமானது; தமிழீழ மானிலம் மீது தமிழீழ மக்களுக்கே இறையாட்சி உரிமையுண்டு என்பது பிரபாகரனின் நிலைப்பாடு. சிங்கள மக்களது, பாரம்பரிய பிரதேசங்களை ஆக்கிரமிப்பதோ, அபகரிப்பதோ பிரபாகரனின் நோக்கமல்ல. அவரது சிந்தனையிலும் செயற்பாட்டிலும் இத்தகைய நோக்கத்தைக் காணமுடியாது. சில இந்திய அரசியல் விமர்சகர்கள் சொல்வதுபோன்று தமிழீழத்தை அகன்ற ஈழமாக விரிவாக்கம் செய்யும் கனவுகூட அவர் கண்டதில்லை.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை நெறிப்படுத்துவதில் பிரபாகரன் எப்பொழுதுமே தனித்துவத்தையும், தனிவழியையும் கடைப்பிடித்து வந்திருக்கிறார். உலக விடுதலைப் போராட்டங்களின் வரலாறு பற்றியும், மற்றைய நாடுகளின் சுதந்திர இயக்கங்கள் பற்றியும் நன்கு அறிந்திருந்த போதும் அந்நிய போராட்ட வடிவங்களை கண்மூடித்தனமாகப் பின்பற்ற பிரபாகரன் விரும்பியதில்லை. எந்த விடுதலைப் போராட்டமும் அந்தந்த வரலாற்றுச் சூழலுக்கும், யதார்த்த புறநிலைகளுக்கு ஏதுவானதாகவும் வளர்ச்சிநிலை காணவேண்டும் என்பதே பிரபாகரனின் நிலைப்பாடு. தனது மக்களின் போராட்டப் புறநிலைகளுக்கும் தேவைகளுக்கும் இசைவாகவே அவர் தனது போர் முறைமைகளை நெறிப்படுத்தினார். அவரது சில போர்த் தந்திரோபாயங்களும் உத்திகளும் பலத்த கண்டனங்களுக்கு, குறிப்பாக சிங்கள அரசியல் இராணுவ ஆய்வாளர்களின் கண்டனங்களுக்கு ஆளாவது உண்டு. மிகவும் பலம்வாய்ந்த, சக்திமிக்க, ஈவிரக்கமற்ற எதிரியிடமிருந்து மிகவும் பலவீனமான, சிறிய தேசிய இன மக்களைப் பாதுகாப்பதற்கு ஈவிரக்கமற்ற உத்திகளைக் கையாளவேண்டியது அவசியம் என தனது போர் நடவடிக்கைகளுக்கு நியாயம் கூறுவார் பிரபாகரன்.

பிரபாகரன் ஒரு கருமவீரர். செயலில் நம்பிக்கை உடையவர். மனித செயற்பாடுதான் வரலாற்றை இயக்கும் உந்துசக்தி என்பதில் அவருக்கு அசையாத நம்பிக்கை



யுண்டு. பூடகமான தத்துவார்த்த கோட்பாடுகள் மூலம் பிரச்சினைகளை அலசிப்பார்க்காமல், ஆக்கமான செயற்பாட்டில் நம்பிக்கை கொண்டிருந்தது காரணமாகவே அவர் தனது விடுதலை இயக்கத்தை முன்னேற்றப்பாதையில் முன்நடத்திச்சென்றார். தமிழ் அரசியல்வாதிகளின் வார்த்தை ஜாலங்களில் ஏமாந்து விரக்தியடைந்த புரட்சிகர இளைஞர் சமுதாயத்தை பிரபாகரனின் செயற்திறன்மிக்க போராட்டப் பாதை வெகுவாகக் கவர்ந்து இழுத்தது. இதன்காரணமாக, எத்தனையோ இடர்களுக்கும் மத்தியில், இளம் சமூகத்தை அணிதிரட்டி, சிங்கள அரச இயந்திரத்தை எதிர்த்துப் போராடும் வலுவுடைய ஒரு தேசிய விடுதலை இராணுவத்தை அவரால் கட்டி எழுப்ப முடிந்தது.

தனது போராட்ட இலட்சியத்தை பிரபாகரன் இன்னும் அடையவில்லை என்பது உண்மைதான். ஆயினும், பிரபாகரனது மதிநுட்பமான போர்த் திட்டங்களும், அவற்றை திறம்பட நிறைவுசெய்யும் அபாரமான ஆற்றலும் காரணமாகவே அவர் உருவாக்கிய விடுதலை அமைப்பு இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது. தமிழீழ மக்களும் தமது தேசிய தனித்துவத்துடன் நிலைத்து நிற்கிறார்கள். பிரபாகரன் இல்லையேல் புலிகள் அமைப்பும் இருந்திருக்காது, தமிழினமும் தேசியக் கட்டமைப்புடன் இருந்திருக்காது. புலிகளுடனான எனது வாழ்க்கை அனுபவத்திலிருந்தே இதைக் கூறுகிறேன். நிச்சயமாக ஈழத்தமிழ் மக்களும் இக் கருத்தையே கொண்டுள்ளனர்"

இப்படி எழுதியிருக்கிறார் திருமதி. அடேல் பாலசிங்கம் இன்றைய நிறைய சுவையான விடயங்கள் அவரது நூலில் உள்ளன.

---

இந்த நூலைப் பெற்றுக்கொள்ளும் இடம்:
Fairmax Publishing Ltd,
P.O.Box : 2454,
MITCHAM,
CR4 1WB,
LONDON
விலை: £13.50.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 5ஆம் ஆண்டு நீங்காத நினைவில்...



லெப்.கேணல் .நாதன்



கப்டன்.கஜன்

## துடுப்புக்களின் தீரா வலித்தல்

உடைத்தெறிந்த துடுப்புக்களின்
இன்னும் அடங்காத் துடிப்பு
என்றும் கூர்மைமழுங்கா
வலிமையின் உயிர்ப்பே

எதிர் நீச்சலிடுகின்ற
எல்லாவற்றுள்ளும்
அதே இயக்கம்

துடுப்பாக இருத்தல்
துடுப்பாக உழைத்தல்
துடுப்பாக வலித்தல்
வலிமை கொள் வாழ்வே

துடுப்புக்களை
உடைத்தெறிந்த பின்னாலும்
உடைக்க முடியாது போனது

மரணமில்லா வாழ்வின்
திசை நோக்கிய
தீரா வலித்தலை

தீராது வலிக்கும் துடுப்புக்களும்
சுதந்திரத் தூரிகையே
சுதந்திரத் தூரிகையின்
தீராவலி கொண்ட இயக்கம்
என்றைக்குத் தான் தணிந்தது?

சுபாஸ்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீட்பர்களின் வருகைக்காய்...



மடியும் ஒவ்வொரு நிமிடங்களிலும் பாதாளத்தின் நடுவே மெல்லிய கயிற்றில் தொங்குவதானதொரு உணர்வையே தருகிறது. வாழ்வின் இழையங்கள் அறுந்து போனதாகவும் எதிலுமே பிடிப்பில்லாததான விசனமுற்ற நாட்களாகவுமே கழிகின்ற பொழுதுகள்தான் தொடருகின்றது.

யாருடனும் கொஞ்ச நேரமாவது மகிழ்ச்சியாகப் பேசவே இயலாத இந்தப் பொழுதுகளில் இப்போதே மரித்துவிட வேணுமென்பதாய் மனசு அலைகிறது. நிம்மதியைத் தொலைத்த நீளும் இரவுகளில் சிலுவை சுமக்கும் கல்வாரிப் பயணமெனத் தைக்கிறது படுக்கை.

இப்படித் தூக்கத்திற்காய் கிடந்து தவிக்கும் போதெல்லாம் தொலைந்துபோன அந்த இனிமையான பொழுதுகள்தான் நினைவுக் குமிழ்களாய் நெஞ்சில் கசிகிறது.

ஏ.எல். பரீட்சை எழுதிவிட்டு றிசல்ற்றுக்காகக் காத்திருந்த அந்த நாட்களில் சைக்கிள்களில் கூடிக்கூடித் திரிந்து களைத்துப் போனபோது கடலையும் பனங்கிழங்கும் வாங்கிக்கொண்டு வந்து நீண்டு நிமிர்ந்த அந்தப் பனைகளின் நடுவே வளைந்திருந்து சாப்பிடும் அலாதி சுகம் எப்போது எங்களை விட்டுப்போனது என்பதை இப்போதும் நினைத்துப் பார்க்கின்றேன். கனத்துப்போகும் நெஞ்சில் இரத்தம் கசிவதாய் எங்கோ தாளாத வலிதான் ஏற்படுகிறது.

கிராமக் கோட்டுச் சந்திக்குப் போகும் மெயின்றோட்டில் இருந்து இருநூறு யார் தள்ளிக்கிடக்கும் வெட்டை வெளியில் வெய்யில் வெயிலாய் கிறிக்கற்றாடியபடி சிறுவர்கள் குதூகலிப்பர். பனைகளின் கீழே விரிந்து போய்க்கிடக்கும் நிழலில் நாங்கள் ஒருவரை ஒருவர் கிண்டலடித்துக் கொண்டே நீண்ட நேரமாக உட்காந்திருப்போம். மாலைவரும் வரை யாருமே அந்த இடத்தைவிட்டு நகரவே முடியாதளவுக்குச் சுவாரஸ்சியமான விடயங்களெல்லாம் சம்பாசனைகளில் வந்துபோகும்.

சீலன் தன் சினேகிதி பற்றி எந்த நேரமும் கதைத்துக்கொண்டே இருப்பான். அவள் மீது தான் உயிரையே வைத்திருப்பதாகவும், அவளையே கல்யாணம் செய்துகொள்வதாகவும் கூறிக்கொண்டிருந்தான். பீற்றரின் கனவெல்லாம் விழுந்து போய்க்கிடக்கும் தனது குடும்பத்தின் பொருளாதாரத்தை உயர்த்துவதாகவே இருந்தது. என்னென்ன தொழில் செய்தால் முன்னேறலாம் என்பதை ஆலோசித்தபடியே இருப்பான். றிசல்ற்றைப் பார்த்துவிட்டு ஏதாவது சொந்தமாய் தொழில் தொடங்கப்போவதாக அவனுக்கு எண்ணமிருந்தது. சுரேசிற்கு எந்த விதமான ஐடியாக்களே இல்லாமல் எதற்கெடுத்தாலும் சிரித்தபடியே இருப்பான். அப்பாவி.

ஆனால், பின்னாளில் கூட்டைப் பிய்த்தெறிந்து குருவிகள் கலைந்து பிரிந்தது மாதிரி எவ்வாறெல்லாம் ஒருவரை ஒருவர் அறியாதபடிக்கு கண்காணாத தூரங்களிலெல்லாம் தொலைந்துபோனார்கள்.

இப்போதும் அந்த வெளியில் அடித்த பந்தை எடுக்கச் சிறுவர்கள் ஓடுவதாகவும், கிராமக் கோட்டுச் சந்திக்குப் போகும் தெருவில் சந்தையால் போகும் கதிரேசு மாமா கள்ளுக் குடித்த உற்சாகத்தில் காத்தவராயன் பாட்டுப் பாடிக்கொண்டு போவது போலவும், 'கீக்கிறீச் கீக்கிறீச்' என்று அவரது சைக்கிள் சத்தம் காதில்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீட்பர்களின் வருகைக்காய்...



## முல்லைக்கோணஸ்

ஒலிப்பதாகவுமே படுகிறது. மீண்டும் மீண்டும் அந்தப் பனைகளும் அவற்றுக்கப்பால் விரியும் வெளியும்தான் ஞாபகத்தில் படர்கிறது.

இப்போது அந்தக் கிறிக்கற் சிறுவர்கள் எங்கெல்லாம் சிதறிப்போனார்களோ? அதில் எத்தனை பேர் காணாமல் போனோர் பட்டியலில் இடம் பிடித்தார்களோ?

எங்கள் ஊருக்கு இராணுவம் வந்தபோது முதன் முதலில் அந்தப் பனைகளின் நடுவேதானாம் சென்றிபோட்டு உட்கார்ந்தது. பின் ஒவ்வொரு பனைகளாய்த் தறித்து பெரிய பண்டும் பங்கரும் அமைத்து நிரந்தரமாய் தன் இருப்பைப் பலப்படுத்தியபோது அந்த இராணுவ மினிமுகாமைச் சுற்றியிருந்த ஏராளமான வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன.

இதைக் கேள்வியுற்றதும் தான் சிறுகச்சிறுகச் சேமித்துக் கட்டிய வீடு இப்படிப் போனதே என்று அப்பா அதிர்ந்துபோனார். அவரைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு நாங்கள் ஏகப்பட்ட பிரயத்தனங்கள் செய்யவேண்டியிருந்தது.

வெளியில் உயிரை உறையவைக்கும் பீதியைத் தருவதாய் இருள் கவிந்து கிடக்கிறது. எங்கும் நிசப்தமே நிலவுகிறது. இந்த நாய்கள்கூட இப்போது குலைப்பதை நிறுத்திவிட்டனவோ என்றே நினைக்கத் தோன்றுகின்றது.... சரி இந்த முற்றத்து வேப்பமர வௌவால்கள் எங்கே போய் ஒளிந்தன? முந்தியெண்டால் வேப்பம்பழக் காலத்திற்கு எங்கிருந்துதான் அப்படி வருகின்றனவோ, கொள்ளை கொள்ளையாய் வந்து மரத்தில் மொய்த்துக்கிடந்து கத்தலும் சட சடப்புமாகவே இரவிரவாகத் தொல்லைகள் தருங்கள்.

இப்போது எங்கேயும் அவற்றின் அசுகைகூடத் தெரிவதில்லை. அவைகூட எங்காவது தொலை தூரங்களுக்குப் புலம் பெயர்ந்துபோய்விட்டனவா? அல்லது யாருக்கும் ஓசைப்படாமல் வந்து தங்களின் கருமங்கள் முடித்துக்கொண்டு போய்விடுகின்றனவா?

எதுவுமே நிலையற்றதாகிப் போன துயர்தரும் வாழ்வு நாளைய இருத்தல் என்பது நிச்சயமில்லாதபோது எதிலுமே லயிப்பற்ற ஜடமாகத்தானே நடமாட முடிகிறது.

முன்னரென்றால் எங்கள் ஊர் ஆழ்வார் கோயில், ஆவணி மாதத்தில் வரும் கடைசி மூன்று தினங்களும் விடிய விடியத் திருவிழாவில் மூழ்கிக்கிடக்கும். சுற்றுப்புறமெல்லாம் ஒளி வெள்ளத்தில் பளிச்சிட பட்டுச் சாறிகள் மினுங்கும். நாலு முழவேட்டிகளோடு நாலைந்து பேராய் அந்த ஜனநெருசலில் உலா வருவதே சுவர்க்க சுகம். அவ்வாறான ஒரு வருடத் திருவிழாவில்தான் மனேச்சற்ற மகள் வசந்தனோடு ஓடிப்போனாள். கனகம் மாமியின் மகளை வரணியில இருந்து வந்த மாப்பிள்ளை பகுதி இந்தத் திருவிழாவில்தானாம் பெண் பார்த்தார்கள். இன்னும் என்னென்னமோ சங்கதிகள் எல்லாம் அங்கு நடந்துமுடியும்.

மூன்றாம் நாள் பொங்கல் வைத்து திருவிழா நிறைவெய்தும்போது மூன்று நாளும் இளசுகள் தாம் பரிமாறிக்கொண்ட பார்வைகளையும், பறிகொடுத்த மனசுகளை மீளப்பெறமுடியாத துயரங்களையும் மீட்டியவாறு வீடு நோக்கிப் போய்க்கொண்டிருப்பர். மூன்று நாளும் மாமிசம் உண்ணாது விரதமிருந்து பூசை முடித்த கனபேர் வெறும் மேலுடன் நேரே கள்ளுக்கடை நோக்கி திருவிழாவில் நடந்த குற்றம் குறைகளைப் பற்றிக் கதைத்தவாறு நடப்பர். வீடு திரும்பும்போது மீனோ இறைச்சிப் பாசலோ கையில் இருக்கும். இன்னும் சிலர் வெறிச்சோடிப்போன வெளிமண்டபத்தில் இருந்து கூடிக்கதையளப்பர். சிலவேளைகளில் அதில் ஐயரின் தலையும் தெரியும்.

இவையெல்லாம் எம்மைவிட்டுப்போய் நெடுநாளாயிற்று. எங்கு போனாலும் ஐந்து மணிக்குள் வீடு திரும்பும் அவசரம். ஒப்பாரி கேட்டால் உறவுக்காரரெண்டாலும் விடிந்த பின்பே துக்கம் விசாரிக்கும் துர்ப்பாக்கியம்.

இந்த முன்னிரவில் நிம்மதியற்றுத் தூக்கம் வரமறுக்கும் இந்த நிமிடங்களில் யாருமே அறியமுடியாத படிக்கு என் ஜீவன் கதறுகிறது. ஊ ஊ என்றிரையும் காற்று பனையோலைகளில் பட்டு சரசரக்கிறது. இப்படி வீசும் இந்தக் காற்று மனித வெறியர்கள் குறிவைத்துக் காத்திருக்கும் அந்த முகாமினுள்ளும் உக்கிரமாய் பெரும் புயலென அவர்களை அள்ளுண்டு அடிப்பட்டு திணறடிக்கப் பண்ணுவதாய் வீசவேண்டுமென மனம் அவாவுகின்றது!

இந்த இரவின் அந்தகார இருளில் அந்த முகாமினுள்ளே புகை பிடித்தவாறோ குரூரம் கொப்பளிக்கும் தொனியில் ஏதாவது கதைத்தும் சிரித்தும் கொண்டோ அவர்கள் இருப்பார்கள்.

சென்றியில் நிற்பவரின் துப்பாக்கி அப்பிராணியொருவனைத் தீர்த்துக்கட்டிய பெருமிதத்தில் ஒய்ந்துறங்கும். அல்லது யாரையாவது குறிவைத்தபடி வெடித்துச் சிதற இருக்கும் அந்தக் கொடூர கணநேரத்திற்காகக் காத்துக் கிடக்கும்.

இன்னும் உள்ளே கிருசாந்தியைப் போலோ, ராஜினியைப் போலோ யாராவது அவர்களின் காமஇச்சைக்குக் கதறிக் கதறி தங்களை இழந்து கொண்டிருக்கலாம்.

இரண்டு நாட்களுக்கு முன்பும்கூட முகாமினுள்ளே யாரோ ஒரு பெண் அலறும் சத்தம் கேட்டதாக ஊருக்குள் பேசிக்கொண்டார்கள். அந்த முகாமிற்கு அவர்கள் வந்த புதிதில் ஊரில் உள்ள சனங்களோடு மிகவும் பண்பாகவே நடந்து கொண்டதாகப் புளுகித்திரிந்தவர்களில் அநேகம் பேரினது உறவினர்கள் அவர்களைத் தேடி ஒரு நாளைக்குப் பலதடவை முகாமை நோக்கி அலைந்து திரிவதுதான் மிகவும் மனவேதனையைத் தருகிறது. சனங்கள் அவர்கள்மேல் எவ்வளவு நம்பிக்கை கொண்டு நடந்தார்கள்.

உயிர்கரையும் இந்த அர்த்த ராத்திரியிலும் சென்றியில் இருந்தவாறு அந்தக் கொடிய விழிகள் யாரை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனவோ அவர்கள் இந்த இருளை ஊடறுத்துக் கிழித்தவாறோ இந்த இருளோடு இருளாய்க் கலந்தவாறோ வருவார்கள். அவர்களது வரவுக்காய் அந்த மீட்பர்களின் வருகைக்காய் இங்கு எத்தனை பேர் காத்துக் கிடக்கிறார்கள்.

அவர்கள் வருவார்கள் என்கிற நினைவே நெஞ்சில் நிறைவைத் தருகிறது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு கண்ணோட்டம்

# நீதி நிர்வாகத்துறையின் எட்டாண்டுகால செயற்பாடுகள்

நவீன உலகின் மக்கள் வாழ்வின் இயங்கியபின் நீதி செலுத்தப்படுவதன் பங்கு அவசியமானது. நீதி செலுத்தும்முறை எமது பண்டைய சமூக முறைகளிலிருந்து பேணப் பட்டுவந்த ஓர் அவசியமான அலகாகும். அந்தவகையில் இன்று தமிழீழத்திலும் நீதி செலுத்துதலை செம்மையாகச் செயற்படுத்த தமிழீழ நீதி நிர்வாகத்துறை தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர் களால் நெறிப்படுத்தப்படுகின்றது.

தமிழீழ நீதி நிர்வாகத்துறைச் செயற் பாடானது 1993-08-19ஆம் திகதி சட்டக்கற் கையைப் பூர்த்தி செய்த போராளிகள் அணி ஒன்றுடன் ஆரம்பமானது. நீதி செலுத்துதலின் பக்கச்சார்புகள், செல்வாக்குகள், தாமதங்கள் என்பவைகள் ஏற்படாதவாறு செயற்படுத்தும் பொருட்டு, தம்மை நாட்டின் விடுதலைக்காகப் போராட இணைத்துக்கொண்ட போராளி களில் ஒரு தொகுதியினர் தலைவர் அவர் களால் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு சட்டக்கல்லூரியில் கற்கைநெறியினைப் புக ட்டி அவர்களிலிருந்து நீதியாளர்கள், சட்ட வாளர்களைத் தெரிவுசெய்து தமிழீழ நீதிமன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட நீதிநிர்வா கத்துறைச் செயற்பாடானது, நீதிமன்றுகள் செயற்படுத்தல், சட்டக்கல்லூரி, சட்டவாக்கச் செயற்பாடுகள் ஆகிய மூன்று பிரதான செயற் பாடுகள் இன்றுவரையான எட்டு ஆண்டு களில் செயற்படுத்தி வருகின்றது.

நீதியாளர்கள் யாவரும் சட்டக் கல்வி யைப் பூர்த்திசெய்து தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் முன்னிலையில் நீதி யாளருக்கான உறுதியுரையினை மேற் கொண்டவர்களாவர்.

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் நீதித்துறை தொடர்பில் நீதியாளர்களின் உறு தியுரையை ஏற்று நீதியாளர்களை செயற்பட அனுமதிப்பதுடன், குற்றவாளிகளின் தண்ட னைகளைக் குறைத்தல், குற்றவாளிகட்கு மன்னிப்பு வழங்கல் ஆகியவற்றையும் செயற் படுத்துவதுடன், நிகழ்வுத்தவறு அல்லது சட் டத்தவறு ஒன்று காணப்படுகின்றதான விட யங்கள் தொடர்பில் நியாய விளக்கமொன்றிற் குப் பணிப்புரைகளையும் விடுக்கலாம்.

தமிழீழத்தில் செயற்படுத்தப்படும் நீதி மன்றுகள் ஆறு வகைப்படும். அவற்றின் நியாயாதிக்கத்திற்கு ஏற்ப உச்ச நீதிமன்றே அதியுயர் நீதிமன்றாகத் திகழ்கின்றது. இது மூன்று நீதியாளர்களைக் கொண்ட அமைப் பாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நீதிமன்று சகல வழக்குகளினதும் இறுதி மேன்முறை யீட்டு நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ளது. பார்வையிடல், ஆலோசனை வழங்குதல் ஆகியனவும் இதன் அதிகாரங்களாகும்.

இதற்கு அடுத்தபடியாக மேன்முறையீட்டு நீதிமன்று காணப்படுகின்றது. மேன்முறை யீட்டு நீதிமன்று மாவட்ட மன்றுகளினதும், மேல் நீதிமன்றினதும், சிறப்பு நீதிமன்று களினதும் வழக்குகளின் மீதான மேன்முறை யீட்டு நியாயாதிக்கத்தினைக் கொண்டுள்ளது. இது மூன்று நீதியாளர்களைக் கொண்ட தவிசினால் மேற்கொள்ளப்படுகின்றது. தற் போது 6 நீதியாளர்கள் மேன்முறையீட்டு நீதியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு அடுத்த கீழ்நிலை நீதிமன்றாக மேல் நீதிமன்று, காணப்படுகின்றது. மேல் நீதிமன்றானது, குற்றவியல் வழக்குகள் தொடர்பான நியாயாதிக்கத்தைக் கொண் டுள்ளது. இந்நீதிமன்றானது, மேல்நீதிமன்ற நீதியாளர் ஒருவரால் மேற்கொள்ளப்படுகிறது. மரண தண்டனைக்குரியனவும், 10 ஆண்டு கட்கு மேற்பட சிறைத்தண்டனை விதிக்கப் படக்கூடியதுமான தவறுகள் தொடர்பில் இது நியாயாதிக்கமுடையது ஆகும்.

சிறப்பு நீதிமன்றானது, சிற்சில குறிப்பிட்ட குற்றவியல் வழக்குகளின் நிகழ்வுகள் தொடர் பில் அவற்றின் பாரதூரத் தன்மை, அதில் ஆராயப்படவேண்டிய விடயத்தின் முக்கியத் துவம் போன்றவைகளைக் கருத்திற்கொண்டு மூன்று நீதியாளர்களை உள்ளடக்கி ஏற்பாடு செய்யப்படும் ஒரு நீதிமன்றத் தவிசானது, அது ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கம் நிறை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வடைந்ததும் கலைந்துவிடும்.

அடுத்த ஆரம்பநிலை நியாயாதிக்க முடைய மன்றுகளாக மாவட்ட குடியியல் நீதிமன்றுகளும், மாவட்ட குற்றவியல் நீதி மன்றுகளும் காணப்படுகின்றன. குடியியல் மன்றுகள் சகல குடியியல் வழக்குகளையும் பெற்று ஆராய்ந்து ஆரம்பத் தீர்ப்புக்களை வழங்குகின்றன. இவ்வாறே குற்றவியல் வழக்குகளை குற்றவியல் மாவட்ட நீதி மன்றுகள், குற்றவியல் சிக்கல்களில் மேல் நீதிமன்றிற்குரியவை தொடர்பில் சுருக்க முறை விளக்கத்தினையும், தான் விளங்கக் கூடிய வழக்குகளை பூர்வாங்கமாக விளங்கி யும் வருகின்றன. இற்றைவரை 10 குற்றவியல் மாவட்ட நீதிமன்றுகளும், 10 குடியியல் மாவட்ட நீதிமன்றுகளும் ஆரம்பிக்கப்பட்டு இன்று தலா மூன்று மூன்று மாவட்ட மன்றுகள் நீதி செலுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளன. இதுவரை 7459 குற்றவியல் வழக்குகளையும், 5790 குடியியல் வழக்குகளையும் மாவட்ட மன்றுகள் தீர்த்துள்ளன. இன்றுவரை மொத்த மாக 19776 வழக்குகளை மாவட்ட மன்றுகள் சந்தித்துள்ளன.

இவற்றில் மொத்தமாக 806 வழக்குகள் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளன. இவற் றில் 656 வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன.

தமிழீழ நீதி நிர்வாகத்துறைச் செயற் பாட்டில் மற்றுமோர் அலகான சட்டக் கல்லூரி யானது, இன்றுவரை மூன்று தொகுதி மாணவர்களுக்கான சட்டக்கல்வியை நிறை வேற்றியுள்ளதுடன், 4வது அணிக்கான கல்வி யூட்டலையும், மேற்கொள்கின்றது. அத்தோடு 2000 ஆண்டில் தமிழீழ சட்டக் கல்லூரியால் வெளிவாரி சட்டக் கற்கைநெறியொன்றும், ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது.

சட்டக் கல்லூரியின் உள்ளகக் கற்கை நெறியானது, 22 முழுமையான சட்டப்பாட நெறிகளையும், ஏனைய 4 உப பாட நெறி களையும் கொண்டுள்ளது. வெளிவாரிக் கற் கைநெறி 18 சட்டக் கற்கை நெறிகளையும் ஒரு உப கற்கை நெறியையும் கொண்டுள்ளது. மூன்று ஆண்டுகள் வரையான கற்கை நெறியாக சட்டக்கற்கை நெறி காணப்படு கின்றது.

முதலாவது அணியில் 34 மாணவரும், 2வது அணியில் 25 மாணவரும், மூன்றாவது அணியில் 28 மாணவரும் சட்டக்கற்கையைப் பூர்த்திசெய்து வெளியேறியுள்ளனர்.

சட்டவாக்கச் செயற்பாடுகள் சட்டசபை க்கு உடையவையாயினும், தற்போது நீதித் துறைச் செயற்பாட்டிற்காகவும், சட்ட அறிவு டையவர்கள் அவற்றைக் கையாள வேண்டும் என்பதற்காகவும், நீதி நிர்வாகத்துறையின் சட்டமாக்கற் பிரிவினரால் சட்டங்கள் வரையப் படுகின்றன. அவ்வாறு வரையப்படும் சட்டங் கள் சட்டப்பரிசீலனைக் குழுவினால் பரிசீலிக் கப்பட்டு பின்பு தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் ஒப்புகையைப் பெற்று சட்டமாக வெளியிடப்படுகின்றன. இன்று இயற்றப்படும் சட்டங்கள் யாவும் தூய நீதியை நிலைநாட்டு வதற்காகவும், மக்கள் வாழ்வினை சீராக அனுபவிப்பதற்கும் வசதிசெய்து கொடுப் பதற்குமான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்படுகின்றன.

இவ்வாறு இயற்றப்படும் சட்டங்களில் மக்களின் இறைமை, நீதித்துறைச் சுதந்திரம், ஐ.நா சபையின் மனித உரிமைகள் பிரகடனத் திற்கமைவாக, மக்களின் உரிமைகளைப் பேணும் நோக்கு ஆகியவைகளை அடிப்படை யாகக் கொண்டே சட்டங்கள் இயற்றப்படு கின்றன. சிறப்பாக குடியிருக்கும், கருத்து வெளியிடும், மதத்தைப் பின்பற்றும், தொழில் புரியும் சுதந்திரம், சட்டத்தின் முன்பு எதிர் வாதம் செய்யவும், நபர் ஒருவர் குற்றத்தீர்ப்பு ஒன்றிற்கு பின்னர் குற்றவாளியாகக் காணப் படுவதற்குமான சுதந்திரம், நியாயமாக விசா ரிக்கப்படாமல் தண்டிக்கப்படாமை ஆகிய வைகளையும் உள்ளடக்கிச் சட்டங்கள் வரை யப்படுகின்றன.

இதுவரை பல பிரதான சட்டங்களும், திருத்தச் சட்டங்களுமாக மொத்தம் 19 வெளி யிடப்பட்டுள்ளன. அவைகளில்,

குற்றவியற் சட்டம்,
சான்றியற் சட்டம்,
தமிழீழச் சட்டக்கோவை,
தேச வழமைச் சட்டம்,
உணவுச் சட்டம்,
மோட்டார் ஊர்திகள் பதிவுச் சட்டம்,
சீதனத் தடைச்சட்டம்,
சீட்டுச் சட்டம்

போன்றவை பிரதான சட்டங்களாகும்.

இவைகளில் தமிழீழ தேச வழமைச் சட்டம் நியாயமான வழக்காறுகளை அடிப் படையாகக் கொண்ட உள்ளூர்ச்சட்டத்தின் திருத்திய வடிவமாகும். குற்றவியற் சட்டம், அனைத்து நாடுகளும் பின்பற்றும் பொது வான குற்றச்சட்ட ஏற்பாடுகளின் விதிகளைத் தழுவி எமது சமுதாயத் தேவைக்கு ஏற்ற வாறான விதிகளையும் உட்செலுத்தி உரு வாக்கப்பட்ட சட்டமாகும்.

அவ்வாறே சான்றுச் சட்டமும் விசார ணைகளின்போது கட்சியினரின் சுதந்திரத்தை வலியுறுத்துவதை பிரதானமாகக் கொண் டுள்ளது. இதன்படி நியாயமான சந்தேகத் திற்கப்பால் குற்றங்கள் நிரூபிக்கப்பட வேண்டும் என்பதுவும், ஒவ்வொரு சாட்சியை எதிர்த்தரப்பு விரும்பினால் குறுக்கு விசார ணை செய்யலாம் என்னும் விதியும், பொல் லாருக்குச் செய்த குற்றவொறுப்புதல்களை சான்றாகக் கொள்ளக்கூடாது என்ற ஓர் அனைத்துலக விதியையும் குறிப்பிட்டு உள் ளடக்கப்பட்டுள்ளன. பொதுவாக இன்று இயற் றப்படும் சட்டங்கள் நாகரிக விருத்தி, மனித உரிமைகள் பேணல், மக்களின் இயல்பான சமூக வாழ்வை அனுபவிக்க வாய்ப்பளித்தல், நீதித்துறைச் சுதந்திரம் ஆகிய பிரதான விதிகளை அடியொற்றியே மேற்கொள்ளப் படுகின்றன.



கடந்த பல ஆண்டுகளாக நீதி நிர் வாகத்துறை ஒரு அரசாங்கத்தின் பிரதான கட்டமைப்பாக செயற்படும் அளவினதாய் தனது செற்பாடுகளை விரிவுபடுத்தி வரு வதுடன், செம்மையான பணியையும் ஆற்றி வருகின்றது. நீதித்துறையின் இன்றைய செயற்பாடுகள் நாளைய அரச நிருவாகத் திற்கான ஓர் அலகாககத் தொடர்ந்து வளர்ச்சி யடைந்து செல்கின்றன.

தமிழீழத்தில் செயற்படுத்தப்படும் நீதி மன்றுகளில் மேற்கொள்ளப்படும் விளக்கங் கள் பகிரங்க மன்றிலும் இரு பகுதியினரும் சமூகமாய் இருக்கும்போதும் மேற்கொள் ளப்படுவதுடன், குற்றவியல் வழக்குகளில் குற்றம் சாட்டப்படுபவர் 'நியாயமான சந்தே கத்திற்கப்பால்' குற்றவாளி என நிரூபிக் கப்படும்வரை அவர் குற்றவாளியாகவே கொள்ளப்படுதல் ஆகியவையும் பிரதான மானவையாகும்.

சட்டவாளர்கள் அரச சட்டவாளர்களை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




யும், பிரத்தியேகச் சட்டவாளர்களையும் கொண்டு செயற்படுகின்றன. வேறு நாடுகளில் சட்டக்கல்வி பயின்ற சட்டவாளர்களும் நிலைமைக்கு ஏற்ப தமிழீழச் சட்டக் கல்லூரியின் பரீட்சை எடுத்து சித்தியெய்துவதன் ஊடாக, தெரிவாகிய பின்னர் அல்லது நிலமைகளுக்கேற்ப அவ்வாறு வராமலும் உச்ச நீதிமன்ற நீதியாளர் முன்னிலையில் உறுதியுரையினைச் செய்த பின்பு சட்டவாளராகப் பணியாற்ற முடியும்.

எட்டு ஆண்டுகாலம் நீதி வழங்கல் பணியை செவ்வனே மக்களுக்குச் செய்துவரும் 'தமிழீழ நீதி நிர்வாகத்துறை' தொடர்ந்தும் தனது நீதியானதும் நெறிப்படுத்தப்பட்டதும், முன்னோடியானதுமான பணிக்கமைய சமுதாய அநீதிகள் களையப்பட்ட ஒரு புதிய நேரிய தமிழீழ மக்கள் சமூகத்தின் உருவாக்கத்திற்கு வழிசெய்ய முயன்று நிற்கும்.

ந. மதிவர்மன்



பல லட்சம் பேரின்
படுகாயங்களை உழுதுகொண்டு
பாதை கண்டு தோட்டத்து
றோசாக்களை நசுக்க
டாங்கி விடும் அவனுக்கு

இரவு வேளைகளில் வீட்டு
யன்னல்களை உடைத்து
ஒரு வயலையும் நூதன
சாலையையும் எரித்து
அதன் சுவாலையைப் பார்த்துப்
பாடும் அவனுக்கு

குழந்தையை இழந்த தாய்மாரின்
கூந்தலைப் பறித்து
திராட்சைத் தோட்டங்களை
அழித்து மிதித்து
நல்லின்ப வானம்பாடியை
நகரத்துச் சதுக்கத்திற்
கொலை செய்யும் அவனுக்கு

பிள்ளைமையின் கனவுகளை
நொறுக்கிடும் விமானமுள்ள
அவனுக்கு
வானவில்தனை ஒடித்திடும்
அவனுக்கு
இன்றிரவு
றாஃபாச் சிறுவர்கள்
விளம்புகிறோம்.

கூந்தலை நெய்து
படுக்கையில் விரித்தவர்கள்
அல்லர் நாம்
கொலையுண்ட மங்கையின் தங்கப்
பல்லை பிடுங்கி
அவள் முகத்திலே துப்பினோர்
அல்லர் நாம்
இனிப்புத் துண்டுகளைப் பறித்துக்
கொண்டு
வெடிகுண்டுகளை எமக்கேன்
தந்தீர்?
அரபுக் குழந்தைகளை ஏன்
அநாதைகள் ஆக்கினீர்
ஆக்கி உமக்கேன் நன்றி கூறினீர்?

துயரம் எங்களை ஆடவர்
ஆக்கிற்று
நாம் போரிடல் வேண்டும்.

*11*

வென்றவன் ஒருவனின் துவக்கு
சனியனில்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# றாஃபாச் சிறுவர்கள்

சமீஹ் அல்-காசிம்

மின்னும் வெயில்
அம்மணப் பிணமொன்றாய்
அவமதிப்புற்றது
குருதி காய்ந்த முகங்களிடை
கோபமுற்ற செபமாலை மணிகள்
மீது
மௌனம் இரத்தம் பெருக்கிற்று
சாமுத்திரிகா இலட்சணம் படைத்த
வெற்றியாளன்
ஒருவன் உறுக்கினான்! நீபேசவே
மாட்டாயோ?
நல்லது
உனக்கினிமேல் ஊரடங்குச் சட்டம்
பின்வருமாறு...
அலாவுதீன் குரல் வெடித்துப்
பிளந்தது
இரை தேடும் பருந்துகளின்
பிறப்பினை
இராணுவ வாகனத்துக்குக்
கல்லெறிந்தேன்
துண்டுப் பிரசுரம் விநியோகித்தேன்
சைகை கொடுத்தேன்
கையிலே தூரிகை தாங்கி
கதிரையை அயல் வீட்டுச்
சுவரடிக்குக் கொண்டுபோய்
சுலோகங்களை நானே தீட்டினேன்
நானே பிள்ளைகளைக் கூட்டினேன்
வெளியேறிய அகதிகள் மேல்
ஆணையாய்
எதிரிகளின் துவக்குச் சனியன்
எம்தெருவில் மின்னுமட்டும்
எதிர்ப்பதென்று சத்தியம்
பண்ணினோம்
அலாவுதீனுக்குப் பத்து வயதும்
இருக்காது.

*111*

அக்கேசியா மரங்கள் நசுக்கப்பட்டன
றாஃப்பாவில் படலைகள் பூட்டப்பட்டு
கவலையால் அல்லது மெழுகினால்
அல்லது ஊரடங்குச் சட்டத்தால்
முத்திரையிடப்பட்டன.

(நள்ளிரவின் பின் மீண்ட,
காயப்பட்ட ஒருவனுக்குப் பாணும்,
காயம் கட்டும் துணிகளும்
கொண்டு போகவேண்டியவளாய்
அச்சிறுமி இருந்தாள்
அவள் ஒரு தெருவைக்
கடக்கவேண்டும்
அங்கு அந்நியரின் கண்களும்
காற்றும் துப்பாக்கி வாய்களும்
உன்னிப்பாய்க் கவனித்துக்
கொண்டிருந்தன)

அக்கேசியா மரங்கள்
நசுக்கப்பட்டிருக்கின்றன
ஓர் வெட்டுக்காயம் போல்
றாஃபாவில் வீடொன்றின் கதவு
திறந்தது
அவள் பாய்ந்தாள்
மல்லிகைச் செடியொன்றின்
மடியிலே விழுந்தாள்
பயங்கரத்தின் பாதையோரம்
வந்தாள்
ஈச்சமரம் ஒன்று அவள் புகல்
ஆயிற்று
கவனமாய்
ஒவவோர் அடியாய்
இப்போது பாய்

ஒரு காவலாள்
விளக்குகளின் பளிச்சீடு
ஓர் இருமல்
யார் நீ
நில்

ஐந்து துவக்குகள் அவள்முன் நீண்ட
ஐந்து துவக்குகள்

காலையில்
படையெடுப்பாளர் ஒன்று கூடிற்று
அவளைக் கொணர்ந்தனர்
ஆமினா
ஒரு குற்றாவளி
அவளுக்கு வயது எட்டு.




கவிதைகள் தொடரும்...



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழத்தின் அரங்கு நெகிழ்ச்சி

## ஓர் பார்வை

தமிழீழ மக்கள் தேச விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்து வியத்தகு சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கும் இக்காலப்பகுதியில், துன்பமும், துயரமும், அவலமும் அவர்களின் அன்றாட வாழ்வியல் நிகழ்வுகளாக மாறிவிட்டபோதும் அவர்களின் கலைத்துவமும் இரசனையும் இன்னும் அதிகரித்திருக்கின்றதே தவிர குறைந்து விடவோ அற்றுப்போய்விடவோ இல்லை. அரசினால் அரங்கேற்றப்படும் திட்டமிட்ட இன அழிப்பின் பரிமாணங்களான உணவுத் தடையும் மருந்துத் தடையும் அதனால் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பட்டினிச் சாவுகளும், இவை மட்டுமன்றி ஆக்கிரமிப்பின் கெடுபிடிகள், மனித உரிமைகளை பாழ்ங்கிணற்றில் புதைக்கும் அத்துமீறல்கள், கண்மூடித்தனமானது என்பதைவிட அப்பாவி மக்கள் மீது தேடித்தேடி நடாத்தப்படும் குண்டுவீச்சுக்கள், இன்னும் பற்பல சொல்லொணா அடக்குமுறைகள் என்பன எவ்வாறு ஈழத்தமிழ் மக்களின் விடுதலையுணர்வுக்கு உரம் சேர்ப்பித்துக் கொண்டிருக்கின்றனவோ, அதேபோன்று, தேசத்துடன் மனிதமனங்களை பின்னிப் பிணைத்துவிட்ட பாரம்பரிய தமிழ்க்கலையுணர்வும் மொழிப்பற்றும் என்றுமே சோரம் போனதாக வரலாறு இல்லை. இவ்வகையில் தமிழீழ தேசத்தின் இன்ப துன்பங்களின் வெளிப்பாடாக, உணர்வுக் கொந்தளிப்புக்களின் வடிகாலாக, கருத்துப் பரிமாற்றத்திற்கோர் ஊடகமாக, இலக்கிய வளர்ச்சியின் பிரதிபலிப்புக்களாக, மரபுகளை உடைத்து நவீனத்துவத்தை எமக்கேற்றதாக அமைத்துக் கொள்ளும் களங்களாக, பொழுதுபோக்குச் சாதனமாக, இன்னும் எத்தனையோ வடிவங்களில் அதிவேக வளர்ச்சியுடன் வெளியாகிக் கொண்டிருக்கின்றன கலை அம்சங்களான அரங்க நிகழ்வுகள். அனைத்து தர மக்களையும் கவர்ந்திழுத்து அனைவருக்கும் ஏற்றவிதங்களில் கருத்துவிதைகளை விதைத்து, வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கும் தமிழீழ அரங்கியலை வெளியுலகக் கலை மேதைகள்கூடப் பாராட்டாமல் இல்லை. பாரம்பரிய அம்சங்களுடன் நவீன பாணியை தேவைக்கேற்றால் போல கலந்து, விதிமுறைகளை புதிதாகப் படைத்துக் கொண்டிருக்கும் தமிழீழ அரங்கு நிகழ்வுகளில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் சொல்லொணா இடர்களுக்கும் வளப்பற்றாக்குறைக்கும் மத்தியில் அவை உருவெடுத்து உத்வேகம் பெற்று இந்த உயர்நிலையைக் கண்டிருக்கின்றன என்பதுதான்.

கிரிகைகளில் இருந்து சமூக மாற்றத்திற்கு ஏற்றால்போல மாறிக்கொண்ட தமிழர்களின் அரங்கு, அயல் இனத்தவர்களின் உறவுகளின் காரணமாக அவர்களின் பண்பாட்டு அம்சங்களையும் தன்னுள் உள்வாங்கி, கூறுகளாகி நிற்கின்றது. இவற்றிலே தமிழர்களின் பாரம்பரிய உணர்வில் கலந்தது தமிழ்க்கூத்து. இவை முற்றுமுழுதாக பாரம்பரிய அம்ச வடிவில் இன்றியும், சமூக மாற்றத்திற்கு ஏற்ப சில புதிய வரையறைகளுடனும் இப்போது ஆடப்பட்டு வருகின்றன. உதாரணமாக, பேராசிரியர் வித்தியானந்தனின் 'கூத்து புத்தாக்க' செயற்பாடுகளைக் குறிப்பிடலாம். இந்த அரங்கு வடிவச் செயற்பாடுகள் தமிழீழத்தின் பூர்வீக நிலப்பிரதேசமான, இலங்கையின் வடக்கு கிழக்கும் மற்றும் தமிழர் வாழும் பிரதேசங்களிலும் நிகழ்கின்றது. கிரிகைகளில் இருந்து விடுபட்டு, சமூக மாற்றத்தினூடே நகர்ந்த அரங்கு, ஆரம்பத்தில் ஓரளவு காரண அடிப்படையிலும் பொழுதுபோக்கு நோக்கிலும் தொழில் சார்ந்த அடிப்படையிலும் செயற்பட்டது. இந்த அரங்கச் செயற்பாடுகளில் குறிப்பாக, அப்போது மேடை நாடக அரங்கு புகழ் பெற்றதாகவும் மக்களைக் கவர்ந்ததாகவும் இருந்தது. இருபதாம் நூற்றாண்டில் 1950களில் இந்த அரங்க ஊடகங்கள் சாதிய எதிர்ப்பையும் அரசியல் இலாபங்களையும் அடிப்படையாகக் கொண்டு ஆற்றுகைகளைச் செய்தது. இப்படியாக, சமூகத்தடை உடைப்புக்கான முயற்சியிலும் தமிழீழ அரங்கம் அதிகப்படியாக செயற்பட்டுவந்தது. இந்தச் செயற்பாடு அரங்கை புதிய பரிமாணங்களை நோக்கி இட்டுச் சென்றதுடன், மக்களை ஓர் இலக்கு நோக்கி வழிநடத்தவும் முயன்றது. இதற்கு முன்பிருந்து, வெறும் கற்பனைவாதப் போக்குக்கள் அருகி, யதார்த்த முரணற்ற இயல்புவாதப் போக்குக்கள் அரங்கச் செயற்பாடுகளில் செறிந்தன. இருபதாம் நூற்றாண்டின் அரைநூறின் பிற்பகுதியின் அரங்க நகர்வில், இக்காலப்பகுதியில் ஆரம்பத்தில் முகிழ்த்த தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் அதன் நியாயத் தன்மையையும் மக்களிடம் கொண்டு செல்லும் பொருட்டு, அரங்கத்தைப் பயன்படுத்த வேண்டிய காலநியதி உணரப்பட்டது.

தமிழர் சமூகத்தில் ஏற்பட்ட சமூக மாற்றம், அரங்கிலும் தாக்கத்தை ஏற்படுத்த விளைந்தது. இந்த நிலையில், மேடை நாடகங்களின் ஆற்றுகை, நவீன நாடக ஆற்றுகைப் போக்கினைப் பின்பற்றியும் எமது பாரம்பரிய கதை சொல்லும் பாணியையும் கலந்து, மெல்லமெல்ல தமிழர்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசிய விடுதலை உணர்வைச் சொல்லும் கருப்பொருட்களை உள்வாங்கத் தொடங்கியது. மேடை நாடகம் மட்டுமல்லாது கவிதா நிகழ்வு என்பனவும் இந்த வழியில் தடம் பதித்திற்று. "மண் சுமந்த மேனியர்" நாடக ஆற்றுகை தேசிய உணர்வைச் சுமக்கும் சமூக மாற்ற அரங்கிற்கான அத்திவாரமாகவும் அடி எடுத்துக் கொடுப்பதாகவும் அமைந்ததைக் குறிப்பிடலாம். இப்படியாக மேடை நாடக மரபு விரிந்து செல்ல, ஏனைய தமிழீழ அரங்கக் கலைகளும் இவ்வழி நகர்ந்தன. தொன்றுதொட்டு புராண-இதிகாசக் கதைகளையே விடிய விடியச் சொல்லிய வில்லிசை, வெறும் கற்பனை வாதத்தில் மிதந்த கவியரங்கு, கற்பனைவாத வழிவந்த இதிகாச புராணப் பாத்திரங்களை வைத்துத் தர்க்கம் செய்த பட்டிமன்றம் போன்றன எல்லாம், சமகாலப் பிரச்சினைகளை, யதார்த்தத்தை கருக்களாக்கிக் கொண்டன. சிறுவர் அரங்கில்க்கூட, மெல்லியதாய் நோகாமல், சிறுவர் உளவியலுக்குப் பொருத்தமான வகையில், உரிமை பற்றிய உணர்வை ஊட்டும் தன்மை நுழைந்தது. உதாரணமாக 'சிங்கம் தனிக்காட்டு ராசா. அது சொல்லும் யாவற்றிற்கும் காட்டு மிருகங்கள் அனைத்தும் தலைசாய்க்கும் என்ற நிலை மாறி, சிறுசிறு மிருகங்களும் சுதந்திரம் உடையன என்றும் அவற்றிற்கும் உரிமை உண்டு என்பதையும், அவை ஒன்று திரண்டால் காட்டின் ராசாவையே மாற்றிவிடலாம்' என்பதையும் சிறுவர் நாடகங்கள் கருப்பொருளாகக்கொள்ள ஆரம்பித்தன. இப்படி இப்படியாக, பரத நாட்டியம், நாட்டியம், நாட்டிய நாடகம் போன்றவையும் சமூக மாற்ற அரங்கில் நுழைந்தன. இந்த நகர்தலின்போது அரங்கு பற்றி புதிய பரிமாணத் தேடல், அது சம்பந்தமான புதிய பரிசோதனை முயற்சியில் ஈடுபடுதல் போன்ற முயற்சிகள் உருப்பெற்றன. பார்வையாளருடனான கருத்துப் பரிமாற்ற ஆற்றுகை, இடைவெளியைக்குறைத்து பார்வையாளனையும் சுதந்திரமாக ஒரு சந்தர்ப்பத்தில் நடிகனாக மாற்ற விளைதல் என்ற நிலையில் ஞாபகத்தில் வருகின்ற இரண்டு முயற்சிகளைக் கூறலாம்.

1. யாழ். பல்கலைக்கழகம் ஆற்றிய 'பொய்க்கால்' நாடகம்.

2. விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம் நிகழ்த்திய, மேலைத்தேய மூன்றாவது அரங்கு கண்ணுக்குத் தெரியாத அரங்குப் பாணியிலான அதைத் தழுவிய 'சூடடிக்கும் காலம்' நாடகம் என்பன.

இப்படியாக இவைகள் நகர, 90களின் பிற்பகுதியில் மிகவும் முனைப்புப் பெற்ற தமிழர்களின் சுதந்திரத்திற்கான விடுதலைப் போரின் மரபு ரீதியான போர் வளர்ச்சி, சுதந்திரத்தை மிகவும் குறுகிய காலத்திலேயே பெறவேண்டுமென்ற அவாக் கொண்டதாய் இருந்தது. இந்த அவாவின் ஒரு பகுதியாக, தியாகி திலீபன் கூறியதுபோல, மக்களைப் புரட்சிக்குத் தயார்ப்படுத்தல் என்ற ரீதியில் மக்களுக்குள் போராட்ட உணர்வை வலுவாக வளர்க்கும் முகமாக அரங்கு மிகத் தீவிர செயற்பாட்டில் இறங்கியது. 1995இல் ஏற்பட்ட பாரிய யாழ்ப்பாண கிளிநொச்சி இடப்பெயர்வுகளும் 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கை காரணமான இடப்பெயர்வுகளும் மக்களை அகதிகளாக்க, மக்கள் ஒரு மூலைக்குள் நெருங்கிப் போயினர். இந்த நிலையில் பொருளாதார பற்றாக்குறை, மருத்துவ வசதியின்மை, போதிய வாழ்விட வசதியின்மை, கல்விச் சீரின்மை என்பன நிலவியபோதும், அவற்றை இந்த மண்ணின் விடுதலைக்காக கொடுக்கப்படுகின்ற விலையாகக் கருதி, மக்கள் தேசிய உணர்வோடு வாழத் தொடங்கினர். இந்த நிலையில் இந்தப் போராட்டத்திற்காக, இந்த மக்களாலேயே நாடக அரங்குகள் மிகத் தீவிரமாகச் செயற்படுத்தப்பட்டன. கருத்தைக் கொடுக்கும் விரைவு நாடகக் கூறுகளை, பார்வையாளரின் (மக்கள்) வசதி என்பவற்றின் அடிப்படையில் படச்சட்ட மேடையுடன் கூடியதான அரங்குகளை விட, தெருவெளி நாடக அரங்கே இக்காலத்திற்கு மிகமிகப் பொருத்தமானதென நடைமுறையில் கண்டறியப்பட்டது. இந்த நிலையில், மிகவும் வாய்ப்பானதொரு சமூக மாற்றத்திற்கான அரங்காக தெருவெளி அரங்கு செயற்பட்டதுடன், வன்னிப் பெருநிலப்பரப்பில் மக்களை அது பெரிதும் கவர்ந்தது. அத்தோடு மிக நவீன மோடியில் கருத்தை ஆற்றுகை செய்யவும், காட்சி விளைவுகளை காத்திரமாக ஏற்படுத்தவும், படச்சட்ட மேடையே மிகவும் பொருத்தம் என்ற கூற்றின் பெரிய அளவு வீதமான பகுதி, தெருவெளி அரங்கு ஆற்றுகையினால் முறியடிக்கப்பட்டது. வன்னிப் பெருநிலப்பரப்பிலே போராட்ட சூழ்நிலையில், பல்வேறு தெருவெளி அரங்குக் குழுக்கள் ஆற்றுகையில் ஈடுபட்டன. இந்த ஆற்றுகையில் ஈடுபடும் கலைஞர்களின் இயல்பில் இருந்து, வாழ்வே அரங்கு என்ற நிலையைப் புரிந்துகொள்ள முடிகின்றது. இங்கு தெருவெளி அரங்கு முறைமையின் அம்சங்களை பின்வருமாறு அடுக்கலாம்.

1. ஒரேமாதிரியான சீருடையில் கலைஞர்கள் ஆற்றுகையில் ஈடுபடுதல். ஆற்றுகை நேரத்தில் மட்டுமன்றியும் ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு கலைஞர்கள் நகர்கின்ற போதும் அந்தச் சீருடைகளுடனேயே நகருதல். இவர்களின் சீருடைகள் வியட்நாம் விடுதலைப் படையை ஞாபகமூட்டுவதாய் இருக்கின்றன.


2. வெய்யில், மழை, பனி, புவியியல் சூழ்நிலைகள் என்பவற்றையும் பொருட்படுத்தாது, தெருவெளி அரங்கக் கலைஞர்கள் துவிச்சக்கர வண்டியிலேயே பல கிலோ மீற்றர்கள் ஓய்வின்றி நாடக ஆற்றுகைக்கான சாதனங்களுடன் பயணிக்கின்றனர்.

3. எந்தவித மின்சார உபகரணங்களின் பயன்பாடும் இன்றி ஆற்றுகையில் ஈடுபடுதல்.

4. மரபு ரீதியான கூத்து அம்சங்களையும், நவீன நாடக அம்சங்களையும் புதிய உத்திகளையும் சமகால சம்பவங்களையும் பயன்படுத்தி, முற்றிலும் மனித உருவையே பயன்படுத்தி ஆற்றுகை செய்தல்.

5. போராளிக் கலைஞர்களையும் ஆற்றுகையில் ஈடுபடுத்துதல்.

மேலும், கடந்துபோன நூற்றாண்டின் சமூக மாற்றங்களின் ஊடே இறுதியாக, தமிழீழ அரங்கக் கட்டமைப்புக்கு மக்களைக்கவர்ந்த ஓர் அம்சமாக, காட்சிக் கோலங்களில் அபிநயங்கள் காணப்படுகின்றன. அதாவது தமிழீழப் போராட்டத் தொடர்பில் வெளியிடப்படுகின்ற இசை நாடாக்களின் பாடலுக்கு, மேடையில் கலைஞர்கள் காட்சிப்படுத்தல் அல்லது அபிநயக் கோலங்களை அமைத்தலாகும். இந்த அம்சத்தை விடுதலைப் புலிகளின் மகளிர் கலைபண்பாட்டுக் கழகம் முனைப்பாக செய்துவருகின்றது. இப்படியாக, தமிழீழத்தின் அரங்கின் தன்மை இப்போது இருபத்தோராம் நூற்றாண்டில் காலடி எடுத்துவைத்து நகர்ந்து கொண்டிருக்கின்றது.





தமிழ் தேசிய ஆவணச் சுவடுகள்

www.tamilarangam.net

# தாயகம் காப்போம்

தமிழீழம் அழகானது, வளமானது. இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 30 வீதத்திற்கு மேற்பட்ட நிலப்பரப்பையும் மொத்தக் கடற்பரப்பில் 60 வீதத்திற்கு மேற்பட்ட கடல் பகுதியையும் தமிழீழம் கொண்டது. இது தமிழர்களின் பாரம் பரியப் பிரதேசம் வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே இப்பிரதேசத்தில் வாழ்ந்த வர்கள் தமிழர்கள்.

இலங்கையின் கிழக்கே கும்புக்கன் ஆறு தொடக்கம் வடமேற்கே மகா ஓயா வரை பல ஆற்றுப் படுக்கைகளையும் எல்லையாகக்கொண்டு பரந்து விரிந்த ஈழத்தமிழர்களின் தாயகம் தமிழீழம்.

20,000 சதுர கிலோ மீற்றர் பரப்பள வைக்கொண்ட தமிழீழம் இலங்கையின் கிழக்கு மாகாணம், வடமாகாணம், வட மேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத் தின் பகுதியையும் உள்ளடக்கியது.

பௌத்தமும் அதனோடு உள்நு ழைந்த பாளிமொழியினதும் அதனை யொட்டிவந்த சிறுகுடியேற்றங்களினதும் தாக்கத்தினால் உருவான சிங்கள இனம், தீவின் தெற்கு, தென்மேற்குப் பகுதிகளில் ஒதுங்க தமிழ் மக்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும், தென்மேற்கின் கரை யோரப் பகுதியிலும் நிலையாக வாழ்ந்து வந்ததினால் அப்பகுதி தமிழர்களின் தாயகமாக தொடர்ந்து நிலைத்திருந்தது.

13ஆம் நூற்றாண்டிலிருந்து 16ஆம் நூற்றாண்டுவரை இத்தாயகப் பகுதி யாழ்ப்பாண அரசாக நிமிர்ந்து நின்றது. தமிழர்களின் தாயகப் பிரதேசமான யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேயரிடம் 16ஆம் நூற்றாண்டின் பின் வீழ்ச்சிய டைந்து அதன் பின் ஒல்லாந்தர்களிடம் வீழ்ச்சியடைந்தது. இந்த நிலையில் தமி ழர் தாயகப்பகுதி இவர்களால் தனியான நிர்வாக அலகாக வைத்தே ஆட்சி செய்யப்பெற்றது. இதன்பின்னர் இலங் கை முழுவதையும் கைப்பற்றிய பிரித்தா னியர் தமிழர் தாயகத்தையும் சிங்களவர் தாயகத்தையும் 1833ஆம் ஆண்டில் ஒன் றிணைத்து இலங்கை முழுவதையும் ஒரே ஆட்சியின் கீழ்கொண்டு வந்தனர். 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த போது பிரித்தானியரால் இலங்கை என்ற தனியான நிர்வாக அலகிற்குட்பட்ட வகை யில் தமிழர் தாயகப்பிரதேசம் சிங்களவ ரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இன்று தமிழீழம் தமிழர்களின் தாய கம் என்ற எண்ணக்கருவை சிங்கள அரசு அழிக்க முனைந்தபோது 'தமிழீழ மண் மீட்புப்போர்' வீறு பெற்று சர்வதேச அரங் கில் உயர்ந்து நிற்கிறது.

இவ் அழகான, வளமான, நிறை வான, வலுவுடைய தமிழீழத்தை தமிழ் இனத்திடமிருந்து பறிக்க இலங்கையில் 1948ஆம் ஆண்டிலிருந்து மாறிமாறி ஆட் சிக்கு வந்த சிங்கள அரசுகள் கையாண்ட தந்திரமே 'சிங்களக் குடியேற்றங்களாகும்'

இச் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழர் தாயகப்பகுதியை காலத்திற்குக் காலம் சிங்கள அரசுகள் திட்டமிட்டு செயலாற்றி கபளீகரஞ் செய்து வருவது கண்கூடு.

1. இனவழிப்பு (Genocide)
2. மண்ணில் அத்துமீறல் (Encro achment)

இந்நாட்டின் தமிழ்பேசும் இனத்தைப் பூண்டோடு அழிப்பதற்கு மேற்சொன்ன இரு வழிகளையும் இற்றைக்கு எட்டு தசாப்தங்களுக்கு முன்பே சிங்களப் பேரினவாதிகள் வகுத்தனர். 1920களில் சிங்கள மகாசபை போன்ற நிறுவனங் களும், பௌத்த பேரினவாத அமைப்பு களும், பின்னாளைய திரிசிங்கள பெர முனாக்களும், இப்பணியை வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல் மிகவும் இலாவகமாக சிறுகச் சிறுகச் செய்து வந்தன.

ஒரே பிரதேசமாக விளங்கிய தமிழீழப் பிரதேசம் ஆங்கிலேய ஆட்சியின்போது (1833ல்) வடக்கு, கிழக்கு என இரு மாகாணங்களாக வகுக்கப்பெற்று, அவற் றுடன் சில சிங்களப் பகுதிகளும் ஆளு கைத் தொடர்புகளுக்காக இணைக்கப் பட்டன. ஆயினும் 40 ஆண்டுகளின் பின் 1873இல் ஆளுநராக இருந்த சேர் வில் லியம் கிறேகறி அன்றைய வடகிழக்கு மாகாணத்துடன் இணைக்கப்பட்டிருந்த சிங்களப் பகுதிகளை முற்றாக நீக்கி தமிழர்கள் மட்டும் வாழ்ந்த இன்றைய வடகிழக்கு மாகாணங்களை உருவாக் கினார். 1948ல் இலங்கை சுதந்திர மடைந்தபோது இலங்கையின் முத லாவது பிரதம மந்திரி D.S சேனநாயக்கா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பெற்ற 'கல்லோயா சிங்களக் குடியேற்றத்திட்டம்' தொடக்கம் இன்றும் தமிழீழத்தின் வடக்கு கிழக்குப் பகுதியில் சந்திரிகா அரசினால் மேற்கொள்ளப்பெற்று வரும் சிங்களக் குடியேற்றங்கள் வரை ஒரே அடிப்படை உள்நோக்கங்களைக்கொண்டே நடை முறைப்படுத்தப்பெற்று வருகின்றன. அவையாவன.

- தமிழ்த்தேசிய இனத்தினதும் அவர்களினது தாயகத்தினதும் தனித்து வத்தை அழித்தல்.
- தமிழ்த்தேசியப் பண்புகளை சிதைத்தல்.
- தமிழீழத் தலைநகரை தமிழ் மக் களிடமிருந்து பறித்தெடுத்தல்.
- ஒவ்வொரு தமிழனினதும் நெஞ் சத்திலுள்ள தமிழர் தாயகம் தமிழீழம் என்ற எண்ணக்கருவை இல்லாதொழித் தல்.

ஓரினத்தை அழிப்பதற்கு, வல்லா திக்க ஆக்கிரமிப்பாளர் கையாளும் பேரா யுதம் குடியேற்றத்திட்டமாகும். இது குறித்து அரசியல்ஞானியும் சிந்தனை யாளருமான மாக்கியவல்லி என்பவர் கூறிய கூற்றை இங்கு நினைவு கூர்தல் பொருந்தும்.

'ஓர் அரசன் (அரசு) தான் கைப்பற் றிய பிரதேசத்தைத் தொடர்ந்து அனு பவிக்கவேண்டுமாயின் அங்கு தனது குடிகளைக் குடியேற்றிக் கொள்ளவேண் டும். இது இராணுவ முகாம்களை தாபிப் பதைவிட மேலானதாகும். ஏனெனில் இராணுவத்திற்கு அரசனே (அரசே) ஊதி யம் கொடுத்து போஷிக்க வேண்டும். அதேவேளையில் இராணுவத்தினர் அந்த மண்ணுக்கு அந்நியமானவர்கள். ஆனால், குடியேற்றவாசிகளோ அப்ப டியல்ல.அவர்கள் சிறிது காலத்திற்கு அந்நியமாக இருந்தாலும் வெகு விரை வில் அந்த மண்ணில் ஊறிவிடுவார்கள். இவர்களுக்கு அரசு ஊதியம் கொடுத் துப் பேணத்தேவையில்லை. அவர்கள் கூலிக்கு மாரடிப்பவர்களாக அன்றி, சந் ததி சந்ததியாகத் தமது உயிர்வாழ்வுக் காக உணர்ச்சியோடு நின்று எதையும் தாக்குப் பிடிப்பவர்கள். எனவே குடியேற் றம் இராணுவத்திலும் மேலான நிரந்தர இராணுவமாக விளங்கும்'

இந்த உத்தியைக் கைக்கொண்டு ஆங்கிலேயர் அயர்லாந்திலும், இஸ்ரே லியர் பாலஸ்தீனத்திலும் செய்த-செய்து

### தமிழீழத்தின் பரப்பளவு

| இலங்கையின் மாகாணப்பகுதிகள் | பரப்பளவு (சதுர கிலோ மீற்றர்) |
|---|---|
| வடமாகாணம் | 8876.6 |
| கிழக்கு மாகாணம் | 10001.0 |
| வடமேல்மாகாணப்பகுதி (புத்தளம்மாவட்டப்பகுதி) | 1488.5 |
| மொத்தம் | 20369.1 |



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டிருக்கும் குடியேற்ற நடவடிக்கைகளும், அவர் தம் குடியேற்றவாதக் கொள்கைகளும் உலகறிந்த விடயங்கள்.

இந்தப் பாணியிலேயே தமிழீழத்திலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டத்தை அரசு தீட்டியது.

## சிங்களக் குடியேற்றத் திட்டங்களுக்கான எண்ணக்கருக்கள்

சிங்களக் குடியேற்றத்திட்டங்களுக்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் வசதியாக சிங்கள அரசுகளினால் அறிமுகம் செய்து வைக்கப்பெற்ற 'காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டங்களும்' 'காணி அபிவிருத்திக்கான ஆணைக் குழுக்களும்' அரசினால் நியமிக்கப்பெற்று பெரிதும் உதவிபுரிந்தன. இந்த அடிப்படையில்,

தமிழ்த்தேசிய இனத்தினதும் அவர்களினது தாயகத்தினதும் தனித்துவத்தை அழிக்கும் வகையில் இலங்கை சுதந்திரமடைந்தபோது தமிழர் இராச்சியத்திற்கும் சிங்களவர் இராச்சியத்திற்கும் இடையே காணப்பெற்ற காட்டு எல்லைப் பிரதேசம் அழிக்கப்பெற்று அப்பிரதேசங்களில் சிங்களவர் குடியேற்றப்பட்டு அவர்களுக்கான அபிவிருத்தித்திட்டங்களும் முன்வைக்கப்பெற்று திட்டம் அமுலாக்கப்பெற்றது.

தமிழ்த்தேசியப் பண்புகளை சிதைக்கும் வகையில் தமிழ்மொழியை அழித்து, தமிழர் கலைபண்பாட்டை சீரழித்து, பொருளாதார வாழ்வை சீர்குலைத்து, வரலாற்றைத் திரித்து தமிழர் தாயகப்பகுதியை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பெற்றன.


- தமிழீழத் தலைநகராம் திருகோணமலை மாவட்டத்தை தமிழ் மக்களிடமிருந்து பறித்தெடுத்து திருகோணமலையை சிங்களமயப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பெற்றன.

- தமிழர் தாயகம் தமிழீழம் என்ற எண்ணக்கருவை தமிழர்களினது நெஞ்சங்களிலிருந்து அகற்ற தமிழர் தாயகப் பிரதேசங்களை துண்டாடும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பெற்றன.

சிங்கள இனவாத அரசுகளின் இவ் அடிப்படை எண்ணக்கருக்களுக்கு சர்வதேச ரீதியான குடியேற்ற விதிமுறைகள், 'நேரடியான சிங்களக் குடியேற்றங்களை' அமைக்க சாதகமாக அமைந்ததோடு, இதனோடு இணைந்த 'அத்துமீறிய மறைமுக சிங்களக் குடியேற்றங்களும்' நடைபெற வாய்ப்பாக அமைந்தது.

இக்குடியேற்ற நடைமுறைகளுக்கு சிங்கள அரசுகள் முன்வைத்த விளக்கங்களும், குடியேற்றத்திட்டங்களில் சகல இன மக்களுக்கும் உதவிகள் வழங்கப்படும் என முன்வைத்த விடயங்களும், வறுமைப்பட்ட மக்களுக்கே முன்னுரிமை என்ற கோஷத்துடன் நாட்டின் அபிவிருத்தியே இலக்கு என கூறப்பெற்ற கருத்துக்களும் சர்வதேசங்களிலிருந்தும் பல உதவிகளும் அரசுக்குக் கிடைத்ததோடு சிங்கள அரசின் குடியேற்றச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்திய சிங்கள அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் குடியேற்றச் செயற்பாடுகளுக்கு தேவையான சர்வதேச உதவிகள் கிடைப்பதற்கும் வழிவகுத்தது.

### அளவு கடந்த சிங்களக் குடியேற்றங்களால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள்




சிங்களக் குடியேற்றச் செயற்பாடுகளில், கூடிய பரப்பளவைக்கொண்ட கிழக்கு மாகாணப் பகுதியிலேயே 1948 இல் முதலில் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பெற்றன. அன்று தொடங்கிய குடியேற்றத்திட்டம் இன்றும் தொடர்கிறது. இத்திட்டங்களுக்கு சான்று கூறும் வகையில் பல சிங்களத் தலைவர்களின் உரைகள், கூற்றுக்கள் வெளிச்சம் போட்டுக்காட்டின.

- 1983இல் இலங்கையின் ஜனாதிபதி J.R ஜெயவர்த்தனா அவர்கள்.

'சிங்களவர் எல்லைகளை நோக்கி நகராவிட்டால் எல்லைகள் எம்மை நோக்கி நகரும்' என்றார்.

- 03.03.1985 அன்று மாவட்ட அமைச்சர்கள், அரச அதிபர்கள் முன்னிலையில் திரு. லலித் அத்துலத் முதலி அவர்கள் தமிழர்களின் தாயகக்கோட்பாட்டை இல்லாதொழிப்பதுதான் குடியேற்றத்திட்டங்களின் நோக்கம் எனக் கூறினார். மேலும் இக்குடியேற்றவாசிகளுக்கு ஆயுதப்பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கப்பெறும் என்ற நோக்கத்தையும் இக்கூட்டத்தில் ஒப்புக்கொண்டார்.

- ஈழக்கோரிக்கையின் எண்ணக்கருவை அழிக்கும் வகையில் மூன்று குடியேற்றத்திட்டங்கள் தீட்டப்பட்டதாக 26.08.1990 அன்று மாகாவலி அமைச்சைச் சேர்ந்த 'மாலிங்க ஹேர்மன் குணரெட்ண' என்பவர் சண்டேரைம்ஸ் பத்திரிகையில் பேட்டியளித்திருந்தார்.

1. முதற்பகுதி 45,000 நிலமற்ற விவசாயிகளை மாதுறு ஓயாவுக்கு (மட்டக்களப்பு, பொலநறுவை மாவட்டங்களுக்கு) அனுப்புவது.
2. ஜான் ஓயாவில் குடியேற்றம் ஒன்றை அமைப்பது.
3. ஈழக்கோரிக்கைக்கு எதிரானவர்களை மகவத்து ஓயாவில் குடியமர்த்துவது.


இவ்வாறு பல தலைவர்களும் சிங்கள அரச அதிகாரிகளும் குடியேற்றத்திட்டங்களின் உண்மை நோக்கங்களை ஒப்புக்கொண்டு அன்று தொடக்கம் இன்றுவரை சிங்களக்குடியேற்றத் திட்டங்கள் தொடர்பான கருத்துக்களை வழங்கி பல உண்மைகளை வெளிக்கொணர்ந்தது குறிப்பிடத்தக்கது ஆகும்.

தொடரும்...



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவனுக்கு எதுவுமே புரியவில்லை. இவர்கள் மனிதர்களா? அன்றி மனிதத்தின் சாயலில் உலவும்....?

மனிதம் பற்றி எதுவுமே புரியாத இந்தக் கொலை வெறியருக்கும். இவங்களின்ர பெரியவங்களுக்கும் உயிர்பற்றி என்ன புரியப்போகிறது? ஒரு உயிர் வதைபடுவது பற்றி எதுவித சிந்தையுமற்று உதிரம் வடிய வதைத்துக் கொன்று குவித்து..... ஊனமாக்கி.....

அடைபட்டு அடிவாங்கி, முனகியபடி இரத்தம் சொட்டச் சொட்ட கையெடுத்து முகம் துடைக்கவே உபாதையுற்றவனாய் அவன்.

முகம் புதைத்து வாய்திறக்க முடியாமலிருக்க, முகமூடியின் தலையசைப்பு. அடிவாங்கியோரில் அரைவாசி தப்பிக் கொண்டனர். இம்மறை அவனும் தப்பித்துக் கொண்டான். இப்போது அவனுக்கு நல்ல சுழிபோல. இனிவரும் காலத்தில்.....?

அடி சற்றுப் பலமாகத்தானிருந்தது. அவனால் எழுந்து கொள்ள கஸ்ரமாயிற்று. மெல்ல எத்தனித்து எழுந்தான். ? சேட் பொக்கெற்றைத் தடவிப்பார்த்தான். எப்போதுமே சேட் பொக்கெற்றை விட்டகலாத அடையாள அட்டை, ஆசிரிய அடையாளப்படுத்தல், சிங்கள இராணுவ அதிகாரியின் கையொப்ப உறுதிப்படுத்தலான விசேட அனுமதி அட்டை எல்லாம் பொக்கெற்றோடு பிடுங்கி எறியப்பட்டு.......

# சிறைக்காலம்

சத்துருக்கன்

இராணுவத்தினனின் போகும் படியான உத்தரவு. எல்லோரினதும் கால்கள் இயங்க, அவன் தெருவில் தனித்து விடப்பட்டான். ஆன்மா மூச்சிறைத்தது. அவனால் என்ன செய்ய முடியும்?

தப்பித்துக் கொண்டதே பெரும்பேறு. இனி அவங்களிட்ட திரும்பவும் போய் பறி கொடுத்தவற்றைப் பெற்றுக் கொள்வதில் உள்ள சிரமம் அவை கிடைக்குமா? கிடைக்காதா? அதில் கூட நம்பிக்கையில்லை.

தோள்மூட்டு வலித்தது. முதுகில் பாரம் சுமப்பதான உணர்வு. வேதனையின் உச்சத்தில் அவன். எப்படியாவது அவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லாது போனால் வீடு செல்கிறபோதுகூட மறுமுறை கைது செய்யப்பட்டு முகாமுக்கு மீண்டும் கொண்டு போக நேரிடலாம்.

மீண்டும் அவன் முகாம் வாசலில் கையேந்தி நிற்க வேண்டியநிலை..... நீண்ட நேரக் காத்திருப்பு- சலிப்புத் தட்டியது.

கைது செய்து ட்ரக்கில் ஏற்றி எப்படி வேகமாக கொண்டு வந்தனர். ஏழு மைல்கள் சில நிமிடங்களில் கழிந்ததே தெரியவில்லை. இனி போகும்போது எப்படி....? நினைக்க என்னவோ வெல்லாம் செய்தது.

முகாமின் எங்கோ ஒரு மூலையில் கதறல் ஒலி. அது ஆணின் குரலாக இருக்கவில்லை. மெல்லிய கீச்சிட்ட குரல். அது அபாயம் கலக்க காற்றில் கலந்து வந்தது. மீண்டும் மீண்டும் வெளிவந்த அந்தக் குரல் சடாரென நின்றது. அவன் இதயம் வெடித்துவிடும் போலிருந்தது.

வெய்யில் முகத்தில் அடித்தது. அவனது கனத்த எதிர்பார்ப்பு தன்னுடைய அடையாள ஆவணங்களைப் பறித்தவன். அங்குமிங்கும் போய் வருகின்ற இராணுவக் கைகளை உற்று நோக்கியிருந்ததின் சலிப்பு. மெல்ல எழுந்து சென்று மீண்டும் அவர்களிடம் கெஞ்சினான்.

புறுபுறுத்தலோடு அவனது கரைச்சலின் வலி தாங்காமல் உள்ளே சென்ற இராணுவத்தினன் கையில் அடையாள அட்டையுடன் மீண்டான். அவனை ஒரு தரம் நிமிர்ந்து பார்த்து அடையாள அட்டையையும் திருப்பிப்பார்த்தான், பிறகு அதைக்கொடுக்க அவன் வேண்டிக்கொண்டான். கைகளில் அடையாள அட்டை மட்டுமே எஞ்சிற்று. மற்றவைக்கு என்ன நேர்ந்திற்றோ?

இராணுவத்தினனை நிமிர்ந்து எதுவும் கேட்கமுடியாதவனாய் அவன். கையில் கிடைத்ததை வைத்து நிறைவு கொள்வதே நன்று அவன் நன்றி சொல்லி திரும்ப சடார் என பிடரியில் ஒன்று. அவனது நன்றிக்கு மறுபரிசாகியது.

அவன் திரும்பவே இல்லை. தலைசற்று வலித்தது. கை எடுத்து பிடரி தடவ முனையவில்லை. என்ன செய்ய? எத்தனையோ பேரிடம் வேண்டிக்கட்டிய பிறகு, இப்போது சண்டேஸ்வரர் பூஜை முடிந்து கை தட்டின மாதிரி.

உடல் வலிக்க வலிக்க இயலாமையிலும் சளையாமல் இயங்கிக் கொண்டே இருந்தான். அவனது கால்கள் ஓய்வதாயில்லை. அக்கணத்தில் தெரிந்தவர்கள்கூட கண்டும் காணாதவர்போல். ஆபத்து..... அவசரம்....எதற்கும் எவருக்கும் இப்போது உடனிருப்பதோ, உதவிபுரிய முன் வருவதோ அருகிப் போய்......

பிரதான வீதி சந்திக்கின்ற அந்த நாற்சந்தியை தாண்டாமல் வீதியெங்கும் மனிதத் தலைகள் நிறைந்திருந்தன. வாகனங்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. அவன் அதைக் கடந்து போக வேண்டும். வீதியில் யாரோ பெரிய அதிகாரி பயணம் செய்வதற்கான ஏற்பாடு. இப்படிப் பல தடவை நடைபெற்றிருக்கிறது. சந்தர்ப்பத்தில் வீதியோரத்தில்கூட ஒதுங்க நேர்ந்திருக்கிறது.

தூரத்தே வாகனங்களின் இரைச்சல் கேட்டது- அது பிரதான வீதியில் வந்து கொண்டிருக்கும் வாகன அணியினதுதான். அவன் வீதியை நெருங்க வாகன அணிவகுப்பு விரைந்தது.

பாதை மணிக்கணக்கில் மூடப்பட்டிருந்தது. அதுவரையும் எல்லோரதும் காத்திருப்பும் நீண்டே இருந்தது.

தனி ஒரு மனிதனாக இந்த உலகை வலம் வந்தவனும், பூமியிலிருந்து விண்ணுக்குத் தாவியதும் மனிதர்களின் பிரதிநிதிதானே? அவர்களுக்கு இந்த முழு உலகமுமே மதிப்பாயிருக்கிறது எப்போதுமே. அந்த வாகனத்தில் போகிற அதிகாரியும் மனிதனின் பிரதிநிதியல்லவா? பிறகேன் இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள்? எல்லாம் உயிர்பற்றிய பிரச்சினைதானே?



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்கு என்ன நடந்தேறுமோ என்கிற பயப்பீதி. பலத்த பாதுகாப்புக்கள்கூட சில சமயங்களில் பிசகிப் போகிறதே.

பாதைக்கு அரோகராச் சொல்லப் பட்டது. எல்லோரும் முண்டியடிக்க..... அவன் ஓரமாய் ஒதுங்கினான். அவனுக்கு எதிலும் காத்திருப்பே.

நீண்டநேரம் அவனையே பார்த்தபடி நின்றான் இளைஞன். அருகில் வந்து அவ னிடம் என்வோ கேட்டான். அவ்விளைஞனது கோரிக்கை அவனைத் தன்னோடு வருமாறு அழைப்பதுதான்.

தனிமனிதன் கூடபயணிக்க முடியாத அந்தச் சயிக்கிள். அதனது முன்பின் பாகங் கள் ஒழுங்கற்றுக் கிடந்தன. சந்தனப் பூச்சுக் கள் கான்றிலை அலங்கரிக்க, பின் கரியல் பாரத்தோடு காட்சியளித்தது.

பெரும்சுமை. இந்தச் சுமையோடு எப்படி அவனையும் ஏற்றி அந்தச் சயிக்கிளில் பயணிக்க முடியும்? அவனது நிலையினை அறிந்துதான் இளைஞன் இந்த முடிவுக்கு வந்திருக்கின்றான். என்றாலும் அந்த இளை ஞனின் வார்த்தைகளுக்கு ஆட்பட்டுப் போவ தில் உள்ள சிரமம் நெஞ்சை உறுத்தியது. மனச்சாட்சி-மனம் பின்தள்ளியது. என்ன செய்வது? அவன் முடிவெடுக்க முடியாத நிலையில் நின்று திணற....

"என்ன யோசிக்கிறியள். ஒண்டுக்கும் பயப்பிடாமல் ஏறுங்கோ. நான் கொண்டு போய் விடுகிறன்" இளைஞனின் பேச்சுக்கு மறுபேச்சு இனி அவனிடமிருந்து வரப்போரவ தில்லை. அது தனக்குக் கிடைத்த பெருவரம் என்றே நினைத்தான்.

ஒருவாறு சமாளித்தபடி ஊன்றி உன்னி நிமிர்ந்தான் இளைஞன். பாரச்சுமையோடு சைக்கிள். ஒவ்வொரு மிதித்தலிலும் சைக் கிளின் ஒவ்வொரு பாகங்களிலிருந்தும் வெவ வேறான ஒலிகள். வழியில் குன்று குழிகளை சமாளித்தபடி பயணம் தொடர்ந்தது.

முன்பின் அறிமுகமில்லாத இருவரது ஒருமித்த பயணம் இளைஞன் எதுவும் பேசவில்லை. அவனது நிலை உணர்ந்துதான் இளைஞன் பேசாமனிதனானானோ? இருவரி லும் மௌனமே குடிகொண்டது.

சைக்கிள் பிரதான வீதியில் சென்று கொண்டிருந்தது. நன்கு பரிச்சயமாகிப் போன வீதி. வீதியின் இருமருங்கும் தொட்டம் தொட்டமாய் குழி தோண்டி, பின்னர் மூடப் பட்டிந்தது. அவை மின் விளக்குகளைத் தாங்கிநின்ற கம்பங்களின் குழிகள்.

தூரத்தே தெரிகின்ற அந்த வெட்ட வெளி. உழுதுதள்ளிய மாவீரர் துயிலும் இல்லம். கண்கொடுத்துப் பார்க்க முடியாக் காட்சியாய்..... நெஞ்சைக் குமட்டியது. அவ னது மனம் இருப்புக்கொள்ளவில்லை. அழித் தவர்களைத் திட்டித் தொலைக்கவேண்டும் போல் இருந்தும் நீண்ட மௌனத்தையே தொடர்ந்தும் விதைக்க வேண்டியதாயிற்று.

ஒவ்வொரு வருசத்தின் நவம்பர் இரு பத்தி ஏழிலும் நெஞ்சைவிட்டகலா உயிர்ப் பூக்களை துதிக்கின்ற நாள். அந்தநாளில் இந்த இடம் எப்படிக் காட்சி தரும்....

அந்த மயானத்தின் செம்மண் கண் ணீரால் ஊறிக்கசியும் கல்லறைகள் முன் எரிகின்ற சுடர்விளக்குகள். நெஞ்சம் உருக காற்றோடு காற்றாய் கலந்து வருகின்ற அந்தப்பாடல் விம்மி விக்கி விதிர் விதித்தழ....

இப்போது எதுவுமற்று யாருமே உட்புக முடியாதபடி எவரும் கண்டு கொள்ள முடி யாமல் அழிந்து மண்ணோடு மண்ணாகிப் போன நினைவுக்கற்கள், உறவுகள், நட்புகள் இனி எப்படி அஞ்சலிக்கப்போகின்றனரோ?

வீடுகளில்கூட மரணித்துப் போனவர் களின் சுவடுகள் எவையும் வெளித்தெரியாமல் புதைத்தும், கிழித்தும், எரித்தும்.... முகம் பார்க்க முடியாத கோலமிது. யாரிடம் இதைச் சொல்ல? இந்தக் காலத்தை யெண்ணி யாரிடம் கண்ணீர் வடித்தழ நெஞ்சை அழுத் தும் நினைவுகளுடனே நீண்ட பெரு மூச்சு.

"உவங்கள் எதைத்தான் விட்டு வச்ச வங்கள் உவங்கட காலமும் எத்தனை நாளைக்கு இஞ்ச நிலைக்கப் போகுது" அவன் நினைவு கலைய எழுந்த இளைஞனின் வார்த்தைகள்.

சாதாரண மனிதனாக இருக்கும் இவ னிடம் எப்படி இந்த வார்த்தைகள் .....? முன் பின் தெரியாமல் இந்த வார்த்தைகளை எப்படி வெளியிட முடிந்தது. அவனது மனம் கேள்வி களைச் சமந்தது.

அவன் நினைத்தது சரி சயிக்கிளில் ஏறுமுன்னரே இளைஞன் பற்றி புரிந்து கொண்டான். இளைஞனை திரும்பி நிமிர்ந்து பார்த்தான். கண்கள் சிவந்திருந்தன. மூச் சிரைக்க முகத்தில் வியர்வை வழிந்தோடியது. சயிக்கிளை நிறுத்தினான் இளைஞன். எதுவும் பேசவில்லை. சயிக்கிளை வலப்பக்கமிருந்த ஒழுங்கைக்குள் திருப்பினான். அவனுக்கு இவன் நன்றி சொல்லி, மறையும் வரை காத்திருந்தான்.

தூரத்தே தெரிந்த 'செக்பொயின்ற்' அதைத்தாண்டி அரை மைல்களுக்கு மேல் சென்றால்தான் அவனது வீடு. இது வரைக் கும் வந்ததே பெரும் பேறாகிவிட்டது. இனி....

அந்த செக் பொயின்ரை தாண்டுவதில் ஏற்படப் போகின்ற சிரமம். இராணுவத் தினருக்கு தன்னிலை பற்றிப் புரியுமா? அவர்களுக்கு எப்படி விளங்கவைக்கமுடியும்? என்கிற கேள்வி. மீண்டும் கைது செய்யப் படலாம் என்ற அச்சம்.

மெல்ல நடக்க கால்கடுத்தது. எவரு மில்லாத் தனித்தெருவில் அவன் நடந்து கொண்டேயிருந்தான். வீதியெங்கும் கூரிய ஆயுதங்களைச் சுமந்தபடி பச்சைத் தொப் பிகள். என்றைக்குமில்லாதபடி குதூகல மாக.....

அவன் நினைத்தது போல் எதுவும் நிகழவில்லை. சிரமம் எதுவுமற்று செக் பொயின்ரைக் கடக்க முடிந்தது. அதைக் கடந்தது மனத் திருப்தி. அவன் விரைந்து நடக்க முயன்று தோற்றான்.

அவனது அம்மா அவன் மீது அதிக பாசம் எதுவும் உண்ணாமலே அவன் வரவுக்காய் அழுதுபுலம்பியபடி வாசலில் காத் திருப்பாள். அல்லது அவனைத் தேடி ஒவ் வொரு முகாம் வாசல்களாக அலைவாள். கைது செய்யப்பட்டு காணாமலே போகும் எத்தனையோ மனிதர்கள் பற்றிய தகவல் களை அம்மாவும் நன்கு அறிந்தவள். தன் பிள்ளைக்கும் அப்பிடியொரு நிலைதானோ என்கிற முடிவில் தன் உயிரையே மாய்த்துக் கொள்ள முனைவாளோ? சீ, அவள் அப்படிப் புத்திகுறைந்தவளல்ல. எத்தனையோ இடர் சுமந்து அவனைப் பெற்று வளர்த்து ஆளாக் கிய புத்திசாதுரியமான குடும்பத்தாய். அவ் வளவு அவசரம் அவளில் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

மூக்கிலிருந்து இரத்தம் வடிந்தது. துடைத்துக்கொண்டான். வீட்டை அடைய இன் னும் கூப்பிடு தூரம் தானிருக்கும். பிள் ளையார் கோவிலைக் கடந்தால் வீட்டை போனமாதிரித்தான்.

"தன்பிள்ளை எப்போதும் தன் கூடவே இருக்கவேண்டும். அவனது மணவாழ்க்கை, முதல் பேரப்பிள்ளையை தூக்கித் தாலாட்டி வளர்க்கும் காலம் வரை அவன் கூடவே வாழ்ந்து கட்டையில் ஏறவேண்டும், தன் உடலுக்கு அவன் கையாலேயே கொள்ளி வைக்க வேணும்......." என்கிற கனவுகளை வெறுத்துத் தள்ளினாள் அம்மா. அவனை இந்த ஊரைவிட்டே வேறெங்காவது அனுப்பி விட வேண்டும். எங்கு இருந்தாலும் அவன் உயிரோடு வாழ்ந்தால் சரி என்ற எண்ணமே அவளிடம் எதிர் காலம் பற்றிய எதுவித பிரக்ஞையுமற்று.

அவனுக்கும் இன்றைய ஊரின் நடப்புக் கள் பிடிக்கவில்லை. தன் ஆசிரியத் தொழில் தொலைந்து போனாலும் பரவாயில்லை எங் காவது போய் தப்பித்துக் கொள்ளவேண்டும் என்கிற முடிவு. ஆனாலும் அம்மாவின் பிரிவு- அதைத் தாங்க முடியாமலே இருக்கப் போகி றது என்றைக்கும்.

அவன் கோவிலை அண்மிக்க மங்கள வாத்தியங்களின் பேரொலி அதிர்ந்தது புதிய சினிமாப் பாடலொன்றை ஆலாபனை செய்து கொண்டிருந்தது நாதஸ்வரம், தாளம் பிச காது கணீரென்று ஒலித்தது. தவில்.

பச்சைநிற வாகனங்கள் வீதியெங்கும் பரவி நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. மங்கள வாத்தியங்கள் ஓங்கி ஒலிக்க தோழர் தோழி களுடன் கைகோர்த்தபடி புதுமணத் தம்பதி கள் மலர்ச்செண்டு ஏந்தி வருகின்ற காட்சி.... பார்க்க அழகாய்த்தான் இருந்தது. மலர் மாலைகள் மார்பை நிறைத்திருந்தன. அவர் களுக்கிடையே மெல்லிய புன்சிரிப்புத் தவழ்ந்து வர....

அவன் வீதியின் ஓரத்தில் ஒதுங்கினான். வந்து கலியாணத்தைக் கட்டிப் போட்டு பிறகு எங்காலும் துலைஞ்சு போயிடுவாங்கள். அது கள் வாழாவெட்டியாய் இருக்க.... அவங் களுக்கென்ன அவளவைக்கும், பிள்ளை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறைக்காலம்

யளை விரும்பிக் கட்டிக்கொடுக்கிறதுகளுக்கும் மெல்லோ..... அருகில் நின்ற ஆச்சி வாய் திறக்க பக்கத்திலிருந்த பேத்தி தன் கைகளால் ஆச்சியின் வாயைப் பொத்தினாள். அவள் ஆச்சிக்கு எதனையோ சொல்லி இருக்க வேண்டும்.

“என்ரை வாய் சும்மா கிடவாது மோனை” ஆச்சி தன்னைத்தானே நொந்த கொண்டாள். பிறகு, மௌனமானாள்.

அந்தத் திருமணம்பற்றி அவனுக்குத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது அப்போது. இதனால்தானோ இவ்வளவு கூட்டம். பாதுகாப்பு, அவனுக்கு உடல் வேதனையையும் மீறி சிரிப்பே வந்தது.

மங்கள வாத்தியங்கள் முன் செல்ல வெள்ளை வேட்டியும் சேட்டுகளுமாக தெரிந்த தெரியாத முகங்கள். அவர்களில் அனேகமானோர் இராஜமுத்திரைக்காரர்களாக,

அவனுக்கு அவர்களைப் பற்றி முன்னரே நன்கு தெரியும். சிலருடன் நெருக்கமாகப் பழகியும் கதைத்தும் இருக்கிறான். முன்பு எத்தனையோ அரங்குகளைத் தங்கள் பிரசன்னத்தால் அலங்கரித்தவர்கள். இனவிடுதலை பற்றியும் வீர முழக்கமிட்டவர்கள். சிங்களத்தோடு எப்பொதுமே சேர்ந்து வாழ முடியாது என்று ஒற்றைக்காலில் நின்று உரக்கக் கத்தியவர்கள். இப்போது இந்தத் திருமணத்தின்போதும் கலகலப்பாய் எப்படி பிரசன்னமாயிருக்க முடிகிறது......? அவனுக்கு இவர்களை நினைக்கிறபோது கொதிப்பும் ஆவேசமும் எழுந்தது. அடக்கிக் கொடான்.

ஏற்கனவே ஸ்ராட் செய்யப்பட்டு நின்றது பச்சை மூடிய வாகனம். உள்ளிருப்போர் எல்லோரையும் வெளிக்காட்டாத அதன் அமைப்பு. வாகனம் கோயில் முகப்புக்குவர தோழர் தோழிகளுடன் மணமக்கள் ஏறி அமர்ந்தனர். கதவு மூடப்பட அது விரைந்தது.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஏனையவற்றில் அங்கு நின்றவர்கள் தொற்றிக் கொண்டனர். வாகனங்கள் முகப்பிலிருந்து ஒன்றன் பின் ஒன்றாக நகர்ந்தன.

கடைசியில் சென்ற ட்ரக் வண்டியில் தான் ராஜமுத்திரைக் காரர்களில் அனேகர். கலகலத்த சிரிப்புடன் அது விரைந்தது. அவன் அந்த ட்ரக் கை கூர்ந்து கவனித்தான். அவன் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு நூற்றுக்கணக்கான மனிதர்களோடு அடைத்துக் கொண்டு செல்லப்பட்டது போன்ற வாகனம். நெருங்கி, ஒடுங்கிப்போய் நெரிபட எங்கோ தொலைவுக்குக் கொண்டு சென்ற காட்சியும் இதுவும் ஒருமித்து நின்று நிழலாடின.

அவன் நடந்தான். மிகவேகத்தோடு, வீட்டை அடையும் வரை......

பஸ் நின்றது. அவன் ஏறிக்கொள்ள அது நகர்ந்தது. காலியாக இருந்த இடத்தில் அமர்ந்து கொண்டான். பஸ்சில் சனநெரிசல் இருக்கவில்லை. இருக்கை மட்டுமே நிறைந்து பஸ்சினுள் இசை கலந்த காற்று பரவியது. அதில் எல்லோரும் மெய்மறந்து போயினர்.

முன்பு கரிகக்கிய வாகனங்கள் அந்த வீதியை அலங்கரிக்கும். ஒவ்வொரு கிடங்கிலும் விழுந்தெழ கிழடுகட்டையள் திட்டுங்கள். பஸ்சுக்குள் மித மிஞ்சின சனம். இருந்தாலும் ரோட்டில விடாமல் ஏத்துவாங்கள். குழந்தை குட்டியோட வாறவையளுக்கு எழும்பி யாராவது ‘சீற்’ குடுப்பினம். பஸ்சில போடுற பாட்டில ஒருவித உணர்வு மனதில என்னவெல்லாமோ வந்து நிழலாட பயணம் தொடரும்.

இப்ப இந்த சொகுசு பஸ்சில என்ன தான் கிடக்கு. பம்பலடிச்சு சிரிச்சுக் கதைச்சு துள்ளி விழுந்துபோன பஸ்சில இருந்த இன்பம்....... போதாக் குறைக்கு எங்க எதிலை எண்டில்லாமல் நிற்பாட்டி செக்கிங் பண்ணிறதிலேயே சீவன் போயிடும். அவனுக்கு அந்தப்பயணத்தை நினைக்கவே வெறுப்பாயிருந்தது.

பஸ்சில் பரவியிருந்த ரஹ்மானின் இசை கலைய பெண்ணொருத்தியின் விசும்பல் ஒலி பஸ்சை ஆட்கொண்டது. ஒவ்வொருவரது கண்ணும் அவளை நோக்குவதாக..... அவளுக்கு ஏதோ விபரீதம் நிகழ்ந்திருக்க வேண்டும். எழுந்து சென்று அவளை ஆசுவாசப்படுத்த எவரும் திராணியற்றவர்களாகவே இருந்தனர். ‘பெண் என்றால் பேயும் இரங்கும்’ என்பார்களே...... அதுதானா இது?

ரஹ்மானின் இசைக்கு தாளம் போட்டபடி எல்லோரும் இருக்கையில். அவள் மட்டும் ஏன் விக்கி விக்கி அழவேண்டும்?

அவளிடம் சென்று என்ன வென்று கேட்க வேண்டும்போல் மனம் உந்தித் தள்ளியது. அவன் எழும்ம ஏதோவொன்று கையில் பிடித்திழுப்பதான பிரமை. மீண்டும் அமர்ந்து கொண்டான்.

அவளின் கணவன் கைதாகி காணாமல் போயிருப்பானோ? அதற்கான அலைவுகளில் இதுவும் ஒன்றுதானோ? வாழ்வின் துணையிழந்துபோகும் துயரம் அவளில். விதவைக் கோலமாகிய நிலை. தன் எதிர்காலம் பற்றிய தவிப்பு. எல்லாவற்றையும் மீறி விழியிருந்தோடுகின்ற கண்ணீர்.

அவனது மனம் இருப்புக் கொள்ளவில்லை.அவன் அருகிலிருந்த மீசையில்லா மனிதரொருவர் கண்ணாடியைச் சரிசெய்தபடி சஞ்சிகையைப் புரட்டிக் கொண்டிருந்தார். கூடவே அங்கு பரவிய இசைக்கேற்ப தாளமும் போட்டபடிக்கு.......

இவரை எங்கோ பார்த்த ஞாபகம். அவனுக்கு அதிக பரிச்சயமில்லை. ராஜமுத்திரைக்காரருடைய தோற்றம். அவன் அவரை ஞாபகத்திற்குக் கொண்டு வந்தான். நூல் ஒன்றின் பின் அட்டையில் புகைப்படமாகப் பார்த்த அதேமுகம். அவன் நினைத்தது சரி. அவரேதான் அவர் பற்றி ஏற்கனவே படைப்புகளால் அறிந்திருந்த அவனுக்கு இப்போது நேரில் கண்ட திருப்தி. அவருடன் ஓரிரு வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்ள மனம் ஆவலாய்,

“சேர் மன்னிக்கவேணும். நீங்கள்......”

“ஓம் நான் தான்”

“ நீங்கள் முந்தி எழுதின அந்தக்கதை இஞ்ச நடக்கிறதை நன்றாகச் சித்தரிச்ச கதை. அதை இன்னுமொருக்கால் படிக்க வேணும் போல.....”

அவனது வார்த்தைக்கு அவர் மதிப்பளிப்பது போல் தெரியவில்லை.

காலை ஒன்றின்மேல் ஒன்றாக தூக்கிப் போட்டார். கையில் இருந்த சஞ்சிகை கைப்பையுள் திணிக்கப்பட்டது. அவரது பார்வை யன்னலூடாக வேறு திசைக்குத் திரும்பியது.

அவன் ஆவலோடு அவருடன் கதைக்க முனைய அவர் ஏன் இப்படி....?

அவனுக்குப் புரிந்து கொண்டது. மனிசன் ஏன் வீண் சோலியெண்டு பேசாமல் இருக்கிறார் போல இப்ப இஞ்ச நல்ல மனிசர எங்க தேடுகிறது? அவன் மனசு புறுபுறுத்தது.

“தம்பி கவனமெணை, எந்தப் புத்துக்குள் எந்தப் பாம்பு இருக்குதோ தெரியாது. குறுக்கால போவார் சிவிலுடையில எங்கையெண்டில்லாமல் நிப்பாங்கள். வீண் கதை, பேச்சு இல்லாமல் போன அலுவலோட இருக்கவேணும். வீணாக அவங்களிட்ட மாட்டுப்பட்டு, புடிச்சுக்கொண்டு போனால் அவ்வளவுதான்” அம்மா பயணத்துக்கான ஏற்பாடுகளில் இருந்தபோதே இதைத்தான் கூறினாள். இந்நேரத்திலும் அது அவனுக்கு ஞாபகத்துக்கு வந்தது.

முதல்முறையாக இராணுவத்தினரின் சுற்றிவளைப்பொன்றின்போது கைது செய்யப்பட்டு, கதறக்கதற அந்நேரத்திலும் நடந்தேறிய சித்திரவதைகள் நினைவில் நின்று சுழன்றடித்தது. நினைத்துப் பார்க்கவே ஏதோ செய்தது. அதை எப்படி மறக்கமுடியும்? அவன், ஆசிரிய அடையாளங்களை நிரூபித்தபிறகும் அது நிகழ்ந்தது.

அவர்கள் எதுபற்றியும் கவலைப்படுவதில்லையாம். தம் தேவைகளை நிறைவேற்றுவது. சொல்வதை தங்கள் இஸ்டம் போலவே அரங்கேற்றுவதுதான் அவர்களது கடமையாகும். பிறகு எப்படி மனிதவாழ்க்கை பற்றித் தெரியப்போகிறது.

பஸ் சந்தியைக் கடந்தபோது சட்டென நின்றது. எப்படி இப்படி விரைவாக “சடின் பிரேக்கை” சாரதியால் போட முடிந்ததோ? சடடென்று நிற்காதுவிட்டால் அவருக்கு ஏதா



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வது ஏற்பட்டுவிடுமோ?

பஸ்சினுள் திடீரென்ற இராணுவப் பிரசன்னம். சீற்றில் இருந்த சிலர் எழுந்து கொள்ள அதில் இராணுவத்தினரின் கொலு விருப்பு.

அவனுக்கு அருகில் இருந்த மனி தரும்கூட எழுந்து கொண்டார். அவன் யன்னலோரமாக மெல்ல அரக்கி அவரது இடத்தில். அவர் பஸ்சின் நடுத்தடியில் பிடித்த படியே நின்றார். அவர் அலுவலகத்தில் காட்டுற அதிகாரம் இராணுவத்தினர் முன் தோற்றுப் போயிருப்பதாய்.

அவனருகில் ஒரு சிப்பாய் அமர்ந்து கொண்டான். அவர்களை அவனுக்கு எப்போதுமே பிடிப்பதில்லை. முகம் பார்க்கவே பயமாக..... திரும்பிக் கூடபார்க்கவில்லை. அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. சிப்பாயின் அருகில் இருப்பதே சங்கடமாக இருந்தது. எழுந்து விலகி நிற்கமுயன்றான். உரோமக் கையொன்று எட்டிப் பிடித்திழுத்தது. திரும்பிப் பார்த்தான். சிப்பாயின் மெல்லிய சிரிப்பு. அமரும்படியாக இராணுவக் கையசைப்பு சினேகத் தோரணையில் இராணுவத்தினனின் அரவணைப்பா .....? அவனுக்கு விளங்கியது வேறு வழியின்றி அமர்ந்தான்.

இந்த ஊரின் கோலமறிந்து எதனையோ வெல்லாம் இழந்து எங்காவது தொலைந்து போகின்ற இந்தநேரத்திலும் இப்படி வதைபட்டு..... பஸ்சில் கூட அவரவர் இஸ்டம்போல் நடக்க முடியாதநிலை. அதிலும் சுதந்திரம் பறிபோயிற்றோ?

இனிய காற்றை சுவாசிக்க முடியாதபடி பச்சைச்சீருடைகளின் நாற்றம் பரவியிருந்தது பஸ்சில். சகிக்க முடியவில்லை. அவன் மௌனமாகவே இருந்தான். பஸ்சில் இசை கலக்க அது நகர்ந்தது. பச்சைத் தொப்பிகளின் கைகால்கள் தாளம் போட்டன. சிவனை மயங்க வைத்த இசை இவர்களையும் மயங்க வைத்திற்றோ. அப்படியானால் இங்கு எப்போதுமே கேட்டுக் கொண்டிருக்கும் சோக இசைக்கு எவரும் செவி கொடுப்பதாய் தெரியவில்லையே?

அவன் இவர்களின் கடந்த காலத்துள் அமிழ்ந்து போனான். கடந்து போனவற்றை மீட்காமலே நிகழ்காலம் பற்றிய சிந்தனைகளோடு வாழுகின்ற மனிதரினை அவனால் ஏற்க முடிவதில்லை எப்போதுமே.

இராணுவச்சிப்பாய் அவன் தோளை வருடிக்கொண்டே அவனிடம் என்னவோ கேட்டான். அவனுக்கு ஒன்றுமாய்ப் புரியவில்லை பதில் கூறுவதில் தவிப்பு மீண்டும் சிப்பாயின் கேள்வி. கொச்சைத்தமிழ் கலந்திருந்தது. சிறிது விளங்கியது. ஏதோ கையசைத்தாயினும் சமாளிக்க வேண்டும்.

துாரத்தில் ஒரு வெடிச்சத்தம் 'சடாஷ' ரென விழுந்தடித்து எழுந்து சென்றான் சிப்பாய் எப்போதுமே தயார் நிலையில் கிடக்கும் 'ரைபிளை' உடன் தயார்படுத்த வேண்டிய தேவை ஏற்படவில்லை.

பஸ் இராணுவ முகாமினை அண்மித்திருந்தது.பெரும் நிம்மதி. சிப்பாயை நினைக்க அவனுக்கு சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டான். எங்கோ தொலைவில் கேட்கிற வெடிச்சத்தத்துக்கு இப்படியெல்லாம் பாய்ந்தடித்து ஓடுகிறார்களே.....

பஸ் முகாமின் சற்றுத் துாரத்திலேயே நிறுத்தப்பட்டது. சனத்தோடு சனமாக அவனும் இறங்கி நடந்தான். பஸ் கடப்பைக் கடந்து போனது. பயணிகளின் நீண்ட வரிசை. இரணுவத்தின் ஒவ்வொரு அழைப்பிலும் ஒவ்வொருவராய் நகர்ந்தனர்.

அவனது 'செக்கிங்' முடிவடைந்து விட்டது. பஸ்சை நோக்கி நடந்தான். முகாமைக் கடந்து வெகுதுாரத்தில் அது நிறுத்தி"வைக்கப்பட்டிருந்தது.

ஒரு 'மினிதியேட்டர்' அதன் முன் ஆபாசங்கள் வெளித்தெரிய விளம்பரப் படுத்தப்பட்டிருந்தது புதிய படம் ஒன்று அருகில் நீண்டு இருந்த மதிற்சுவர். அதில் எழுதப்பட்டிருந்த மாவீரர்களின் பெயர்களை மூடி மறைத்து ஒட்டப்பட்டுள்ளன படத்துக்கான பல வர்ணப் போஸ்ரர்கள்.

கண்கள் கூசியது மனம்துக்கித்தது. இந்தக் காட்சியை அவனால் பார்க்கவே முடியவில்லை. அதன் மூல காரயங்களை நினைக்க கொன்றுவிட வேண்டும் போல்.... இவர்கள் எதையுமே கணக்கிட்டுக் கொள்ள மறந்தவர்கள் காலம் எப்போதும் ஒரேமாதிரியாய் இருப்பதில்லையென்று.

மனச்சுமை தீர திட்டித் தொலைத்தான். அவனால் இதைத்தவிர வேறு என்ன செய்ய முடியும். இனி இவற்றை எப்போதுமே காணக் கிடைக்காத பாக்கியமென்று கண்களை இறுக மூடினான். பஸ்சில் பாடல் தவழ்ந்து வர அது நகர்ந்தது.

## "கண்கள் கூறும் வார்த்தைகள்"

*'கண்கள் கூறும் வார்த்தைகள்' ஒகஸ்ட் மாதத்திற்கான உங்கள் கவிதைகள் நவம்பர் மாத எரிமலையில் வெளிவருகின்றன*

**காணும் கண்களே, கூறும் வார்த்தை என்ன? அஞ்சல் ஊடாக எரிமலைக்கு....**






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net








நெதர்லாந்தின் வியானன் நகரில் 27.10.2001 அன்று தமிழர் கலைப்பண்பாட்டுக் கழகத்தின் நெதர்லாந்துப் பணியகத்தால் புரட்சி இசைக்குயில்2001' சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி இடம் பெற்றது. வெகு சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்வின் இடையில் பல கலை நிகழ்வுகமும் இடம்பெற்றன.

# பதிவுகள்

**எறிகணைத் தாக்குதலில் இளைஞர் பலி!**

மட்டக்களப்பு ஆலங்குளம் பகுதியில் 03-10-2001 அன்று நாவலடி சிங்களப் படை முகாமில் இருந்து மேற்கொள்ளப் பட்ட எறிகணைத் தாக்குதலில் ஆலங்குளம் நீர்த்தேக்கத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்த ஒரு குழந்தையின் தந்தையான 25 வயதுடைய நாகமணி நாகலிங்கம் என்ற பொதுமகன் கொல்லப்பட்டார்.

**மன்னார் கடலில் துப்பாக்கிச்சூடு, இரு இளைஞர் பலி.**

04-10-2001 அன்று மன்னார் கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த பொதுமக்கள் மீது சிங்களப்படை நடாத்திய துப்பாக்கிச்சூட்டில் 19 வயதுடைய தனம் நந்தகுமார், 18 வயதுடைய செல்வநாயகம் செல்வகுமார் என்னும் இரு இளைஞர்கள் பலியாகினர்.

**முல்லைத்தீவில் கடற்சமர்.**

05-10-2001 அன்று முல்லைத்தீவுக் கடற்பரப்பில் ரோந்து சென்றுகொண்டிருந்த சிறீலங்காக் கடற்படையின் அதிவேக டோரா பீரங்கிக்கலம் மீது கடற்புலிகள் நடத்திய துணிகர மான தாக்குதலில் சிங்களப்படையின் அதிவேக டோரா பீரங்கிக் கலம் ஒன்று கடுமையாகச் சேதமடைந்துள்ளது. காலை 10 மணி முதல் மதியம் ஒரு மணிவரை நீடித்த இத்தாக்குதலில் கடற்படையினர் பலர் கொல்லப்பட்டனர். கடற்புலிகள் தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**சிறீலங்கா விமானப்படை முகாம் அழிப்பு.**

திருகோணமலையில் யாழ்வீதி நெல்வேலி என்னும் இடத்தில் அமைந்திருந்த சிறீலங்கா விமானப்படை முகாம் ஒன்று 09-10-2001 அன்று இரவு 11.30 மணியளவில் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டது இத் துணிகரத் தாக்குதலில் அங்கிருந்த ஆயுதங்கள், இராணுவதள பாடங்கள் போன்றவை விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டன. விமானப்படையினர் கொல்லப்பட்டதுடன் ஏழு பேர் படுகாயம் அடைந்துள்ளனர். மேலும் பலரைக் காண வில்லை என சிறீலங்கா தரப்பு தெரிவித்திருக்கின்றது. விடுதலைப் புலிகள் தரப்பில் இருவர் வீரச்சாவடைந்துள்ளனர்.


**விடுதலைப் புலிகளின் தாக்குலில் இரு இராணுவத்தினர் பலி.**

09-10-2001 அன்று வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் நால்வர் படுகாயம் அடைந்தனர்.

**பத்திரிகையாளர் எழுச்சி தினம்.**

சிறீலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வைத்து படுகொலை செய்யப்பட்ட மறைந்த பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனது ஓராண்டு நினைவு தினத்தையொட்டி கடந்த 17-10-2001 அன்று யாழ்



www.tamilarangam.net

பல்கலைக்கழகத்திலும், யாழ் மாவட்ட பாடசாலைகளிலும் பத்திரிகையாளர் எழுச்சிதினம் அனுஷ்டிக்கப்பட்டது

**இராணுவப் பொலிஸ் கூட்டுநிலைகள் தாக்கி அழிப்பு!**

திருகோணமலை மாவட்டத்தின் பூவரசந்தீவு, சமச்சதீவு ஆகிய பகுதிகளில் அமைந்திருந்த சிங்கள இராணுவ பொலிஸ் கூட்டு நிலைகள் மீது விடுதலைப் புலிகள் 17-10-2001 அன்று நள்ளிரவு நடத்திய அதிரடித்தாக்குதலில் இரு இராணுவத்தினரும், நான்கு இராணுவப்பயிற்சி பெற்ற பொலிசாரும் படுகாயமடைந்துள்ளனர். இராணுவப்பயிற்சி பெற்ற பொலிசார் ஒருவர் கொல்லப்பட்டார். இரண்டு பொலிஸ் நிலைகளை தாக்கிக் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் அங்கிருந்து ஆயுதங்கள் பலவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

**முல்லைக்கடற்பரப்பில் பாரிய கடற்சமர்.**

21-10-2001 அன்று முல்லைக்கடற்பரப்பில் சிறீலங்காக் கடற்படையின் டோரா அதிவேகத் தாக்குதற் கலங்கள் மீது விடுதலைப் புலிகள் மீண்டும் தாக்குதல் நடத்தினர். சுமார் மூன்றரை மணி நேரமாக நடைபெற்ற இக்கடுமையான கடற்சமரில் இரு கடற்படைக்கலங்கள் கடற்புலிகளின் தாக்குதலில் முற்றாகச் சேதமாக்கப்பட்டன.சிஹ சிறீலங்கா இராணுவத்தின் உயர் அதிகாரி உட்பட ஏழு இராணுவத்தினர் பலி!

**சிறீலங்கா இராணுவத்தின் உயர் அதிகாரி உட்பட ஏழு இராணுவத்தினர் பலி!**

24.10.2001 அன்று யாழ்குடாநாட்டில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலில் சிறீலங்கா இராணுவத்தின் உயர் அதிகாரியான. கேணல். லயனல் விஜேயக்கோன் உட்பட ஒருவர் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஒருவர் படுகாயம் அடைந்தார். பலாலியில் இருந்து பருத்தித்துறை நோக்கி பஜிரோ வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது கோயில் ஒன்றின் சுவரோரமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டி ஒன்றில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டு வெடித்ததில் இவர்கள் கொல்லப்பட்டனர்.

**சிறீலங்காக் கடற்படையின் பாரிய எரிபொருள் கப்பல் அழிப்பு!**

30.102001 அன்று பருத்தித்துறைக் கடற்பரப்பில் இராணுவத்தின் தேவைக்காக பலத்த பாதுகாப்புகளுடன் தமிழீழத்தின் திருகோணமலைத்துறை முகத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கி ஆயிரம் மெற்றிக்தொன் எரிபொருளை ஏற்றிச்சென்ற பாரிய எரிபொருட் கப்பல் ஒன்று கடற் கரும்புலிகளால் தாக்கியழிக்கப்பட்டு முற்றிலுமாக முழ்கடிக்கப்பட்டது. கடற்கரும்புலிகளின் இத்துணிகரத்தாக்குதலில் கப்பலில் பயணம் செய்த கடற்படையினர் அனைவரும் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகள் தரப்பில் இரு ஆண் கடற்கரும்புலிகளும், இருபெண் கடற்கரும்புலிகளும் வீரச்சாவடைந்தனர்.







இத்தாலி பலெர்மோ நகரில் தமிழீழ விடுதலை புலிகள் இத்தாலிப் பணியக மாணவர் அமைப்பினரால் 09.09.2001 அன்று 2001ம் ஆண்டிற்கான மாவீரர் நினைவு வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடாத்தப்பட்டது. இதன் இறுதிப் போட்டி 30.09.2001 அன்று நடாத்தப்பட்டது. இறுதிப்போட்டியில் நண்பர்கள் வி.க.A அணி வெற்றிபெற்று 2001ம் ஆண்டிற்கான மாவீரர் நினைவுச்சுற்றுக் கிண்ணத்தை பெற்றுக்கொண்டனர்.



பிரான்ஸ் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் தமிழீழ பொருண்மியம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் பற்றிய அறிமுகங்களுடன்கூடிய கண்காட்சி பாரிசில் 21-10-2001 அன்று காலை முதல் மாலை வரை நடை பெற்றது. மறைந்த லெப்.கேணல் நாதன், கப்டன் கஜன் நினைவாக ஏற்பாடு செய்யப்பட்ட இக்கண்காட்சியில் தமிழீழ வரைகளும் திட்டங்களும் கணினிகளின் உதவியுடன் விபரித் துக் காட்டப்பட்டது.

சுற்றுச்சூழல் மற்றும் பசுமை வாழ்வு தொடர்பான அறிமுக தரவுகளைக் கொண்ட காட்சியறைகளும் அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

மேலும் தமிழர் புனர்வாழ்வுக் கழக பணிகள் விபரிக்கப் பட்டிருந்தன. இளையதலைமுறை பள்ளி மாணவர்களுக்கு இக்கண்காட்சி மிகப் பயனுள்ளதாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






தமிழீழ விடுதலைக்காய் தனது உயிரை அர்ப்பணித்த விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கேணல் சங்கர் அவர்கள் நினைவு நிகழ்வுகள் அவுஸ்திரேலியாவில் சிறப்பாக நடைபெற்றது, அந்நிகழ்விலிருந்து.



தமிழீழ விடுதலைக்காய் தனது உயிரை அர்ப்பணித்த விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கேணல் சங்கர் அவர்கள் நினைவு நிகழ்வுகள் சுவிற்சர்லாந்தில் சிறப்பாக நடைபெற்றது, அந்நிகழ்வுகளிலிருந்து.







நெதர்லாந்தின் வியானன் நகரத்தில் 27.10.2001 அன்று கோணல் சங்கர் நினைவாக நினைவெழுச்சி நிகழ்வு நெதர்லாந்துப் பணியகத்தால் நடாத்தபட்டது. மலர் வணக்கத்துடன் ஆரம்பமாகி பல கலை நிகழ்வுகள் இடம்பெற்ற இவ்வெழுச்சி நிகழ்வில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். நினைவெழுச்சி வணக்கம் உணர்வுபூர்வமாக 45 நிமிடங்கள் நடைபெற்ற எழுச்சிகானத்துடன் நிறைவு பெற்றது.

பிரான்சில் பாரிஸ் நகரத்தில் 04.10.01 அன்று மூத்த உறுப்பினர் கேணல் சங்கர் அவர்களுக்கான நினைவெழுச்சி நிகழ்வில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு கேணல் சங்கர் அவர்களை நினைவு கூர்ந்தனர்.







தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





இத்தாலியின் பலெர்மோ நகரத்தில் 29.09.01 அன்று கேணல் சங்கர் அவர்களுக்கான வீரவணக்க நிகழ்வெழிச்சி சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு கேணல் சங்கர் அவர்களுக்கு மலர் வணக்கம் செய்தனர்

# பதிவுகள்

நோர்வே ஒஸ்லோவில் தியாகி லெப்.கேணல் தீலீபன், கேணல் சங்கர் ஆகியோரின் நினைவெழுச்சி நிகழ்வு 29.09.01 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது பல கலை நிகழ்வுகள் இடம்பெற்ற இவ்வெழுச்சி நிகழ்வில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு தியாகி லெப்.கேணல் தீலிபன், கேணல் சங்கர் ஆகியோரை நினைவு கூர்ந்தனர்.





தமிழீழ விடுதலைப் போரில் முதன்முதலில் தனது உயிரை விடுதலைக்காய் அர்ப்பணித்த விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பின் பெண் போராளி 2ம் லெம். மாலதியின் 14வது ஆண்டு நினைவு நாள் கனடாவின் பல பகுதிகளிலும், ஜேர்மனியிலும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டன. அந் நிகழ்வுகளிலிருந்து சில காட்சிகள்.

ஜேர்மனி



ஜேர்மனி



கனடா



கனடா





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நினைவுக் குறிப்பு

## தமிழர் விடுதலை வரலாற்றில் ஒக்டோபர்

### பன்னிரு வேங்கைகளின் வீரகாவியம்: இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம்.

நிராயுத பாணிகளாக தமிழீழத்தின் வடகடற் பிராந்தியத்தில் பயணம் செய்த யாழ் மாவட்டத் தளபதி லெப். கேணல் குமரப்பா, திருமலை மாவட்டத் தளபதி லெப். கேணல். புலேந்திரன், மேஜர் அப்துல்லா உட்பட 12 வேங்கைகளை 03-10-1987 அன்று சிறீலங்காக் கடற்படை கோழைத்தனமான வகையில் கைது செய்தது. ஒப்பந்தத்திற்கு முரணாக சிங்கள அரசு இந்திய அரசின் ஒத்துழைப்போடு இவர்களை விசாரணை செய்ய முற்பட்ட வேளையில் 05-10-1987 அன்று சயனைட் உட்கொண்டு வீரகாவியம் படைத்தனர். இவ்வீர வேங்கைகள்.

### இந்திய இராணுவத்திற்கெதிரான புலிகளின் முதற் தாக்குதல்:

தமது ஆதிக்க நலன்களுக்காக ராஜீவ் காந்தி தலைமையிலான இந்திய அரசு சிறீலங்கா அரசுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம். தமிழீழத்தினை ஆக்கிரமித்த இந்தியப்படைகளின் தமிழர் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக விடுதலைப் புலிகள் 10-10-87 அன்று முதற் தாக்குதலைத் தொடுத்தனர்.

### கொக்குவில் பிரம்படிப் படுகொலை!

ஜே.ஆர் ஜெயவர்த்தனா ஆட்சிக்காலத்தில் யாழ் மாவட்டத்தில் கொக்குவில் பிரம்படிப் பகுதியில் 12-10-1987 அன்று தரை இறங்கிய இந்திய இராணுவத்தினர் அப்பகுதியில் இருந்த பொதுமக்களை சுட்டும் யுத்த ராங்கியினால் ஏற்றியும் படுகொலை செய்தனர். இதில் 40 பொதுமக்கள் பலியாகினர்.

### சிங்கள இராணுவத்தின் மீதான முதற் தாக்குதல்:

15-10-1981 அன்று யாழ் காங்கேசன்துறை வீதியில் வைத்து சிறீலங்காத் தரைப்படைமீது முதன் முதலாக விடுதலைப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலின்போது இரு சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

### இணுவில் படுகொலை:

சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் யாழ் மாவட்டத்தின் இணுவில் பகுதியில் இடம்பெயர்ந்து முகாம்களில் இருந்த பொதுமக்கள் 18-10-1995 அன்று சிறீலங்கா இராணுவத்தின் விமானக் குண்டுவீச்சுக்கு அஞ்சி பதுங்கு குழியில் தஞ்சம் அடைந்திருந்த வேளை இராணுவத்தின் புக்காரா விமானம் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 சிறுவர்கள் உட்பட 11 பேர் பதுங்கு குழியிலேயே பலியாகினர்.

### யாழ் போதனா வைத்தியசாலைப் படுகொலை:

ஜே. ஆர் ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையில் இருந்த வைத்தியர்கள், தாதிமார்கள், பணியாளர்கள் மற்றும் நோயாளர்கள் இந்திய அமைதிப்படையால் 1987-10-21 அன்று கண்மூடித்தனமாக சுடப்பட்டனர். இதில் 21 தமிழ்ப் பொதுமக்கள் பலியாகினர். 55 பேர் படுகாயம் அடைந்தனர்.

### இனவெறிப் படுகொலை!

சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் தென்னிலங்கையின் பண்டாரவளையில் அமைந்துள்ள பிந்துநுவேவ தடுப்பு முகாமினுள் 25-10-2000 அன்று கத்தி, பொல்லு துப்பாக்கிகளுடன் நுழைந்த 1500க்கும் மேற்பட்ட சிங்களக் காடையர்கள் புனர்வாழ்வு என்ற பெயரில் முகாமினுள் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களை அடித்தும், வெட்டியும், துப்பாக்கிசூடு நடத்தியும் தாக்கினர். இதில் 29 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 40 இளைஞர்கள் படுகாயம் அடைந்தனர்.

### சாவகச்சேரி படுகொலை:

ஜே. ஆர் ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் யாழ் மாவட்டத்தின் சாவகச்சேரிப் பகுதியில் 28-10-1987 அன்று சிறிய பேருந்து ஒன்றில் பயணம் செய்த பொதுமக்கள் மீது இந்திய இராணுவம் கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூட்டை நடத்தியது, இதில் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் உட்பட 16 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

### அரியாலைப் படுகொலை!

சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் யாழ் மாவட்டத்தின் அரியாலைப்பகுதியில் இராணுவத்தின் தாக்குதல்களுக்கு அஞ்சி இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்த தமிழ்ப் பொதுமக்கள் மீது 26-10-1996 அன்று சிறீலங்கா விமானப்படையின் மிகை ஒலி வேக விமானங்கள் தாக்கியதில் 10 பொதுமக்கள் உயிரிழந்தனர். மேலும் அவர்களின் வீடுகள், உடமைகள் அழிக்கப்பட்டன.

### சாவகச்சேரிப் புதிய சந்தைப் படுகொலை:

ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் யாழ் மாவட்டம் சாவகச்சேரிப் பகுதியில் 27-10-1987 அன்று இந்திய அமைதிப்படையால் யுத்த உலங்குவானூர்திகளில் சாவகச்சேரி சந்தைப் பகுதிக்குச் சென்று அங்கு கூடியிருந்த அப்பாவி தமிழ்மக்கள் மீது தாக்குதல் நடத்தியது. இதில் முப்பதிற்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 75ற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

### ஈழ வரலாறு காணாத யாழ் இடப்பெயர்வு:

30-10-2001 அன்று யாழ் மாவட்டத்தின் வலிகாமப் பகுதியில் இருந்து தென்மராட்சிப் பகுதி நோக்கி பல இலட்சக்கணக்கான மக்கள் சிறீலங்கா இராணுவ ஆக்கிரமிப்பிற்கு அஞ்சி இரவு பகலாக உணவு, நீர் எதுவுமின்றி. தமது உடமைகள் சிலவற்றுடன் இடம்பெயர்ந்தனர். இவ்விடப்பெயர்வு ஈழத்தின் வரலாறு காணாத ஒன்றாகக் கருதப்படுகிறது.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## செப்டெம்பர் 2001

**01-09-2001**

பருத்தித்துறைக் கடற்பரப்பில் ரோந்தில் ஈடுபட்டிருந்த சிறீலங்காக் கடற்படையினரின் நீருந்து விசைப்படகு மீது விடுதலைப் புலிகள் ஊடுருவித்தாக்குதல் நடத்தியதில் இரு சிறீலங்காப் படையினர். கொல்லப்பட்டதுடன் படகும் சேதமடைந்தது.

**06-09-2001**

திருகோணமலை மாவட்டம் மூதூரில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிமனைமீது கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் பணிமனைக் கட்டிடமும், தரித்து நின்ற மோட்டார் வாகனமும் பலத்த சேதமடைந்தன.

**07-09-2001**

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு இராணுவத்தினனும், இரு பொலிசாரும் கொல்லப்பட்டனர் இதைத் தொடர்ந்து பழிவாங்கும் நோக்குடன் சிங்களப் படை பொதுமக்கள் மீது நடத்திய தாக்குதலில் இரு பெண்களும், ஒரு முதியவரும் கொல்லப்பட்டனர்.

**12-09-2001**

மன்னார் அடம்பனில், விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்த பதுங்கியிருந்த சிங்களப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு இராணுவச்சிப்பாய் கொல்லப்பட்டு மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

**13-09-2001**

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பகுதியில் ஐயங்கேணியில் இருந்து மீச்நகரில் உள்ள தமது உறவினர் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரண்டு முஸ்லீம் இளைஞர்கள் சிங்களப் பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

**14-09-2001**

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு யாழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் 38பேர், தம்மீதான விசாரணையை துரிதப்படுத்த வேண்டும் இல்லையேல் தம்மை விடுதலை செய்யவேண்டும் என வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**16-09-2001**

பருத்தித்துறைக் கடற்பரப்பில் இடம்பெற்ற 8மணி நேர பாரிய கடற்சமரில் சிறீலங்காக் கடற்படையினரின் 2 டோராக்களை கடற் புலிகள் தாக்கி மூழ்கடித்தனர். இரண்டு டோராக்கள் பலத்த சேதமடைந்தன. மேலும் 6 டோராக்கள் சிறு சேதமடைந்தன. பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

**16-09-2001**

தமிழ்நாடு சிதம்பரத்தில்‘ ஈழத்தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு’ திரு. பழ. நெடுமாறன் தலைமையில் வெற்றிகரமாக வெகுசிறப்பாக நடந்தேறியது. இம் மாநாட்டில் தமிழ் இன உணர்வாளர்கள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

**23-09-2001**

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நடந்த கடற்சண்டையில் சிறீலங்காக் கடற்படையின் அதிவேக டோரா பீரங்கிக் கலங்கள் கடற்கரும்புலிகளின் தாக்குதலுக்குள்ளாகி பலத்த சேதம் அடைந்தன.

**24-09-2001**

யாழ் இருபாலை குமுகண்டிப் பகுதியில் சிங்களப்படையினர் புதைத்து வைத்திருந்த அமுக்க வெடியில் சிக்கி ஒரு வயதுக் குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பொதுமக்கள் மரணமடைந்தனர்.

**26-09-2001**

வன்னியின் ஒட்டுசுட்டான் பகுதியில் சிங்கள இராணுவத்தின் கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான கேணல் சங்கர் அவர்கள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

**28-09-2001**

திருகோணமலை மூதூர் தங்கநகர்ப் பகுதியில் சிங்கள ஊர்காவல் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த 26 வயதுடைய கனகசுந்தரம் மோகன் என்ற இளைஞர் பலியாகி அவரது நண்பன் சின்னப்பு ஜெயராஜ் (26 வயது) படுகாயமடைந்தார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கரும்புலி லெப்.கேணல் போர்க்

(மாப்பணாபிள்ளை அரசரத்தினம்)

வீரமலர்வு: 11.11.1959

ஓமந்தை

வீரச்சாவு: 23.11. 1990

அணையாததீபம்

> நான் புறப்படுறன்... இதோட மாங்குள முகாம் முடிஞ்சுது

வன்னிப் பிராந்தியத்தின் மையத்தில் அதன் இருதயத்தில் மாங்குளம் சிங்களப்படை முகாம் இருந்தது. அது அங்கு பல அட்டூழியங்களைச் செய்து வந்தது.

இரண்டாவது ஈழப்போர் தொடங்கிய நாட்களிலிருந்து இம்முகாம் விடுதலைப் புலிகளால் முற்றுகையிடப்பட்டிருந்தது. எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ள இப்படை முகாம் மீது தாக்குவதற்கான திட்டம் தயாரிக்கப்படுகிறது. அப்படை முகாம்மீது கரும்புலித் தாக்குதல் நடத்தி அம்முகாமைக் கைப்பற்றுவது என்று தீர்மானிக்கப்படுகிறது. இத்தாக்குதலை தலைமைதங்கி வழிநடத்திய தளபதி பால்ராஜ் சொல்லும்போது. "நாங்கள் இம்முகாம் தாக்குதலுக்கான திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருந்தோம். அப்பொழுது மாங்குளம் முகாமைப்பற்றி எனக்குத்தான் அதிகம் தெரியும். எனவே நான்தான் சக்கை லொறி கொண்டு போகவேணும் என போர்க் சொன்னான்.

அந்தக் குரலில் உறுதி தெரிந்தது... "போர்க் போராட்டத்திற்குப் புதியவரல்ல. அவர் மாவட்டப் பொறுப்பாளராக இருந்தவர். பல தாக்குதல்களை முன் நின்று வழிநடத்தியவர்". தளபதி பால்ராஜ் மேலும் தொடர்கையில்... "1990ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் நாள்... அண்டைக்குத்தான் போர்க் கரும்புலியாய்ப் போனவர். புறப்படமுன் கடைசியாக என்னைக் கட்டியணைச்சு, "நான் புறப்படுறன்... இதோட மாங்குளம் முகாம் முடிஞ்சுது" என்று சொல்லிப்போட்டு, வெடிமருந்து வாகனத்தை ஓட்டிச் சென்றார். கொஞ்ச நேரத்தில் பெரிய வெடிச்சத்தம் கேட்டுது. முகாம் தகர்ந்தது... பிறகு சில மணி நேரத்தில்"முகாம் கைப்பற்றப்பட்டது" என்றார்.

இந்தத் தாக்குதலுக்குச் சில நாட்களுக்கு முன்பு, போர்க் அண்ணை விடுமுறையில் வீட்டுக்குச் சென்றார்.

அவரது கிராமம் சிங்கள எல்லையில் அமைந்துள்ளது. அது வன்னியிலுள்ள சேமமடு. சிறு வயது தொட்டு நடந்து திரிந்த, அக்கிராமத்தில் குளம், வயல், காடு என்று ஒவ்வொன்றையும் சுற்றி ரசித்தார். இல்லை... அவற்றிடமிருந்து விடைபெற்றார். அந்த நாட்களில் ஒரு நாள் பக்கத்து வீட்டுச் சிறுவர்கள் மரத்தடியில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவ்விடத்திற்குச் சென்று ஓர் மரக்குற்றியில் அமர்ந்தவாறு போர்க் அண்ணை கேட்டார்.

"தம்பியவை, மாவீரர்நாள் வருதெல்லோ? தற்செயலா நான் செத்துப்போனா அண்டைக்கு என்ன செய்வியள்?" 'ஏன் சாகப் போறியளோ' பதில் கூறினர் பிள்ளைகள். போர்க் அண்ணையும் சிரித்தபடி "தப்பித்தவறி நான் செத்துப்போனா என்ர நினைவா ஆளுக்கொரு மரம் நட்டு வளவுங்கோ என்ன"

அவர்கள் சிரித்தனர், போர்க் அண்ணையும் சேர்ந்து சிரித்தார். வீட்டிலிருந்து புறப்படும் இறுதி நாள் வந்தது. மதியம் உணவருந்திவிட்டு விறாந்தையில் பாயைப் போட்டுப்படுத்தார். சற்றுத்தள்ளி போர்க் அண்ணையின் அம்மாவும் படுப்பதற்காக, தரையில் பாயைப் போட்டார். "அம்மா இதில வந்து, எனக்குப் பக்கத்தில பாயைப் போடணை" போர்க்கண்ணை கேட்டார். அம்மாவும் வந்து அவரின் தலையை வருடியவாறு இருந்தார்.

அன்று பின்னேரம் அப்பா, அண்ணன்மார், தம்பிமார், அன்புத் தங்கை என்று எல்லோரிடமும் விடைபெறுகிறார்.

கடைசியாக தாயாரிடம் வந்து, "அம்மா எனக்கு உங்கட கையால ஒரு பொட்டு வைச்சுவிடுங்கோவன் ஆசையாயிருக்கு" என சாதாரணமாகக் கேட்டார். ஏதுமறியாத தாயுள்ளம் பிள்ளையின் விருப்பப்படி பொட்டிட்டு மகிழ்ந்தது. இவ்விதம் சிறுபிள்ளை போல் அவர் நடப்பது வழக்கம் எனத் தாயாரும் கூறினார்.

சிரித்தபடியே விடைபெற்றவர், வீட்டுப் படலையில் நின்று ஒரு கணம் திரும்பிப் பார்த்தார். பின் போய்விட்டார்.

சிறிது நேரத்தின் பின்...

"தம்பி சாரத்தையும் ரீசேட்டையும் விட்டுட்டுப் போட்டானணை" என்று போர்க் அண்ணையின் சகோதரன் அவசரமாகக் குரல் கொடுத்தார்.

"பழசாக்கும், அதுதான் விட்டிட்டுப் போட்டான் போலக்கிடக்கு என்றார் அம்மா. இன்று போர்க் அண்ணையின் அம்மா சொல்கின்றார். "தம்பி அவன் அண்டைக்கு வித்தியாசமா நடந்ததை என்னால புரிஞ்சுகொள்ள முடியேல்லை. ஆனால் கரும்புலியாச் செத்த பிறகுதான், அவன் தன் பக்கத்தில படுக்கச்சொன்னது... பொட்டு வைக்கச் சொன்னது... உடுப்புகளை விட்டிட்டுப் போனது... ஏனெண்டு விளங்குது" போர்க் அண்ணனின் அம்மாவின் நா தழுதழுத்தது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




ERIMALAI, C/O T.C.C France, 341, Rue Des Pyrenees, 75020 Paris, FRANCE.
Fax: (33) 1 43 58 11 91 Email: erimalai@erimalai.com

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்